அன்பும் பின்னர் தன்
, கௌரி, சூர்யா என்று
ள விடவே ஒருபடி
. இது ஆச்சரியமான
மேலும் உயர்ந்து சகல
அனைவருக்கும்
கு அருள் செய்ய
ு இக்கடிதத்திற்கு
கிறேன்.

அன்புடன்
ா சுப்பிரமணியம்
14-5-99

காதல் அரங்கம்

1

அந்த மனிதரின் முகத்தில் அருள் கொஞ்சியது. அவர் நடையில் விரைவும், மிருதுத் தன்மையும் கலந்து கிடந்தன, அவர் வேகமாக நடந்தார். ஆனால், மிருதுவாக செயல்பட்டார். அவர் எல்லா இடங்களையும் கூர்ந்து கவனித்தார். கூர்ந்து கவனித்த இடங்களைப் பற்றி ஆழ்ந்து சிந்தித்தார்.

விடியல் வேளையில், காவிரியில் குளித்து, ஜபதபங்கள் முடித்து, இடுப்பில் உலர்ந்த கௌபீனத்தை நறுவிசாகக் கட்டி, அதன் மீது உலர்ந்த வேஷ்டியை இறுக்கக் கட்டி, தோள்மீது இன்னொரு காவித்துணியைப் போர்த்திக் கொண்டு இடது கையில் மெல்லிய மூங்கில் குச்சிகளில் காவிக் கொடியை தரித்து, உடம்பில் பன்னிரண்டு திரு மண்கள் மிளிர, முகத்தில் புன்னகை ஒட்டிக் கொண்டிருக்க, கண்கள் சிரிக்க, புருவம் சிரிக்க, உதடுகள் சிரிக்க, முகவாய் சுழி சிரிக்க, கன்னத்தில் மேடு சிரிக்க, காதுகள் விடைத்து சிரிக்க, மழித்த உச்சந்தலை விளக்கொளியில் பளபளத்து சிரிக்க... மேனியின் அழகு சுகந்த வாசனையாய் சிரிக்க... அழகராய் ஸ்ரீரங்கத்து மூன்றாம் பிராகாரம் சுற்றினார்.

இளமை தாண்டி, மத்திம வயது கடந்து மெல்ல கிழப்பருவத்திற்கு அடியெடுத்து வைத்திருந்தாலும், பிரம்மச்சரியத்தின் காரணமாகவும், யோகப்பயிற்சிகள் காரணமாகவும், பிராணாயாமத்தின் காரணமாகவும், இதை பக்தியின் காரணமாகவும், இடைவிடாது மனதில் ததும்பும் கருணையின் காரணமாகவும், அவர் உடம்பு உறுதியாக இருந்தது, அவர் பார்வை கூர்மையாக இருந்தது. அவர் செவிப்புலன்கள் மழுங்காது தெளிவாக இருந்தன. அவர் உடம்புக்குள் மிகப்பெரிய சக்தியொன்று சக்கரம் போல் சுழன்று லேசாய் வெளிப்பட்டுக் கொண்டிருந்தது. சக்கரத்தின் மையம் மிக கனமாக இருந்தது. அந்த சக்கரத்தின் வலிவு மனிதர்களுடன் பார்வைக்கு தெரியவில்லை. ஆனால், நெருப்பு இருக்குமிடத்தில் வெளிச்சம் இருப்பது போல உடம்பிலே ஒரு மினுமினுப்பு ஏற்பட்டு அவருக்கு அழகை கொடுத்துக் கொண்டிருந்தது. அவரை, நன்கு அறிந்திருந்தவர்களே, அவருக்குள் இருந்த சக்கரத்தின் சக்தியை அறிந்திருந்தார்கள்.

அவர் சாதாரண மனிதராக நடமாடினாலும் ஒரு நெருப்புச் சக்கரத்தின் வலிமையுடையவர் என்று தெரிந்து வைத்திருந்தார்கள்.

அவரால் ஒரு மதில் சுவரை ஒற்றைக் கையால் உடைத்து சாய்த்துவிட முடியுமென்று அவர்கள் நம்பினார்கள். ஆனால், ஒரு முறையேனும் தன் சக்தியை வெளிப்படுத்தியதில்லை. அவர் தன் சக்தியை சேமித்து வைத்திருந்தார். தேவைப்பட்டபோது தேவைப்பட்டவர்க்கு கொடுத்து உதவினார். அவருடைய சக்தி ஒரு திகழ் சக்கரமாக அவருக்குள் பொதிந்து, அவருக்குள்ளேயே வளர்ந்து வந்தது. இடையறாது சுழன்று கொண்டிருந்தது. அவரை நன்கு உணர்ந்தவர்கள் உற்று பார்க்கிறபோது ஒரு

திகழ் சக்கரம் நகர்ந்து வருவது போல்தான் உணர்ந்தார்கள். ஒரு மெல்லிய வெம்மையை அவர் அருகே இருக்கும்போது அனுபவித்தார்கள். அவரை நமஸ்கரித்தபோது அவர் பார்வைபட்ட முதுகின் மீது அந்த வெம்மை படர்வதை கண்டு கொண்டார்கள்.

அவருக்கு அருகே உட்கார்ந்து வாய்பொத்தி பேசுகிற போது தங்களுக்கும் அவருக்கும் இடையே பரபரப்பான வெப்பம் ஒன்று பரந்து கிடந்ததை கண்டு கொண்டார்கள். அவருக்கு பல பேர்கள் இருந்தன, ஆனாலும் அவரை 'திகழ் சக்கரம்' என்றுதான் அவர்கள் உணர்ந்திருந்தார்கள். அந்த சக்கரத்தின் அழகை தினமும் அள்ளியள்ளி பருகி வந்தார்கள். அந்த சக்கரத்தின் கூர்மையை கேள்வி கேட்டு அனுபவித்து வந்தார்கள். அந்த சக்கரத்தின் செயல்களைப் புரிந்து வாய்க்குள்ளாகவே சிரித்து ஆமோதித்து வந்தார்கள். அந்த சக்கரம் 'நான் சற்று தனியே உலாவிவிட்டு வருகிறேன்' என்று கிளம்பியபோது 'சரி, இது எங்கோ முக்கியமான விஷயமாய் பயணப்பட்டுவிட்டது' என்று தெரிந்து கொண்டு விட்டார்கள். புன்னகையோடு நகர்ந்து கொண்டார்கள்.

'யாராவது ஒருவர் கூட வரலாமா?' என்று கேட்டதற்கு அந்த திகழ் சக்கரம் மெலிதாய் சிரித்தது. அந்த சிரிப்பிற்கு 'எதற்கு, நான் தனியே போகிறேனே' என்று அர்த்தம். மெல்ல நான்கடி நடந்து, திரும்பிப் பார்த்தது. அவர் கூட இருந்தவர்கள் எழுந்து நின்று 'வரட்டுமா?' என்பதுபோல் கைகட்டினார்கள். 'வேண்டாம் என்று சொல்லத்தான் திரும்பினேன்' என்பதுபோல் மறுபடியும் சிரித்தது. அந்த சிரிப்பை உள்வாங்கி அவருடைய சீடர்கள் நான்கு பேரும் மறுபடியும் சிரித்தார்கள். பல நேரங்களில், அவர்கள் பேசிக் கொள்வதேயில்லை. மெல்லிய சிரிப்பை உகுத்துக்

கொள்வதன் மூலம் பல விஷயங்களை அவர்கள் பகிர்ந்து கொண்டார்கள்.

'சரி. இன்றைக்கு ஏதோ வேடிக்கை செய்யப் போகிறீர். செய்யும் நாங்களும் காத்திருக்கிறோம்' என்பது போல் கைகட்டி தலைகுனிந்து கொண்டார்கள். மிருதுவாகவும், விரைவாகவும் மூன்றாம் பிராகாரத்தை கற்றத் துவங்கினார்.

'ரங்கநாதா, நான் ஏதோ வேடிக்கை செய்யப் போவதாய் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். நான் எந்த வேடிக்கையும் செய்யப் போவதில்லை ரங்கநாதா, இங்கே, நீ நடத்திய வேடிக்கைகளை தனியே உட்கார்ந்து யோசிக்கப் போகிறேன். இவர்கள் அருகில் இருந்தால் யோசிப்பு சில சமயம் இணைப்பு விட்டு விடுகிறது. நீ என்ன வேடிக்கை யெல்லாம் செய்தாய், இந்த உலகத்தை எப்படியெல்லாம் ஆட்டுவித்தாய் என்று நான் யோசனை செய்யப்போகிறேன். யோசிப்பதற்காகவே நான் இந்த மூன்றாம் பிராகாரத்தை தேடி எடுத்துக் கொண்டேன். மெல்ல மெல்ல மூன்றாம் பிராகாரம் சுற்றி வருகிறபோது நீ செய்த அற்புதமான திருவிளையாடல்களை நான் நினைவிற்கு கொண்டு வரப்போகிறேன்.

அவர் கருப்பண்ணசாமியின் சந்நிதி முன் நின்றார். உற்றுப் பார்த்தார். உள்ளுக்குள் நான்கு பெண்பதுமைகள் மரத்தில் செய்யப்பட்டிருந்தன. நடுவில் கருப்பண்ணசாமி நடுநாயகமாய் கையில் பீச்சாங்குழலுடன் நின்றிருந்தார், பெண்கள் மீது பீய்ச்சுவதற்கு தயாராக மெல்லிய புன்முறுவலுடன் காத்திருந்தார். பெண்கள் நீருக்கு பயந்தும் அவரை தழுவிக் கொள்ள பாய்ந்தும் வருகிற பாவனையில் ஆளுயர மரச்சிற்பங்கள் இருந்தன. உள்ளுக்குள்ளிருந்து அடர்த்தியான சாம்பிராணி வாசனை வீசியது. இரண்டு

மூன்று ஆந்தைகள் தென்பட்டன. கருப்பண்ணசாமி இருக்குமிடத்தில் ஆந்தைகள் சந்தோஷமாக உலாவரும். கருப்பண்ணசாமி அங்கே இருக்கிறார் என்பதற்கு இந்த ஆந்தைகளே சாட்சி.

வைணவக் கோயிலில், இந்த இடத்தில், கருப்பண்ணசாமி எங்ஙனம் வந்து உட்கார்ந்திருக்கிறார் என்பது அவருக்கு கேள்வியாக இருந்தது என்றாலும், அதை நகர்த்த அவர் விரும்பவில்லை. வைணவ சம்பிரதாயத்துக்கு உட்பட்ட கோயில் என்றாலும் கருப்பண்ணசாமி அங்கு இருப்பதை அவர் விரும்பினார். அரங்கர் கோயிலை கருப்பண்ணசாமி காப்பார் என்று அவர் நம்பினார். இதே போல விநாயகர் சந்நிதியும், வனதுர்க்கை காவலும் முதலாம் பிராகாரத்தில் அரங்கருக்கு வெகு அருகே இருந்தன. அவையும் முக்கியமானவைதாம்.

இந்தக் கோயிலின் மீது மற்ற மதத்தினர் ஆதிக்கம் ஏற்படப் போகிறது. அப்பொழுது இந்தக் கோயிலும், இதிலுள்ள விக்கிரகங்களும் சிதறாமல் இருக்க இந்த கருப்பண்ணசாமி உதவக்கூடும் என்று அவர் நினைத்துக் கொண்டார். மேற்கொண்டு பிராகாரத்தை கற்றத் துவங்கினார்.

தன் கோவிலுக்கு காவலாய் கருப்பண்ணசாமியை இங்கே கொண்டு வந்து நிறுத்தியிருக்கிறவன் இந்த ரங்கநாதன். மற்றவர்களுக்கு என்ன விதமான அனுபவங் களைக் கொடுத்தான்? அவர் மனம் யோசிக்கத் துவங்கியது.

அந்த ஊர் திருக்கோவிலூர். திருக்கோவிலூரில் நல்ல மழை அடித்துப் பெய்கிற மழை. பூமியை பிளந்து விடுகிற மாதிரி மழை. அது நல்ல பகல் நேரம். ஆனால், இருட்டிக் கொண்டு கனமாய் மூன்று நாட்களாக இடை

விடாது இரவு பகலாக பெய்து கொண்டிருக்கிறது. ஒரு கணம்கூட மழை பின்வாங்கவில்லை. உலகம் மொத்தமும் கபளீகரம் செய்துவிடுகிறேன் என்பது போல், ராட்சசத்தனமாய் மழை இறங்கிக் கொண்டிருக்கிறது. நாலா பக்கமும் வெள்ளக்காடு. மரங்கள் எல்லாம் இனிமேல் ஆட முடியாது என்பது போல் அசந்து நிற்கின்றன.

அந்த மழைக்கு நடுவே ஒரு மனிதன் குனிந்து நடக்கிறான். கொடிய விலங்குகளும் வெளியே வர தயக்கம் காட்டும் அந்த மழையில், உடல் வலுவுள்ள வீரர்களும் வெளியே புறப்பட பயப்படும் இந்த மழையில், எதற்காக நடக்கிறோம் என்று அவருக்கே தெரியவில்லை ஒரு உள்ளுணர்வு, ஒரு மனக்கிளர்ச்சி... நீ பார்க்க வேண்டாமா என்பது போல் அவரை அவசரப்படுத்தியது. அவர் வெளியே போக கால் எடுத்து வைக்க, பகல் இருட்டியது. சற்றுதூரம் நடக்க... சுழற்காற்று வீசியது. தொடர்ந்து தன் கிராமத்தை விட்டு வெளியே வர... இடி இடித்தது. இடி இடித்த திசையை நோக்க... மின்னல் மின்னி... இந்த இடம்தான் என்று அம்புக்குறி போல் காட்டியது. அவர் வேகமாக மின்னிய இடம் நோக்கி நடக்க ஆரம்பித்தார்.

எதையோ தேடி, யாரையோ நோக்கி நடப்பது போல வெகு விரைவாக அவர் நடக்க நடக்க கருமேகங்கள் மேலே சூழ்ந்து கொண்டன. திடீரென மழையாக தரையிறங்கின.

இரண்டு நாட்கள் நடை.

மழை நீரை குடித்தது தவிர, வேறு எந்த உணவும் இல்லை. சுற்றும் முற்றும் பார்த்தார். அவர் வர வேண்டிய இடத்துக்கு வெகு அருகாமையில் வந்துவிட்டதாக அவருடைய உள்ளுணர்வு தெரிவித்தது. ஆனால், எதுவும் கண்ணுக்கு புலப்படவில்லை. மழை எல்லா திசைகளிலும்

மடக்கி வைத்துக் கொண்டிருந்தது. காலுக்கு கீழே ஒரு ஒற்றையடிப் பாதை தெரிந்தது. அந்த ஒற்றையடிப் பாதை எங்கு கொண்டு போய் விடுகிறதோ விடட்டும் என்று நடக்கத் துவங்கினார்.

வயிறு பசித்தது. கண்கள் இருண்டன. உடம்பு குளிரில் நடுங்கியது. நடக்க நடக்க குளிரால் மூட்டுகள் வலித்தன. கால் விரல்களும் நடுவே மண் புகுந்து கொண்டு பெரிய இம்சை கொடுத்தது. பின்னங்கால் வெடிப்பில் சரளைக்கல் குத்தி பெரிய வலியைக் கொடுத்தது. ஆயினும், அவர் பொறுத்துக் கொண்டு நடந்தார். அந்தப் பாதை முடிவில், ஒரு குடிசைக்கு அருகே போய் நிறுத்தியது. அந்தக் குடிசை ஒரு பெரிய நிலப்பரப்புக்கு இடையே தனியாக கட்டப்பட்டது போல் தெரிந்தது. குடிசையின் கதவை தட்டிப் பார்த்தார். கதவு திறக்கிற வழியாக இல்லை.

சுற்றிச்சுற்றி வந்தார். வேறு எந்தப் பக்கமும் வாசல்கள் இல்லை. உள்ளுக்குள் எட்டிப் பார்க்க எந்த வழியும் இல்லை. குடிசை இறுக்கமாய், அழுத்தமாய் கட்டப் பட்டிருந்தது. கதவு... இழுத்துப் பூட்டப்பட்டிருந்தது. குடிசைக்கு வெளியே ஒரு திண்ணை போல, ஒரு இடம் மறைப்பாக கட்டப்பட்டிருந்தது. அந்த இடத்தில் போய் 'நாராயணா' என்று சொல்லி அமர்ந்து கொண்டார். கால் நீட்டினார். படுத்தார். கண்ணயர்ந்தார்.

வெளியே, மழை இன்னும் பலத்து பெய்யத் துவங்கியது.

அந்த இரண்டாம் மனிதருக்கும், ஏதோ ஒரு உள்ளுணர்வு, அவரை வீட்டிலிருந்து வெளியே வரவழைத்தது. அவர் வெளியே கிளம்பியபோது மழை பலக்க பெய்து கொண்டிருந்தது. 'இந்த மழையில் ...

எப்படிப் போவது?' என்று ஒரு கணம் யோசித்தார். யார் வெளியே வா என்று அழைக்கிறார்களோ அவர்களோடு கூட்டிப் போவார்கள் என்று தீர்மானித்தார். மழைக்கு நடுவே சாதாரணமாக அவர் இறங்கி நடந்தார். அவர் நடப்பதுகூட அங்கு, அவரைச் சுற்றியிருந்தவர்களுக்கு தெரியவில்லை. ஒரு காற்று நழுவியது போல, மழைச் சாரலுக்குள் நடுவே புகுந்து வேகமாக நடக்கத் துவங்கினார். குளிர் வாட்டி எடுத்தது. மழை கனத்து சவுக்கால் அடித்தது போல் உடம்பில் வலிக்கப் பெய்தது. நடக்க நடக்க மனசுக்குள் ஏதோ ஒரு மகத்தான விஷயத்தை நோக்கி வேகமாக நடந்துகொண்டிருக்கிறோம் என்று தெரிந்து கொண்டார்.

வெளியே பெய்த மழை அவர் உடம்பின் மேற்பகுதியைத்தான் தாக்கியதே தவிர, உள்ளுக்குள் பொங்கும் குதூகலத்தை ஒன்றும் செய்ய முடியவில்லை. மழைதாக்கி ஏற்படுத்திய வலியை அந்த குதூகலம் வெகு வேகமாய் அலட்சியம் செய்தது. எங்கோ போக வேண்டும் என்ற எண்ணம் மட்டும் வெகு வேகமாய், வெகு பலமாய் இருந்துகொண்டிருந்தது. மிகச்சரியான இடத்தை நோக்கித் தான் போகிறோம் என்ற எண்ணமும் அவருக்கு தெளிவாக தெரிந்தது. ஒரு இடத்தை நோக்கி நகர நகர அவர் குதூகலம் அதிகரித்தது. யாரையோ சந்திக்கப் போகிறோம் என்ற ஆவல் உடம்பிலிருந்து பிய்த்துக் கொண்டு முன்னே ஓடிற்று. அவர் ஒரு புல்வெளியை நெருங்கினார், ஒரு ஒற்றையடிப் பாதையை மிதித்தார். ஒற்றையடிப் பாதையின் மீது நடந்து போனார். எதிரே ஒரு குடிசை தென்பட்டது. குடிசை பலமாக இறுக்கமாக கட்டப்பட்டிருந்தது. குடிசைக்கு வெளியே ஒரு திண்ணை போலும் இடமிருந்தது. அந்த திண்ணைமீது ஓலைசார்பு போடப்பட்டிருந்தது. அதன் ஓலைசார்புக்கு

தீழே ஒருவர் படுத்துக்கிடப்பது தெரிந்தது. அவர் அருகே போனார்.

''மழைக்கு ஒதுங்குவதற்கு எனக்கு இங்கே ஒரு இடம் கிடைக்குமா?'' அவர் மிக பணிவாகக் கேட்டார்.

''வாரும். உள்ளே வாரும். இங்கே ஒருவர் படுத்துக் கொள்ளலாம். இருவர் அமர்ந்து கொள்ளலாம், வாரும்'' என்று உள்ளே படுத்துக் கொண்டவர், தன்னை சுருக்கிக் கொண்டு அமர்ந்தார். அடுத்தவருக்கு இடம் விட்டார். இருவரும் அருகருகே உட்கார்ந்து கொண்டார்கள். ஒருவரை ஒருவர் பார்த்து சிரித்துக் கொண்டார்கள். அந்த சிரிப்பில் மிகுந்த வாத்ஸல்யம் இருந்தது. பேரன்பு நிறைந்து காணப்பட்டது. வெகுநாள் தெரிந்தவர் போல் ஒருவர் மீது ஒருவர் பார்வையை பதிந்து கொண்டார்கள்.

தொடாமலேயே தொடுவது போல பார்த்துக் கொண்டார்கள்

மூன்றாமவர்க்கும் இவ்விதமே தொலை தூரத்தில் யாரையோ பார்க்கப் போகிறோம் என்ற ஆவல் தோன்ற மழையில் இறங்கினார். வேகமாக நடந்தார். அவருக்கு மழையின் சாரல் வழிகாட்டிக் கொண்டு வந்தது. மழை நடந்து போகிற வழியில் அவரும் நடந்தார். காற்று மழையை அலைக்கழித்துக் கொண்டு போயிற்று. அவர் அலைக்கழிந்த மழையைப் பின்தொடர்ந்து நடந்தார். அவருக்கும் ஒற்றையடிப் பாதை தெரிந்தது. புல்வெளி தெரிந்தது. குடிசை தெரிந்தது. அருகில் போனார். புருவத்தின் மேல் கை வைத்து கூர்ந்து கவனித்தார். இரண்டு பேர் மிகுந்த சந்தோஷத்துடன் உட்கார்ந்திருப்பது தெரிந்தது. அவர்களைப் பார்த்ததும் அவருக்கும் பிரேமை அதிகரித்தது, அவருக்கும் நட்பு பெருகியது. வாத்ஸல்யம் அதிகரித்தது.

''இங்கே எனக்கு இடம் கிடைக்குமா?...'' - கை கூப்பினார்.

''வாரும். 'உள்ளே வாரும். இங்கே ஒருவர் படுத்துக் கொள்ள இடமிருக்கிறது. இருவர் அமர்ந்து கொள்ளலாம். மூவர் நிற்கலாம். நன்றாக வாரும்' என்று அவர்கள் எழுந்து நின்றார்கள்.

மூவரும் வெளியே பெய்த மழையிலிருந்து தப்பிக் கொள்ள, சுவருடன் ஒண்டிக் கொண்டார்கள். ஒருவரை ஒருவர் பார்த்து சிரித்தார்கள். கைகூப்பி முகமன் சொன்னார்கள். எந்த ஒரு அறிமுகமும் இல்லாமல் பரஸ்பரம் அவரவர் திருமேனி அழகை பார்த்து வியந்து கொண்டிருந்தார்கள். கண்களைப் பார்த்துப் பார்த்து ஆச்சரியப்பட்டுக்கொண்டிருந்தார்கள். முகங்களின் ஒளியை பரஸ்பரம் கவனித்து சந்தோஷடைந்தார்கள். வெளியே பளிச்சென்று மழை நின்றது. வெயில் தகதகத்து எழுந்தது. தரைமீதும், வானத்தின் மீதும், மரங்கள் மீதும், நீர் நிலைகளின் மீதும் பட்டுத் தெறித்தது. அந்த வெளிச்சக் குவியலுக்கு நடுவே எந்த ஆதாரமும் இல்லாமல் எல்லா இடத்திலும் நிறைத்திருக்கிற பேரருள் சக்தி ஒன்றுகூடி சுடராழி ஏந்திய கையனாய், சங்கம் தரித்த கையனாய், மணிமுடி சூடிய அழகனாய், கௌஸ்துபம் அணிந்த மார்பினனாய், இடக்கையில் கதையும் வலக்கையில் அபயமும் கொடுத்த அன்பனாய், அழகனாய், சிரிப்பவனாய், மிகுந்த வலிவுள்ளவனாய், மிகுந்த கருணையுள்ளவனாய் ஸ்ரீமந் நாராயணனாய் காட்சியளித்தது.

அவர்கள் கைகூப்பினார்கள். கண்ணாரப் பருகினார்கள். கண்ணில் நீர் பெருக ''ஐயனே, ஐயனே, ஐயனே...'' என்று அரற்றினார்கள்.

''உன்னை எங்கள் மூவருக்கும் ஒன்றாகக் காட்டவா இந்த மழையில் எங்களை வரவழைத்தீர்கள். இதற்காகவா இத்தனை தூண்டினாய், இதற்காகவா இங்கு அழைத்தாய் ஐயனே... ஐயனே'' என்று தொடர்ந்து அரற்றினார்கள்.

இறைவன், அந்த சிறிய இடத்துக்குள் நாலாவது ஆளாக நுழைந்தான். இறைவனுக்கு மிக நெருக்கமாய் மிக மிக நெருக்கமாய் அவர்கள் நின்றார்கள். வாய்விட்டு ஆனந்தமாய் சிரித்தார்கள், அடே அடே என்று வியந்தார்கள். நெஞ்சுருகினார்கள். இறைவன் தன் அடியார்களுக்கு மிக நெருக்கமாய் நின்றான் இறைவன் தனக்கு மட்டுமல்லாது, தன்னை நம்பிய அடியவர்களையும் நெருக்கி வைக்கிறான்.

இதுதான்... இதுதான் வைணவத்தின் மிகச் சிறந்த விஷயம். காஞ்சிமா நகர், திருக்கடல் மல்லை, மயிலாப்பூர் என்று எங்கோ மூலைக்கொருவராய் கிடந்தவர்களை உத்வேகப்படுத்தி ஓடிவரச்செய்து ஒருவருக்கொருவர் பெயர் தெரியாது போனாலும் பார்த்த கணத்திலேயே புரிந்து கொண்டு, நெடுங்காலம் தொடர்புடையவர்களாய் ஒருவருக்கொருவர் அனுசரித்துக் கொண்டு, ஒருவராக இருந்தபோது படுத்தும், இருவராக இருந்தபோது உட்கார்ந்தும், மூவராக இருந்தபோது நின்றும் பரஸ்பரம் உதவி செய்து அன்பு செய்து அந்த அன்பின் நிகைப்பில் இறைவனைக் கண்டார்கள்.

மிதமிஞ்சி இருப்பதை வழங்க பெரிய மனது தேவையில்லை. தன் தேவையைச் சுருக்கிக் கொண்டு பிறர்க்கு வழங்குகிறபோதுதான் மனம் லேசாகிறது. உதவிசெய்கிறபோதுதான் உள்ளம் உயர்ந்து நிற்கிறது. இதை அறிந்து கொண்ட அந்த இறைவன் அடியார்கள், இறைவன் தங்களுக்கு அருகே நெருங்கி நிற்பதை உணர்ந்து ஆனந்த

பரவசமாய் கவிதைகள் எழுதினார்கள். அங்கே தமிழ் மொழி மனம் தாண்டி, புத்தி தாண்டி பொழியத் துவங்கியது.

திருக்கடல் மல்லையில் பிறந்த பூதத்தாழ்வார்,

அன்பே தகளியாய், ஆர்வமே நெய்யாக,
இன்பு உருகு சிந்தை இடுதிரியாய் நன்பு உருகி
ஞானச் சுடர் விளக்கு ஏற்றினேன் - நாரணற்கு
ஞானத் தமிழ் புரிந்த நான்

என்று பாடினார்.

காஞ்சி திருவெஃகாவில் பிறந்த பொய்கையாழ்வார்,

வையம் தகளியாய், வார் கடலே நெய்யாக
வெய்ய கதிரோன் விளக்காக செய்ய
சுடர் ஆழியான் அடிக்கே சூட்டினேன் - சொல்மாலை
இடர் ஆழி நீங்குகவே என்று.

என்று நெகிழ்ந்தார்.

மயிலாப்பூரில், ஒரு கிணற்றில் பூத்த மலரில் பிறந்த பேயாழ்வார்,

திருக்கண்டேன் பொன்மேனி கண்டேன் திகழும்
அருக்கண் அணி நிறமும் கண்டேன் செருக்கிளறும்
பொன் ஆழி கண்டேன் புரிச ங்கம் கைக் கண்டேன்
என் ஆழி வண்ணன் பால் இன்று.

என்று பரவசமானார்.

இந்த பூமியில் பிறந்த மனிதர்கள் இறைவனை சங்கு சக்கரதாரியாய் பார்த்திருக்கிறார்கள். இறைவனை கண்ணாரக் காண முடியும் என்பதற்கு இவர்களும் இவர்கள் பாடல்களும் சாட்சி.

அன்பே தகளியாய் என்று யார் சிந்திக்க முடியும். ஒரு மனிதருக்கு இறை அனுபவமில்லாமல் இந்த வாக்கியம் தோன்றுமா.

அன்பே தகளியாய், அகல் விளக்காய் அடடா அன்பு எப்படி அகல் விளக்காகும். இறைவனைக் காணும் ஆர்வம் நெய் புத்தி உருகிய அன்பு என்பது சந்தோஷம், சந்தோஷம் என்பது ஆத்மாவின் குணம்.

மனம், புத்தி, ஆத்மா இவை மூன்றும் சேர்ந்தால் உடனே இறைதரிசனம். நெருக்கியடிக்கிற இறைதரிசனம்.

பார் பார் என்னை நன்றாய் பார் என்கிற இறை தரிசனம்.

இறைவனைப் பற்றி புகழ்ந்து பாடிய இந்தக் கவிதைகளை திரும்பத் திரும்ப நினைத்தபடி அந்த இகழ் சக்கரத்து மனிதர் மூன்றாம் பிராகாரம் சுற்றி முடித்தார்.

இரண்டாம் பிராகாரத்துக்குள் நுழைந்தார்.

பிராகாரம் லேசான இருளோடு குளுமையாக இருந்தது. மெல்ல அடியெடுத்து அரங்கனையே மனதில் நினைத்துக் கொண்டு சுற்றினார். அடாடா... இங்கே, இந்த இடத்தில் திருப்பாணாழ்வாரை தோளில் தூக்கி ஒரு அந்தணர் நடந்தாரல்லவா? அடேங்கப்பா, அரங்கன் என்ன விளையாட்டெல்லாம் இந்த ஸ்ரீரங்கத்தில் நடத்தி யிருக்கிறான்? என்னவெல்லாம் செய்யத் துடித்திருக்கிறான்.

அன்பே... தகளியாக... மறுபடி பாடலில் மனம் பதிந்தது.

அன்பு என்பது ஓர் உணர்வு.

அந்த உணர்வை, எப்படி அகலாக ஆக்குவது? ஒரு உணர்வை எப்படி பொருளாக மாற்றுவது? உணர்வு, உடல் முழுவதும் படர்ந்துவிட்டால், அந்த உடம்பு பொருளாக மாறிவிடுமல்லவா? அன்பு என்பது உணர்வுதான். உடம்பு முழுவதும் ஏற்றி வைத்துவிட்டால், உடம்பில் ஒவ்வொரு

அணுவும் அன்பில் தோய்ந்துவிட்டால், பிறகு உடம்புதானே தகவி? உடம்புதானே அகல்விளக்கு? ஆகவே அன்பே தகவு என்பது உடம்பை அது அன்பாக மாற்றிக் கொள்ளுதல். அதனால்தான் உடம்பு எத்தனை உபத்திரவம் செய்திருந்தாலும், அந்த உடம்பு எழுந்திருந்து இன்னொருவருக்கு உட்கார இடம் கொடுத்திருக்கிறது. உடம்புகள் எழுந்திருக்கின்றன. இன்னொருவருக்கு நிற்க இடம் கொடுத்திருக்கின்றன. தன் துக்கம், தன் குறை எதுவும் தெரியாமல், 'வாரும் வாரும் இங்கு நிற்க இடமிருக்கிறது' என்று அன்போடு அழைக்கிறது. எங்கு தன் அடியார் இன்னொரு அடியாரை அன்புடன் அழைக்கிறாரோ அங்கே இறைவன் தானும் வந்து நின்று கொள்கிறான்.

அடாடா. அடா அடா. என்ன அற்புதம், என்ன அற்புதம், எவ்வளவு தெளிவான ஒரு விஷயம் கற்றுக் கொடுத்து விட்டார்கள், எவ்வளவு அழகாக ஆன்மீகத்தை போதித்து விட்டார்கள். அன்பே தகளியாய்... அன்பே அகல்விளக்காய்... அன்பே உடம்பாய்... என்ன அற்புதம், அந்த திகழ் சக்கரம் திகைத்தபடியே... தனக்குத்தானே பேசியபடியே சூழ்ந்து அந்த பாசுரங்களில் லயித்தபடியே... இரண்டாம் சுற்று சுற்றினார். மறுபடி திருப்பாணாழ்வாரிடம் மனசு போயிற்று.

திருப்பாணரை இங்கே தலையில் தூக்கி நடந்திருக்கிறார்கள். பாணர் யார்? நான்காவது வருணத்தினர். பாட்டுப் பாடுபவர். வீடு வீடாகப் போய் யாழ்மீட்டி பாட்டுப்பாடி காசு சம்பாதிப்பவர். அரசசபையில் நின்று அரசனை புகழ்ந்து பாடுபவர், பெரிய மனிதர்களை சந்தித்தால் அவர்களை புகழ்ந்து பாடி காசு சம்பாதிப்பவர். பாணர் என்ன செய்திருக்கிறார். அரங்கனை நினைத்து பாடியிருக்கிறார். உருகி உருகி பாடியிருக்கிறார். பெரிய மனிதர்களையோ,

அரசர்களையோ, தாசிகளையோ மதிக்காமல் அரங்கரை நினைத்து, காவிரிக்கு வந்து, படித்துறையில் அமர்ந்து, மடியில் யாழ் வைத்து, யாழின் ஓசையோடு குரலோசையைக் கலந்து அரங்கனைப் பாடியிருக்கிறார். அரங்கனைப் பாடிய படியே, கால்நீட்டி படுத்து தூங்கியிருக்கிறார். விடிகாலை குளிர். கண்சொருகி, நடந்த களைப்பு தீர, பாடிய அலுப்பு தீர அந்த உடம்பு தூங்கியிருக்கிறது. படி இறங்கிய அந்தணர் காவிரிக்குப் போக முடியாமல் குறுக்கே யாரோ படுத்திருக்கிறார்கள் என்பதால்,

''ஏய் ... எழுந்திரு'' என்று அதட்டியிருக்கிறார். உடம்பு அலுத்து கிடந்த பாணனால் எழுந்திருக்க முடியவில்லை.

''ஏய்... எழுந்திரு'' என்று மறுபடியும் சத்தம் போட்டிருக்கிறார், அந்த அந்தணர். அதற்கும் பாணர் அசைந்து கொடுக்கவில்லை. அத்தனை அலுப்பு பாவம். கீழே கிடந்த கருங்கல்லை எடுத்து குறிபார்த்து,

''ஏய்... என்ன தூக்கம் உனக்கு? வழியில் படுத்துக் கொண்டு...'' என்று ஓங்கி கல்லால் அடித்திருக்கிறார். கல் தலையில் பட்டு எகிறியிருக்கிறது. தூக்கத்தில் கல் தாக்கியதில் வலியில் துடித்து, மிரண்டு, எழுந்து யாழை இறுகப் பற்றிக் கொண்டு பாணர் துள்ளி எழுந்திருக்கிறார்.

''என்ன தூக்கமிது? ஏன் வழியில் படுத்துக் கொண்டிருக்கிறாய்?'' அந்தணர் அரட்ட; சுயநினைவு வந்து.

''சாமி மன்னிக்க வேண்டும்... மன்னிக்க வேண்டும்... மன்னிக்க வேண்டும்... பாடிக்கொண்டிருந்தேன். அயர்ந்து தூங்கிவிட்டேன். இது படுக்கும் இடமல்ல என்று எனக்கு தெரியும் என்றாலும் என்னை மீறி என் உடம்பு சதி செய்து விட்டது. தூக்கம் வந்துவிட்டது. தயவுசெய்து மன்னித்து

விடுங்கள்'' என்று கைகூப்பி தொழுதபடி நெற்றியில் வழிந்த ரத்தத்தைக்கூட துடைக்காமல்... ஓரமாகப் போய் அந்தணனுக்கு வழிவிட்டு நின்றார்.

உயர்ந்த ஜாதி அந்தணர் இறங்கி... ஜபதபங்கள் முடித்து குடத்தில் நீர் மொண்டு... தோளில் வைத்து அரங்கனை நோக்கி நடந்திருக்கிறார். கோயிலுக்குள் நுழைந்திருக்கிறார். மூலஸ்தான இடத்துக்குப் போய் கதவு திறந்து அரங்கனுக்கு நீருற்றி அபிஷேகம் செய்யலாம் என்று நினைத்திருக்கிறார். இழுத்தால் கதவு திறக்கவில்லை. நீர்க்குடத்தை இறக்கி வைத்துவிட்டு இரண்டு கைகளாலும் அசைத்துப் பார்த்தார். கதவு நகரவில்லை. முழுபலத்தோடு கதவு திறக்க முயற்சி செய்தார். முடியவில்லை. ஆட்களை துணைக்கு கூப்பிட்டார். இரண்டு ஆட்கள் வந்து அசைத்து பார்த்தார்கள். கதவு அசைந்து கொடுக்கவில்லை. வாலிபமான இரண்டு பிராமணப் பையன்களை உரக்கக் குரல் கொடுத்து அருகே வரச்சொல்லி கதவை இழுக்கச் சொன்னார். இம்மிகூட கதவு நகரவில்லை. யாராவது உள்ளே தாழ் போட்டுக் கொண்டிருப்பார்களோ...

''யார் உள்ளே?'' குரல் கொடுத்தார். உள்ளிருந்து எந்த பதிலும் வரவில்லை. உள்ளே தாழிட்டது போலவும் தெரியவில்லை. ஆட்கள் சூழ்ந்தார்கள். கோவிலுக்கு வரவேண்டியவர்கள் வந்தார்கள். கும்பல் கூடியது. கோவில் கதவு திறக்கப்படவில்லை என்றதும் ஆச்சரியப்பட்டது. எல்லோரும் கர்ப்பகிருகத்துக்கு வந்து கதவுகளை பலம் கொண்ட மட்டும் இழுக்க முயற்சித்தார்கள். முடியவில்லை.

ஏன் கதவு திறக்கவில்லை?

எல்லோருக்கும் செய்தி போயிற்று. எல்லோரும் சுற்றி நின்று வியந்தார்கள். உள்ளே பூட்டப்பட முடியாத கதவு.

ஆனால், ஒரு நூல்கூட நகராதது எப்படி என்று ஆச்சரியப் பட்டார்கள்.

கைகூப்பி, கண்களில் நீர் வழிய, ''அரங்கா, நான் என்ன தவறு செய்தேன்?'' அந்த அந்தணர் அழத் துவங்கினார்.

''நான் ஏதேனும் பிழை செய்துவிட்டேனா? என்மீது கோபித்துக் கொண்டுதான் கதவு திறக்க மாட்டேன் என்கிறாயா? என் முகத்தைப் பார்க்க வேண்டாம் என்று தான் மூடிக்கொண்டு விட்டாயா? அரங்கா... அரங்கா... நான் பிழையேதும் செய்யவில்லையே அரங்கா? என்ன இது. எதற்கு இந்த விளையாட்டு?''

ஏதோ மனதில் குற்ற உணர்வு திருக அவர் வாய்விட்டு அலறினார்.

''என்னை நீ கல்லால் அடிக்கவில்லையா?... அதனால் நான் கதவு சாத்திக் கொண்டேன்.'' உள்ளேயிருந்து குரல்.

''கல்லாலடித்தேனா? உங்களையா? ரங்கநாதா? நான் உங்களைப் போய் ஏன் கல்லால் அடிக்கிறேன்?...'' அவர் அரற்றத் துவங்கினார். திடீரென்று விடிகாலை விஷயம் ஞாபகம் வந்தது, காவிரிக்கரைக்கு ஓடினார். மற்றவர்கள் பின்தொடர்ந்தார்கள். அங்கே நின்ற பாணரைப் பார்த்தார். பாணர் நீரில் துணியை நனைத்து நெற்றிக்கு பற்றுப் போட்டுக் கொண்டிருந்தார். மெல்ல மெல்ல ரத்தத்தை துடைத்துக் கொண்டிருந்தார். சாஷ்டாங்கமாய் பாணரின் காலில் அந்த அந்தணர் விழுந்தார். இரண்டு கைகளாலும் கால்களைப் பிடித்துக் கொண்டார். நெற்றியை பாதத்தில் பதிய வைத்தார்.

''தயவுசெய்து வாருங்கள். தயவுசெய்து வாருங்கள். நான் தவறு செய்து விட்டேன். நான் தவறு செய்துவிட்டேன்.

கல்லெறிந்து உங்களை துன்பப்படுத்திவிட்டேன் நீங்கள் அரங்கனின் நண்பர். இல்லை அரங்கனின் அம்சம். அரங்கனைப் பாடுபவர். அரங்கன் உங்கள் மீது கல் எறிந்ததற்காக என் மீது கோபித்துக் கொண்டிருக்கிறார். என் மீது ஏன் கல் எறிந்தாய் என்று என்னை பார்க்க பிடிக்காமல் கதவை மூடிக் கொண்டிருக்கிறார். தயவுசெய்து வாருங்கள். தயவுசெய்து வாருங்கள். நான் தூக்கிப் போகிறேன். வாருங்கள்.'' பாணர் மறுக்க மறுக்க, அந்தணர் பாணரைத் தூக்கி தோளில் வைத்துக் கொண்டு தெரு முழுக்க வந்தார்.

மூன்று பிராகாரங்களையும் சுற்றினார். அரங்கர் முன்னே இறக்கி வைத்து ''ஐயா, மன்னித்துக் கொள்ளுங்கள். இதோ உங்களை உங்களிடத்தே சேர்த்துவிட்டேன்'' என்று சாஷ்டாங்கமாய் நமஸ்கரித்தார்.

கதவு தானாக திறந்தது.

பாணர் நான்காவது வருணத்தவர். கோவிலுக்குள் நுழையக்கூடாதவர். எட்டிக்கூட பார்க்க அதிகாரம் இல்லாதவர். கால் வைக்கக்கூட தகுதி இல்லாதவர். ஒரு அந்தணரின் தோளேறி ஸ்ரீரங்கத்தில் மூன்று பிராகாரங்களையும் வலம் வந்திருக்கிறார். அட அடா -அட அடா! என்ன அற்புதமான ஒரு விஷயம். இந்த விஷயம் என்ன சொல்கிறது? இந்த இந்து மதத்தில் ஜாதி இல்லை. தெய்வ சந்நிதானத்து முன்னால் ஜாதி இல்லை. ஜாதி உயர்வு என்பது மனிதரிடத் தில் அறவே இல்லை. இங்கே தெய்வம், தெய்வ பக்தி இரண்டும்தான் முக்கியம், தெய்வ பக்தி கொண்டவர்கள் தான் உயர்ந்த ஜாதி. தெய்வ பக்தி இல்லாதவர்கள் தாழ்ந்த ஜாதி. எனவே பாணருக்கு அந்தணரின் தோள் வாகனமாகி விட்டது.

திருப்பாணாழ்வார் மெல்ல மந்திரத்திற்கு கட்டுப் பட்டவர் போல முதன் முறையாய் அரங்கநாதரைப் பார்த்த

அதிசயத்தில் உள்ளே நுழைந்தார். அந்த கருவறைக்குள் எல்லாரும் நுழைய முடியுமா? தீட்சைபெற்ற அந்தணர்கள் மட்டுமே, வைணவர்கள் மட்டுமே நுழையும் அந்த இடத்தில் வேறு எவரேனும் கால் வைக்க முடியுமா? வைணவர்களில் ஒரு பகுதியினர் மட்டுமே உள்ளே நுழைய அதிகாரம் கொடுத்த அந்த இடத்தில் வேறு யாரும் போய் பார்க்க முடியுமா? உள்ளே போய் அந்தணர் தாண்டி, அரங்கனை அருகே போய் பார்த்து கை கூப்பி நின்று, கால் பக்கம் போய் நெற்றியில் தலை வைத்து இரண்டு பாதங்களையும் நெஞ்சாரத் தழுவிக் கொண்டு அந்த தங்கக் கொலுசுகளை கண்களில் ஒற்றிக் கொண்டு அரங்கனின் ஒவ்வொரு கால் விரலாய் தடவி நெற்றியில் வைத்துக் கொண்டு, நெற்றியில் உள்ளங்காலை தேய்த்துக் கொண்டு மெல்ல நகர்ந்து முழங்காலை வருடி, முழங்காலில் கன்னம் வைத்து பிறகு தொடை முழுவதும் தடவி, வயிற்றில் முகம் வைத்து நெஞ்சார வயிற்றைத் தடவிக்கொண்டு பிறகு அரங்கனை திருமார்பு முழுவதும் தழுவிப்படர்ந்து ''ஐயா, அரங்கா, அரங்கா... அரங்கா' என்று அரற்றி முகத்தை கையிலேந்தி உதடு தடவி, நெற்றி தடவி, மூக்கு தடவி, கண்கள் தடவி, மணிமகுடம் தடவி, புஜங்கள் தடவி, கைவளைகள் தடவி, செங்கோல் தடவி, செங்கோல் அருகே இருக்கின்ற கை தடவி, அரங்கன் கைகளின் விரல்கள் தடவி மறுபடியும் போய் கால்கள் தடவி கைகூப்பி மறுபடியும் ''அரங்கா... அரங்கா... அரங்கா'' என்று அந்த திருப்பாணாழ்வார், கோவிலுக்குள் நிற்கக்கூட தகுதியில்லாத நான்காவது வருணத்தினர் கை கூப்பி அழ, அரங்கன் அவரை தன்னுள் அழைத்துக் கொண்டார். கருவறைக்குள் நுழைந்த திருப்பாணாழ்வார் காணாமல் போனார். இறைவனோடு கரைந்து போனார், திகழ்சக்கரத்தார் திகைத்து கோயில்

தொன்ய மூலையில் அமர்ந்தார். அங்கிருந்து விமானத்தை பார்த்தார். என்ன அற்புதம். என்ன அற்புதமான லீலை. பாட்டுப்பாடுகிற பாணரை தனக்குள் கரைத்துக் கொண்டார். இதேபோல ஒரு பெண்ணை, வயதுக்கு வந்த ஒரு பெண்ணை, எந்த தவமும் செய்யாத ஒரு பெண்ணை, ஹோமங்களுக்கும், யாகங்களுக்கும் தகுதியில்லாத ஒரு பெண்பிறவியை தனக்குள் இந்த அரங்கன் ஈர்த்துக் கொண்டிருக்கிறான். ஆண்டாள் என்று அவளுக்குப் பெயர். பக்தியில் இறைவனை கட்டி போட்டிருக்கிறாள். அவனைத் தவிர வேறு எவரும் என்னைத் தொடமுடியாது என்று சீறியிருக்கிறாள். 'அவிப்பொருளை நாய் முகர்ந்து பார்ப்பதைப் போல என்னை எவரேனும் திருமணம் செய்து கொள்ளக் கூடுமோ. ஆமெனின், நான் உயிரோடு இருக்கமாட்டேன் மன்மதரே' என்று சூளுரைத்திருக்கிறாள். அந்த அன்பு பார்த்துவிட்டு அரங்கர் நெகிழ்ந்து ஆண்டாளை இதே கருவறையில் அவரோடு ஈர்த்துக் கொண்டிருக்கிறார்.

''அரங்கா... என் அரங்கா! எத்தனை லீலையடா. எத்தனை அன்படா உங்களுக்கு? எத்தனை அன்படா உன் அடியார்க்கு? அரங்கா! என்னையும் அவ்விதம் அழைத்துக் கொள்வாயா? என் அரங்கா, என்னையும் உன் திருவடியில் சேர்த்து கரைத்துக் கொள்வாயா? என் அரங்கா, எப்போது அழைத்துக் கொள்வாய்? எங்கு அழைத்துக் கொள்வாய்? அரங்கா! என்னை இப்படியே நடமாட விட்டுவிடுவாயா? உனக்குள் என்னை சேர்த்துக்கொள்ள மாட்டாயா? எனக்குள் உள்ள குறைகளை நீக்கி, அரங்கா என்னை உயர்வான ஓர் இடத்திற்கு அழைத்துப் போக மாட்டாயா?'' மெல்ல முதல் பிராகாரத்திற்கு அருகே போய், கருவறைக்குள் நின்று கைகூப்பி, கால்பக்கம் போய், நீண்டு படுத்துக் கொண்டிருக்கும் அரங்கனின் கால்மாட்டில் நின்று

அங்கிருந்தபடியே அவர் திருமுகத்தைப் பார்த்து, தங்கம் போல் பளபளக்கும் கண்களைப் பார்த்து அமைதியாய் கைகூப்பினார். உனக்கு வேறு வேலைகள் இருக்கின்றனவே. உள்ளே குரல் கேட்டது.

அரங்கன் மெல்ல சிரிப்பது காதில் விழுந்தது. கை கூப்பினார்.

''இந்தக் கதைகள் எல்லாம் இன்று ஏன் தோன்றுகிறது தெரியுமா?'' அரங்கன் கேட்டான்.

''தெரியவில்லையே.'' அந்த திகழ் சக்கரத்தார் தலையாட்டினார்.

''உனக்கு வேறு வேலைகள் இருக்கின்றன. அந்த வேலைகளை ஞாபகப்படுத்தவே இந்த கதைகள் உனக்குள் ஸ்பூரிக்கின்றன. திருப்பாணாழ்வாரை பற்றி யோசித்ததற்கு அர்த்தமில்லாமல் போகவில்லை. நீ நினைத்தது சரி. மனிதருள் ஜாதியில்லை. ஜாதியில் உயர்வு தாழ்வு இல்லை. என்னை நெருங்கியவன் மேலோர், நெருங்காதவன் கீழோர், ஆகவே எந்தக் காரணம் கொண்டும் ஜாதியின் பெயரைச் சொல்லி மக்களை பிளவுபடுத்தி விடாதே.''

''இல்லை, இல்லை'' என்று திகழ் சக்கரத்தார் தலையசைத்தார்.

''என்னை நெருங்கி வந்தால் நானும் நெருங்கி நிற்பேன்.'' என்று இறைவன் மறுபடியும் குரல் கொடுத்தான்.

அவர் சரியென்று தலையசைத்தார். மெல்ல கருவறை விட்டு வெளியே வந்தார். கைகூப்பி நின்றார். கண்குளிர அரங்கனை தரிசித்தார்.

வெளியே இரண்டாம் பிராகாரம் விட்டு கிளி மண்டபத்திற்குப் போய் அங்கிருந்து விமானத்திலுள்ள உருவத்தை வணங்கினார். அந்த பரகால வாசுதேவரை

மனதார தொழுதார். கிருஷ்ணன் சந்நிதி தாண்டி இரண்டு யானைகள் இருக்கும் படிகளுக்கு இடையே இறங்கி, பிராகாரம் சுற்றி, கொடிமரத்திற்கு அருகேயுள்ள மண்டபத்தில் அமர்ந்து கொண்டார்.

நன்கு விடிந்தது. அவரை மண்டபத்தில் பார்த்து விட்டு சீடர்கள் ஓடிவந்தார்கள். கைகூப்பி நின்றார்கள். காலில் விழுந்து தொழுதார்கள்.

பொதுமக்களும் பார்த்துவிட்டு கைகூப்பினார்கள். விழுந்து வணங்கினார்கள்.

''அடடா! இதென்ன தோற்றப் பொலிவு மிகவும் அற்புதமாக இருக்கிறது. எதையோ கண்டுபிடித்தது போல முகம் முழுவதும் ஒரு குறும்பும், சந்தோஷமும், இவருக்கு பரவியிருக்கின்றனவே என்ன நடந்தது இன்று.''

''என்ன குருவின் மேனி அதீத ஒளியோடு காணப்படுகிறதே.'' சீடர்கள் பேசிக்கொண்டார்கள்.

பொதுமக்கள் ''ஆமாம், ஆமாம்'' என்று ஆமோதித்தார்கள்.

''ஏதேனும் விசேஷமா?'' என்று அவரை அண்டி கேட்டார்கள்.

அவர் சிரித்து, ''ம்... ஏதுமில்லை. அரங்கனோடு வழக்கம் போல பேசிக் கொண்டிருந்தேன்'' என்று சொன்னார்.

அவரை மீண்டும் சீடர்களும், பொதுமக்களும் வணங்கினார்கள். ஜனங்களால் சூழப்பட்ட அந்த ஒளி மிகுந்ததுறவியை ஒரு வடநாட்டு பைராகி உற்றுப்பார்த்து...

''இவர் யார்? இவர் பெயரென்ன?'' என்று விசாரித்தார்.

''இவர் இந்த கோவிலைச் சார்ந்த துறவி. இவர் பெயர் ஸ்ரீராமானுஜர்'' என்று அங்குள்ளோர் பதில் சொன்னார்கள்.

இறைவன் கையிலிருக்கும் சக்கரத்தின் ஒளியோடும் கூர்மையோடும் ராமானுஜர் இயங்குவதை அங்குள்ள சூட்சுமமான மனிதர்கள் கண்டுகொண்டார்கள். அவரைப் பிரியத்துடன் பார்த்தார்கள்.

எல்லோரையும் சுற்றி ஒரு முறை பார்த்த திகழ் சக்கரத்தார் சட்டென்று கூர்மையானார். ஜனங்கள் அவர் முகத்தை ஏறிட்டுப் பார்த்தார்கள். ''வலிமை மிக்க வாலிபர்கள் நமக்குத் தேவைப்படுகிறது. நெடுந்தூரம் பயணம் செய்யும், உடல் உபாதைகளைத் தாங்கவுமான இளைஞர்கள் வைணவத்திற்கு தேவைப்படுகிறது'' என்று சொன்னார்.

சுற்றியுள்ளோர்கள் திகைத்தார்கள். பொதுவாய் தலைசைத்து ''ஆமாம்'' என்று சொன்னார்கள்.

அவர் யாரைப் பொறுத்து அவ்விதம் பேசுகிறார். எதைக் குறித்து இவ்வாறு சொல்கிறார் என்று எவருக்கும் புரியவில்லை.

அவர் சொன்ன நேர்த்தில், திகழ் சக்கரத்தார் நினைத்த மாத்திரத்தில் வெகுதொலைவில் உறையூரில் தன் உடம்பிற்கு எண்ணெய் தடவி, தன் தசைகளை சீராட்டிக் கொண்டிருந்த மல்லன் ஒருவனுக்கு புதுவிதமான ஒரு அனுபவம் ஏற்பட்டது. ஸ்ரீரங்கத்திலிருந்து யாரோ அவனை அழைத்தது போல தோன்றியது. 'என்னைப் பார்க்க வரமாட்டாயா?' என்று உள்ளே ஒரு குரல் கேட்டது. ஆமாம், ஸ்ரீரங்கத்துக்கு போய் வெகு நாட்களாகிவிட்டது. இன்று மாலையே ஸ்ரீரங்கம் போய் ரங்கநாதரை தரிசித்துவிட்டு வந்தால் என்ன? அந்த மல்லன் திடுமென யோசித்தான். அந்த மல்லன் பெயர் வில்லிதாசன்.

ஸ்ரீரங்கம் போக வேண்டுமென்றால் சோழ மன்னரிடம் அனுமதி பெறவேண்டும். சோழ மன்னன் ஆதரவில் மல்லனாக இருப்பதால் சோழ மன்னனின் மந்திரிகளில் எவரிடமேனும் அனுமதி பெறவேண்டும் கங்கைகொண்ட சோழபுரத்திலிருந்து உறையூருக்கு வந்து சோழன் சில மாதங்களாக தங்கியிருக்கிறான். அவனோடே அவனுடைய மந்திரியான நாலூரானும் தங்கியிருக்கிறான், நாலூரானுக்கும், சோழ மன்னனுக்கும் தாம் கடவுளுடைய பிரதிநிதிகள் என்று ஒரு நினைப்பு. தங்களைக் கண்டதும் எல்லோரும் தன் காலில் விழ வேண்டும் என்று ஒரு பேராசை. தங்களுக்குத் தெரியாதது இந்த பூமியில் எதுவுமே இல்லை என்று இறுமாப்பு. எதற்கும் ஒரு எகத்தாளம், எவரையும் கேலி செய்யும் குணம், எடுத்தெறிந்து பேசும் ஒரு திமிர்... அவர்கள் முன்பு போய் நிற்கவே கூச்சமாக இருக்கிறது. அவர்களின் சில செயல்களைக் கவனிக்கும் போது இவர்கள் மனிதர்களே இல்லையோ என்று தோன்றுகிறது. மன்னனும், மந்திரியும் அருகருகே அமர்ந்து வாய்க்கு வந்தபடி எல்லோரையும் கேலி செய்து கொண்டிருப்பார்கள், காமவிகாரமான விஷயங்களைப் பரிமாறிக் கொள்வார்கள். உலகத்திலேயே காம விஷயங்கள் தான் மிக அற்புதமானவை என்பது போல் உளறிக் கொண்டிருப்பார்கள்.

குடந்தையிலும், தஞ்சையிலும், திருச்சிராப்பள்ளியிலும் தாசிகள் அதிகம், 'பாண்டிய நாட்டு எல்லை வரை போய் வருகிறேன்' என்று கங்கை கொண்ட சோழபுரத்திலுள்ள பட்டமகிஷியிடம் சொல்லிவிட்டு, பெரியபடை திரட்டிக் கொண்டு, குடந்தையில் ஆறு மாதமும், தஞ்சையில் மூன்று மாதமும், இப்பொழுது திருச்சிராப்பள்ளியில், உறையூரில் ஐந்து மாதங்களாகவும் தங்கியிருக்கிறார்கள்.

விதவிதமாய் பொழுது போக்கிற்காக அலைகிறார்கள். இவன் அரசனாக பிறந்த ஒரே காரணத்திற்காகவே செல்வந்தனாக இருக்கிறான். ஆனால், ஆட்சியாள தகுதியில்லாதவனாக இருக்கிறான். இங்கே மிகவும் மோசமான விஷயம் என்னவென்றால்... காட்டு விலங்குகளை பிடித்துக் கொண்டு வந்து அவைகளை வெறியேற்றிவிட்டு அவை புணர்வதை கூட்டுக்குள் அமர்ந்து, வேடிக்கை பார்த்துக் கொண்டு இருக்கிறான். பசுவின் மீது காளை பாய்வதை பார்த்து கைகொட்டி சிரிக்கிறான். யானை எப்போது கூடுமென்று காலையிலிருந்து கொட்டடியில் தவம் கிடக்கிறான். இரவு நேரத்தில் பெண்களோடு குடித்துவிட்டு கூத்தடிக்கிறான். பகல் நேரத்தில் மிருகங்கள் செய்வதை தானும் செய்ய முயல்கிறான். இந்த விஷயம் ரகசியம் என்று பல பேரிடம் சொல்லி, அந்த பல பேர் ஊர் முழுவதும் சொல்லி அரசனின் அசிங்கம் எல்லோருக்கும் தெரிந்து வாய்மூடி மௌனியாக இருக்கிறார்கள். வீட்டுப் பெண்களை வெளிப்பக்கம் நடமாட விடாது கேலி பண்ணிக் கொண்டிருக்கிறார்கள். அரசனைக் கண்டு புலவர்களும், பொதுமக்களும் பயந்து போய் கிடக்கிறார்கள்.

மிருகங்களுடைய உணவும் அவைகளின் ஓட்டமும் இடைவிடாத உழைப்பும் வேறு விதமானவை. அந்த உணவும் இடைவிடாத ஓட்டமும் அவைகளுக்கு கடும் வலியைக் கொடுத்திருக்கின்றன. விலங்குகளைப் போலவே இன்பம் துய்க்க வேண்டும் என்று ஆசைப்பட்டால் அது இயலுமா? மனிதர்களுக்கு புத்தி கற்பனை மிகுந்தது. கற்பனை மிகுந்த புத்தி இருப்பதாலேயே நேரடியாக செயல்களைவிட கற்பனையில் மனம் லயித்து அங்கே சுகம் காணத் துவங்கி விடுகிறது. செயல்களில் நாட்டம் குறைகிறது. ஒரு பெண்ணை வர்ணிப்பதாலேயோ, அல்லது

அவளைப் பற்றி கவிதை எழுதுவதாலேயோ அல்லது பெண் சம்பந்தப்பட்ட உறவு விஷயங்களை கவனித்து ஆழ்வதிலேயோ மனம் போய்விட பெண்ணை நேரடியாக அனுபவிக்கும் தன்மை குறைந்து விடுகிறது. வெறும் மோகமாக இல்லாமல் அந்த மோகம் காதல் என்று மாறிவிடுகிறது. ஒரு மிருகங்கள் போல் நிர்வாணமாக திரிந்து வேகமாக புணருகின்ற வெறி தளர்ந்து, பெண்ணின் கைகளை கண்களில் ஒற்றிக் கொள்வது அவள் தலையைத் தடவி உச்சி முகர்வதும், நானிருக்கிறேன் என்று நயம்பட சில வார்த்தைகள் சொல்வதும், அவள் அழகை பாராட்டுவதும், குணத்தை பாராட்டுவதும், பெண்ணை தாய் என்று சொல்லி அவளை உயர்த்தி வைப்பதும், அப்படி உயர்த்தி வைப்பதன் மூலம் அவளை கிளர்ச்சியுறச் செய்வதும், அன்பான வார்த்தைகள் சொல்லி, மெல்லிய அணைப்புகள் கொடுத்து நீர்க்கச் செய்து நீர்த்துப் போன கிளர்ச்சியிலிருந்து கண்மூடி கிறக்கம் பரவ பிறகு கூடல் துவங்குகிறது. ஆணும் பெண்ணும் ஒருவருக்கொருவர் அனுசரித்து வாழ்வதே காதல் என்றாகிறது. அதுவே காமத்தின் இன்னொரு வடிவமாகப் போகிறது. உனக்காக நான் விட்டுக் கொடுப்பேன் என்று பெண்ணும், பெண்ணுக்காக விட்டுக் கொடுப்பேன் என்று ஆணும், பரஸ்பரம் அங்கே சபதமேற்கிறார்கள். அந்த சபதத்தின் இன்னொரு வெளிப்பாடாக காதலில் அல்லது காமத்தில் ஈடுபடுகிறார்கள். இங்கே மிருகம் போன்ற காமம் இல்லை. வெறும் கர்ஜனை இல்லை. உறுமல் இல்லை. நீ நிலவு என்று மிக அழகாக அமைதியாய் அவளை நோக்கி பாடுவதுதான் முக்கியமாக இருக்கிறது. உலகத்தில் வேறு எந்த உயிருக்குமில்லாமல், ஆறாம் அறிவால் கூடல் என்பதை, காமம் என்பதை ஒரு வரையறைக்கு கொண்டு வந்து அதை

மெல்ல மெல்ல சுவைத்து உண்பது மனிதருக்கு வழக்கமாகிவிட்டது. காமம் மாமிசம் உண்பது போல அல்ல, ஒரு வெல்லக்கட்டியை உண்பது போல மிக ருசிகரமானது. ஆனால், அரசன் அதை வெல்லக்கட்டியாய் உண்ணாமல் பச்சை மாமிசமாய் தின்னத் துவங்கினான்.

எந்தக் கெட்டப்பழக்கமும் ஒரு கெடுதலைக் கொண்டு வந்து தரும். அரசனுடைய இந்த அதீத ஆத்திரம், அளவிற்கு மிஞ்சின இன்பம், அவன் கோபத்தை அதிகப் படுத்தியது. ஆத்திரத்தை உச்சத்திற்கு அழைத்துப் போனது. அவன் இடைவிடாத ஒரு ரத்தக் கொதிப்பு உடையவனானான். அதனால் அடிக்கடி பல் கடித்தான்.

ரத்தக் கொதிப்பில் பல் கடிக்க, பற்கள் கடிபட்டு கன்னக் கதுப்புகள் காயமாயின. காயத்தை மறுபடி கடிக்க, ஒரு வலியான சுகம் பரவியது. பல்லால் மறுபடியும் மறுபடியும் கன்னங்களில் காயம் ஏற்பட, அந்த காயம் ஆறாது பல்பட்ட விஷத்தால் அந்த காயத்தின் வேதனை அதிகமாகி அவன் கன்னத்தில் ஒரு இடைவிடாத ரணம் இருந்தது. அந்த ரணத்தில் புழுக்கள் நெளிந்தன. அதை குறைப்பதற்கு, அந்த வலியை நீக்குவதற்கு அவன் அதிகம் மது அருந்தினான். காடியான மதுவை அந்த காயத்தில் போட்டு அந்த புழுக்களைக் கொன்றான். ஆனால், புழுக்கள் செத்தனவே தவிர, காயம் அதிகமாயிற்று. கன்னத்தில் உள்ள ரணம், கழுத்துவரை பரவியது. ஈரமான அந்த இடத்தில் கிருமிகள் அதிகம் நெளிந்தன. அவனுக்கு பெயரே கிருமி கண்டன் என்றாயிற்று. அரசன் குரல் மாறிப் போயிற்று. அவன் அடிக்குரலில் பேசினான். அடிக்கடி வலி தாங்காது துடித்தான். எப்போதும் எரிச்சலில் இருந்தான். ஒரு வேதனையில் இருந்தான். இப்படிப்பட்ட அரசன் நல்ல விஷயங்களை காது கொடுத்து கேட்க முடியுமா? நல்லபடி

நடக்க முடியுமா? நல்ல விஷயங்களில் ஈடுபட முடியுமா? கிருமி கண்டன் ஒரு உபத்திரவமான அரசனாகவே இருந்தான். இவனிடம் அனுமதி பெற்று ஸ்ரீரங்கம் போவதென்பது தவறாகக் கூட முடியும். அனுமதி பெறாமல் போய் வரலாமா? ஆனால், கிருமி கண்டன் உறையூரில் இருக்கும் வரை திரும்ப முடியாதே. கிருமி கண்டன் உறையூரை விட்டு எப்போது போவான் தெரியவில்லை. ஒருவேளை கோபத்தில் நம்மை கைதுசெய்து வரவும் ஆட்கள் அனுப்பலாம். ஸ்ரீரங்கத்திலிருந்து கைப்பிடியாய் கொண்டு வா என்று சொல்லி, கசையால் அடிக்கலாம்.

கிருமி கண்டனிடம் பேசுவதைவிட நாலூரான் என்கிற மந்திரியிடம் பேசலாம். நாலூரான் ஒரு விஷக்கிருமி. அரசனுடைய எல்லா கெடுதலான புத்திக்கும் இந்த மந்திரியே காரணம், அரசாள்பவனுக்கு துணையாய் உள்ளவர் அற்ப புத்தி உடையவராய் இருந்தால் அரசனும் அற்பபுத்தி உடையவனாகவே இருக்கிறான்.

மல்லன் வில்லிதாசன் விடிகாலை எழுந்து விடுவான். காலைக் கடன்களை முடித்துக் கொண்டு சிறிதளவு கஞ்சி குடித்து, வேட்டியை இறுக்கிக் கட்டிக் கொண்டு, சரளைக் கற்கள் நிரம்பிய பாதையில் தஞ்சை நோக்கி கிழக்கு திசையாய் ஓடத் துவங்குவான். ஒரு மல்லன் நன்கு சாப்பிட வேண்டும் அதே சமயம் எடையை அதிகரிக்காமல் வைத்துக் கொள்ள வேண்டும். எடை அதிகரித்தால் துள்ளி துள்ளி சண்டைப்போடுவது கடினம். எடை அதிகரிக்காமல் இருக்க இப்படி ஆறு காத தூரம் ஓடுவதுதான் நல்லது. கிழக்கு நோக்கி ஆறு காதம் ஓடிவிட்டு, திரும்பவும் உறையூர் நோக்கி ஆறு காதம் வேகமாக நடந்து வருவான். இந்த ஓட்டமும் நடையும், வில்லிதாசனின் உடம்பை கல்போல வைத்திருந்தன. வில்லி தாசனுக்கு முப்பது அகவை முடிந்து

விட்டன. இன்னும் திருமணம் செய்து கொள்ளவில்லை. ஜெயிக்க வேண்டிய ஆசையுள்ள மல்லர்கள் திருமணம் செய்து கொள்ள மாட்டார்கள். பெண் போகமும், குடும்ப பாரமும் மல்லனுடைய உடம்பையும், மனத்தையும் கலைத்து விடும். எனவே, திருமணத்தை மல்லர்கள் தள்ளிப்போட்டு விடுவார்கள். முப்பது வயதுக்குப் பின்பும் திருமணம் செய்து கொள்ளாதிருப்பது நல்லதல்ல. இப்பொழுதே உடம்பு மெல்ல பின்வாங்குவதை உணர முடிகிறது. இளைஞர்கள், பயிற்சி பெறும்போது மேலே வந்து மோதினால் வலி அதிகமாயிருக்கிறது. வலியைப் பொறுத்துக் கொள்கிற சுபாவம் வயதாக வயதாகக் குறைந்து போகிறது. பதிலுக்கு அதே வேகத்தில் அடிப்பதற்கு முடியவில்லை. அந்த கோபம் குறைந்துவிடுகிறது.

வில்லிதாசன், மல்லர் வேலையிலிருந்து வெளியேறி விடலாமா என்று யோசித்துக் கொண்டிருந்தான். இன்னும் ஓரிரு வருடம் மல்லனாக இருந்துவிட்டு அரசவையில் சன்மானம் அதிகம் பெற்றுக்கொண்டு அந்த சன்மானத்தில் நல்ல நிலங்கள் வாங்கிப் போட்டு விவசாயியாக மாறிவிடலாம் என்று எண்ணியிருந்தான். தெளிவும் திடமும் உள்ள அரசனாக இருப்பின் இந்த மாதிரி மல்லர்களை ஆதரித்து அவர்களுக்கு பெரும் பணம் கொடுத்தும், இது வரை உழைத்தது போதும். அடுத்த ஆளை தயார் செய்து அனுப்பு என்பார்கள். கிருமிகண்டனுக்கு இவ்வாறெல்லாம் சொல்வதற்குத் தெளிவில்லை. கலைஞர்களை அவன் ஆதரித்ததேயில்லை. தாசிகளுக்குத்தான் காசு போய்க் கொண்டிருந்ததே தவிர, தாசிகளைக் கூட்டி வந்து கொடுக்கும் ஆட்களுக்குத்தான் மாலைகள் அணிவித்தானே தவிர, போர் வீரர்களை, புலவர்களை, அறிஞர்களை ஆதரிக்க அந்த அரசனுக்குத் தெரியவில்லை. எனவே,

மல்லன் தன் வேலையிலிருந்து ஓய்வுபெறுவதைப் பற்றி தீவிரமாய் சிந்திக்க வேண்டியிருந்தது.

யாரிடம் அண்டிப் போய் நிற்பது என்ற கவலை வந்தது.

இப்போதைக்கு, காசுக்குப் பஞ்சமில்லை. பற்பல மல்யுத்தங்களில் ஈடுபட்டு, பொதுமக்கள் கொடுக்கின்ற காசில் வீடும், நிலமும் உறையூருக்கருகே வாங்கிப் போட்டிருக்கிறான். அது தவிர, பானையில் பூமிக்கு அடியே இருநூறு பொற்காசுகள் பதுக்கி வைத்திருக்கிறான். அவசரத்துக்கு உதவுமென்று சில வெள்ளிப் பாளங்களும் வைத்திருக்கிறான். ஏழையில்லை. அதேசமயம் மிகுந்த செல்வந்தனுமில்லை. ஓய்வுபெறும் வயது வந்துவிட்டது. ஆனால், இந்தக் காசை வைத்துக்கொண்டு எண்பது வயதுவரை எப்படி உயிர் வாழ்வது என்பதும் சந்தேகமா யிருக்கிறது வேறு எவரை அண்டி, மிச்சக் காலத்தை நகர்த்துவது என்பது கேள்விக்குறியாய் இருக்கிறது.

வில்லிதாசன், சிந்தனை வயப்பட்டவனாய் எழுந்து உட்கார்ந்தான். விடியற்காலை எழுந்ததால், பிற்பகல் சிறிது நேரம் தூங்கும் பழக்கம் இருந்தது. ஆனால், இன்று தூங்க முடியவில்லை யாரோ, 'ஸ்ரீரங்கத்துக்கு வாயேன், ஸ்ரீரங்கத்துக்கு வாயேன்' என்று அழைத்துக் கொண்டிருந் தார்கள். ஸ்ரீரங்கம் போவதென்றால், அரசனின் அனுமதி பெறவேண்டும் குறைந்தபட்சம் மந்திரியாவது 'போய் சீக்கிரம் வா' என்று உத்தரவிட வேண்டும். என்ன செய்வது என்று தெரியாமல் உறங்கா வில்லிதாசன் கீழே இறங்கி, பானையிலிருந்து நீரெடுத்து முகம் கழுவிக் கொண்டான். வெயில் அதிகமாயிருந்தது. இம்மாதம் ஏதேனும் ஒரு நாளாவது மழை பெய்தால்தான் பூமி வெட்கை தணியும் என்று தோன்றியது. 'ரங்கநாதா... இந்த பூமி குளிர நல்ல

மழையை அனுப்பக்கூடாதா?' தண்ணீரை பூமியில் தெளித்துக் கொண்டே அவன் வேண்டினான். வெகு தொலைவில் லேசாய் இடி முழக்கம் கேட்டது. வாசலில் இரண்டு சோழவீரர்கள் வந்து நின்றார்கள்.

''என்ன வேண்டும்?'' - வில்லிதாசன் படியிறங்கி வந்து கேட்டான் ''மன்னர் இன்று மாலை உன்னை அவைக்கு வரச் சொன்னார்.''

''எதற்காக?''

''நடனமாட. ஒரு மல்லனை எதற்கய்யா கூப்பிடுவார்கள்?'' சோழ வீரர்கள் வாய்விட்டு சிரித்தார்கள். அரசன் மடையனாக இருந்தால், அதிகாரிகள் திமிராக இருப்பார்கள். அதிகாரிகள் திமிராக இருந்தால் அலுவலர்கள் அலட்சியமாக இருப்பார்கள். அலுவலர்கள் அலட்சியமாக இருந்தால், வேலையாட்கள் எகத்தாளம் தான் செய்வார்கள். தலையாடினால் வாலும் ஆடும். கொஞ்சம் அதிகமாகவே ஆடும்.

வில்லிதாசனுக்கு வருத்தமாக இருந்தது. உறையூர் விட்டுப் புறப்படலாம் என்று நினைத்தபோது, அரங்கனைத் தரிசிக்கலாம் என்று நினைத்தபோது இப்படியொரு அரச அழைப்பு வந்துவிட்டது. என்ன செய்ய? மனம் நொந்தான். வேறுவழியில்லை. போய் கைகட்டி நின்றுதான் ஆக வேண்டும். குனிந்து வணங்கித்தான் ஆகவேண்டும். நல்ல உயரமும், ஆஜானுபாகும், திரண்ட தோள்களும், பரந்த மார்பும், உறுதியான தொடைகளும் உள்ள வில்லிதாசன் வணங்கும்போது மற்றவர்களுக்கெல்லாம் லேசாய் ஒரு பயம் கலந்த வியப்பிருக்கும். அந்த பயத்தை மறைத்துக் கொண்டு, ''என்ன?'' என்று அதட்டுவார்கள். ''அழைத் தீர்களாமே, ஐயா'' என்று பணிவுடன் கேட்கும்போது மேலும் மிரட்டுவார்கள்.

அரசன் அவன் தருகிற மான்யம் பற்றியோ, சன்மானம் பற்றியோ பேசமாட்டான். வெறுமே படைவீரர்களுக்கு உடற்பயிற்சி செய்வது எப்படி என்பதை பேசிவிட்டு, ''சரி, சரி, போ'' என்று துரத்திவிடுவான், இன்றும் அப்படித்தான் ஏதாவது இருக்கும். உடற்பயிற்சி செய்ய சோழ வீரர்கள் தயாராகவே இல்லை. வெகு சிலரே முன்வருவார்கள். நூற்றுக்கு தொண்ணூற்றைந்து வீரர்கள் குடிப்பதிலும், குடித்துவிட்டு கும்மாளம் போடுவதிலும், பகல் பொழுது முழுவதும் உறங்குவதிலும் தங்களுடைய நேரத்தை வீணடித்தார்கள். விடிகாலை எழுந்து வெறுங்காலில் சரளைக் கற்களில் நடக்கவேண்டும் என்று சொன்னால், முன்வருகிற வீரர்கள் மிகச்சிலரே. அவர்களையும் இந்த தூங்குமூஞ்சு வீரர்கள் எதையாவது சொல்லித் திசை திருப்பிவிடுவார்கள். எனவே, வீரர்களுக்கு உடற்பயிற்சி அளிப்பது என்கிற விஷயம் வெறும் பேச்சாகத்தான் இன்றுவரை இருந்திருக்கிறது.

போன அமாவாசையின்போது உடற்பயிற்சி செய்ய ஆசைப்பட்டு முன்வந்த ஒரு வீரனை வேறு ஒரு வீரன் தலையைத் தட்டி திசை திருப்பியிருக்கிறான்.

''உனக்கு அறிவில்லையா?'' என்று உடற்பயிற்சி செய்ய வந்தவனை, உடற்பயிற்சி செய்யாதவன் அதட்டினான், ''ஒரு போர்வீரன் உடற்பயிற்சி செய்வதில் என்ன தவறு?'' என்று உடற்பயிற்சி செய்ய வந்தவன் வினவினான், ''அரசருக்கு உடல்நலம் சரியில்லை. அரசர் உடற்பயிற்சி செய்வதில்லை, அரசருக்கு கழுத்தில் புண் இருக்கிறது. எப்பொழுதும் இடைவிடாது ஒரு வலியை கொடுத்துக் கொண்டிருக்கிறது. தினமும் அவர் மருந்துகளை உட்கொண்டுதான் ஜீவித்து வருகிறார். இந்த நிலையில், அரசனுக்கு எதிரே பூரண ஆரோக்கியமாய் முழு பலத்துடன்

ஒரு போர்வீரன் போய் நிற்பது நல்லதா? அது அரசனுக்கு எரிச்சல் கொடுக்காதா? அரசனுக்கு அருகே இருக்கிற நீ எதற்காக கட்டுமஸ்தாக போய் நிற்கிறாய்? அது அரசனைக் கோபப்படுத்தும். அரசனிடம் போய் தழைந்து நில். ஏன் இப்படி நிற்கிறாய் என்று கேட்டால், முதுகுவலி என்று சொல். தலை வலி என்று பேசு. வயிற்றில் சங்கடப் படுத்துகிறது. போக்கு அதிகமாயிருக்கிறது... என்று ஏதாவது கதைவிடு. அரசர் எதிரே ஆரோக்கியமாய் நடிக்காதே. அரசருக்குப் பிடிக்காது. ஆரோக்கியமா யிருப்பவர்களை அரசன் தொலை தூர வேலைக்கு அனுப்பி விடுகிறான். இங்கேயே உட்கார்ந்து உறையூரில் உணவு உண்டு, குடித்து, நடனம் பார்ப்பதை விட்டு எதற்கு பாண்டிய தேசத்திற்கும், சோழ தேசத்திற்கும் அல்லாடிக் கொண்டிருக்கிறாய்? கரந்தைக்கும் கங்கை கொண்ட சோழபுரத்திற்கும் ஏன் ஓடிக்கொண்டிருக்கிறாய்? எனவே, எந்தக் காரணம் கொண்டும் அரசன் முன் ஆரோக்கியமாய் நிற்காதே. அரசன் ஆரோக்கியமில்லாதவன். அவன் எப்படியிருக்கிறானோ... அதே போல, நீயும் இருப்பதற்கு முயற்சி செய்.''

வந்த ஒரு வீரனும் திரும்பிப் போனான்.

வில்லிதாசனுக்கு முதலில் சற்று வருத்தமாயிருந்து. தன்னை குரு என்றழைக்க நல்ல சீடர்கள் இல்லையே என்ற வேதனை இருந்தது. 'தலையில் என்ன எழுதியிருக்கிறதோ அதுதானே நஸடபெறும்' என்று சமாதானப்படுத்திக் கொண்டான். அரசன் இறந்தபிறகு, ஒரு பெரிய கும்பல் தன்னிடம் வித்தைகள் கேட்க வரும் என்று எண்ணினான். இப்போது அரசன் அழைக்கிறானே. போக வேண்டுமே என்று கவலைப்பட்டான். மாலை குளித்து நன்கு உடுத்திக்

கொண்டு உடம்பில் சந்தனம் பூசி, நெற்றியில் திருநீறு பூசி அரசருக்கு முன்பு போய் நின்றான்.

இந்த கிருமிகண்ட சோழனுக்கு, திருமண் அணிந்து கொண்டிருப்பவர்களைக் கண்டால் பிடிக்காது. திருநீறு பூசுபவர்களைத்தான் பிடிக்கும். வைணவர்களைக் கண்டால் அவனுக்கு வெறுப்பு. சைவர்களைக் கண்டால் ஒரு சந்தோஷம். சைவர்களால்தான் தன் நோய் குணமாகும் என்று அவனுக்கு நம்பிக்கை. வைணவர்களால்தான் நோய் வந்ததென்று யாரோ சொல்ல... அவனும், அதை நம்பியிருக்கிறான். திருநீறு பூசாமல் எவரேனும் வந்தால் சட்டி சாம்பல் எடுத்து அவன் தலையில் கவிழ்த்துவிடச் சொல்வான். திருநீறு அழிந்துவிட்டது என்று சொன்னாலும் ஒத்துக்கொள்ள மாட்டான். எனவே, அவனை சந்திக்கப் போவதற்கு முன்பு வாசலில் இருக்கும் திருநீறை எடுத்து நெற்றியில் நன்றாக இட்டுக்கொண்டுதான் உள்ளே போவார்கள்.

அழியாத திருநீறோடு உறங்காவில்லிதாசன் சோழனுக்கு எதிரே போய் நின்றார். அரசன் விளகொளியில் அவனை வியப்போடு பார்த்தான்.

''நாலுரா... இங்க வா'' என்று உரக்கக் கூப்பிட்டான். தொலைவில் யாரோடோ பேசிக் கொண்டிருந்த மந்திரி அருகே வர,

''இவர் வில்லிதாசன்தானே?''

''ஆமாம்.''

''முன்னைவிட எப்படி அதிகமாக பருத்து விட்டான்?''

''எல்லாம் நீங்கள் கொடுக்கிற மானியம்.''

''அடேயப்பா. இப்படி பருத்துக் கொண்டே போனால் எப்படி முடிவான்.''

''பட்டென்று ஒரு நாள் வெடித்து விடுவான்.''

நாலுரான் சொல்ல, கிருமிகண்ட சோழன் வாய்விட்டு சிரித்தான்.

''வில்லிதாசா, நன்கு சாப்பிடுகிறாயா?''

''சாப்பிடுகிறேன் அரசே!''

''மாமிசம் தினமும் சாப்பிடுகிறாயா?''

''தினமும் சாப்பிடுகிறேன் அரசே!''

''கோழிகள், புறாக்கள் போன்ற பறவைகளையும் சாப்பிடுகிறாயா?''

''நன்கு சாப்பிடுகிறேன் அரசே...''

''முட்டைகள் குடிக்கிறாயா?...''

''தினமும் குடிக்கிறேன் அரசே...''

''ஒரு நாளைக்கு எத்தனை படி சோறு உண்பாய்?''

''ஒரு அரைப்படி சோறு சாப்பிடுகிறேன் அரசே...''

''அவ்வளவுதானா?''

''அவ்வளவுதான் அரசே! மாமிசப் பதார்த்தங்களை அதிகப்படுத்திக் கொண்டு, காய்கறிகளை அதிகப்படுத்திக் கொண்டு, அரிசியைக் குறைத்துக் கொண்டு விட்டேன்.'

''ஏன்... ஏன் அப்படி?''

''மற்றவைகளில் உள்ள போஷாக்கு... அரிசியில் அதிகம் இல்லை. அரிசி அதிகம் சாப்பிட்டால் தொப்பை விழுந்து விடுகிறது. தொப்பையை குறைப்பது பிரம்மபிரயத்தனமாக இருக்கிறது. எனவே, மாமிசங்களும், காய்கறிகளும் கலந்து சாப்பிடுகிறேன். அரிசியைக் குறைத்து விடுகிறேன்.''

''மாமிசத்தில் என்ன பக்குவம்?''

''அநேகமாக... வதக்கி, நெருப்பில் வாட்டி, சற்று எண்ணெயில் பொரித்து சாப்பிடுகிறேன்.''

''அடா, அடா! பறவை மாமிசங்களை நெருப்பில் வாட்டி, பின் எண்ணெயில் பொரித்து சாப்பிட்டால் என்ன அற்புதமாக இருக்கும்...'' அரசன் உருக்கக் கூவினான்.

அரசன், எதற்கு கூப்பிட்டான் என்று தெரியவில்லை. அரசன் இடைவிடாது உணவு உண்பது பற்றி பேசிக் கொண்டு போனான்.

''அரசே...'' நாலூரான் அரசரை தடுத்து நிறுத்தினான். அவனுடைய உரிமை அங்கு அதிகமாக இருந்தது.

''உணவு பற்றியே பேசிக்கொண்டு போனால், வில்லிதாசனை நீங்கள் அழைத்த காரணம் மறந்துவிடக் கூடும்.''

''ஆமாம். வில்லியை எதற்கழைத்தேன்?''

''ஒரு மல்லனோடு சண்டை போட அரசே.''

''ஆமாம், எங்கே அந்த மல்லன்?''

''தனியே... கொட்டடியில் பூட்டி வைத்திருக்கிறேன்.''

''பாண்டிய தேசத்திலிருந்து தப்பி வந்த மல்லன், பாண்டிய தேசம் எப்படி என்று கேட்டால், சுபிட்சமாக இருக்கிறது என்று சொல்கிறான். சோழ தேசத்தைவிடவா சுபிட்சமா இருக்கிறது என்று கேட்டால்... ஆமாம் சோழ தேசத்தைவிட சுபிட்சமாக இருக்கிறது என்று சொல்கிறான். இப்படி சுபிட்சமான தேசத்திலிருந்து வந்தவனை நம்முடைய தேசத்திலிருப்பவன் ஏன் என்று கேட்க வேண்டாமா? ஏன் பாண்டிய தேசத்திலிருந்து தப்பி வந்தீர் என்று சொன்னால், பெண் விவகாரமாம். பெண் விவகாரத்தில் அவனுக்கும் அரசனுக்கும் பிணக்கு வந்து விட்டதாம். அதனால் வேண்டாம் என்று சொல்லி வந்து விட்டானாம். இந்த ஆளை நம்பமுடியுமா? இந்த ஆளை தண்டிக்காமல் விடலாமா? தன்னை மல்லன் என்று மாரை

நிமிர்த்தி சொல்லிக் கொள்கிறான் அவனைக் கண்டாலே பிடிக்கவில்லை. இன்று மாலை போருக்கு தயாராகியிருக்கச் சொல்லி கொட்டடியில் அடைத்து வைத்திருக்கிறேன். இப்போது அவன் வெளியே வருவான். அவனோடு நீ போர் புரிய வேண்டும். அவனை அழித்து துவம்சம் செய்ய வேண்டும். அவன் வலியில் அலறுகிற அலறல் சங்கீதம் போல் என் காதில் விழவேண்டும். அவனை அடித்து மெல்ல மெல்ல துடிக்க வைத்து கொல்ல வேண்டும். தயாராக இரு. யாரங்கே? பாண்டிய நாட்டு மல்லனை அழைத்து வாருங்கள்.''

வில்லிதாசன் சற்று ஆடிப்போனான்.

''என்ன வேதனை இது? எதற்காக ஒரு மல்லன் இன்னொரு மல்லனை அடித்துக் கொல்ல வேண்டும்? இது... மல்யுத்தம் என்பது ஒரு விளையாட்டு. அதில் கொலை என்பது ஒருக்காலும் கிடையாது. கொலை என்பது போரில் மட்டுமே உண்டாகும் விஷயம். மன்னன் போருக்கு அனுப்பி அங்கே ஆயிரம் பேரை துவம்சம் செய்யச் சொன்னாலும் செய்யலாம். ஆனால், மல்யுத்தம் என்ற விளையாட்டை நடத்தி, அந்த விளையாட்டில் எதிரியை கொன்றுவிட வேண்டுமென்று சொன்னால், அது பாவமான விஷயம். தனக்கு வித்தை கற்றுக் கொடுத்த குரு, இதை தெளிவாக சொல்லியிருக்கிறார். 'எவனொருவன் கைகூப்புகிறானோ, அவனை துன்புறுத்தாதே. எவன் உயிருக்கு பயந்து கெஞ்சுகிறானோ... அவனை ஒரு பொழுதும் தாக்காதே, எவனொருவன் அச்சப்பட்டு ஓடுகிறானோ அவனை பின் தொடர்ந்து வதம் செய்யாதே மன்னித்து விடு. அவன் போட்ட சண்டையை மறந்து விடு' என்று சொன்னார். இந்த அரசன் தாறுமாறாக பேசுகிறான்.

பாண்டிய தேசத்து மனிதனை, காலில் விலங்கு பூட்டி கூட்டி வந்தார்கள். அவன் மல்லனே இல்லை என்று அவனை

பார்த்த உடனே தெரிந்துவிட்டது. அவன் வெறும் தடியன், திண்ணைத் தூங்கி. அதிகம் சாப்பிடுகிறவன். எந்த உடற்பயிற்சியும் செய்யாதவன். பரம்பரை பரம்பரையாய் ஊதிப்போன உடம்பு. பார்ப்பதற்கு மல்லனைப்போல ஒரு பொய் தோற்றம் தெரிகிறதே தவிர, அவன் உடம்பில் வலுவேயில்லை. வேண்டுமென்றே வேட்டியை இறுகக் கட்டி, மார்புகளை அகலமாக்கிக் கொண்டிருக்கிறான். ஒரு தள்ளு தள்ளினால் விழுந்து விடுவான். இவனால் துள்ளி எழுந்திருக்க முடியாது. பிணம் போல் தரையில் விழுவான். எதற்காக அரசனிடம் தன்னை மல்லன் என்று சொன்னான்? ஆச்சரியமாக இருந்தது.

'இவனோடு சண்டையிட வேண்டுமா? கதறக் கதற அடிக்க வேண்டுமா? வலிக்க வலிக்க இம்சை செய்ய வேண்டுமா? எதற்கு? இவன் எனக்கு என்ன தீங்கு செய்தான்?' மல்லன், நேரே வந்து மன்னரைப் பார்த்து மண்டியிட்டு கெஞ்சினான்.

''என்னை விட்டுவிடுங்கள். நான் ஓடிப்போய் விடுகிறேன்'' என்று உளறினான். அவன் கால் சங்கிலிகள் அவிழ்த்து விடப்பட்டன. அவன், வில்லிதாசன் முன்பு நிறுத்தப்பட்டான்.

''இவன் சோழ தேசத்து மல்லன். நீர் உம்மை பாண்டி தேசத்து மல்லர் என்று சொல்லிக் கொண்டிருக்கிறீர். ஒரு மல்லர், இன்னொரு மல்லரைப் பார்த்தவுடனேயே சண்டையைத் துவக்கிவிட வேண்டும். ஆக்ரோஷமான சண்டைக்கு அரைகூவல் விடவேண்டும். நீர் இங்கு வந்து அழுவதில் புண்ணியமில்லை. அவைக்கு நடுவே நிற்கின்ற நீர், எங்களது சோழ மல்லரை எதிர்த்து போராடி ஜெயித்தீர்கள் என்றால், உங்களுக்கு பல பரிசுகள் தரப்படும். உடனடியாக போரில் இறங்குங்கள்.''

அந்த மல்லர் மறுபடியும் கைகூப்பினார்.

''நான் பகலில் சாப்பிடவேயில்லை. நேற்றும் சரியாக சாப்பிடவில்லை. என் உடம்பில் வலுவே இல்லாதபோது இந்த மல்லனோடு எப்படி சண்டை போடுவேன்?''

வில்லிதாசனுக்கு, அவன் தன்னை மல்லன் என்று அழைத்துக் கொண்டது, லேசாக கோபத்தைக் கொடுத்தது.

''ஐயா, நீங்கள் மல்லரே இல்லை என்பது என் அபிப்பிராயம். உங்களுடைய உருவம் பெரிதாக இருக்கிறதே தவிர, வலுவுடையதாக இல்லை. உடற்பயிற்சி என்ற விஷயத்தை நீங்கள் ஒருபோதும் செய்ததேயில்லை. எதற்காக பொய் சொல்கிறீர்கள்? ஏன் உதை வாங்கி சாகிறீர்கள்? தயவுசெய்து போய்விடுங்கள். மன்னரிடம் மன்னிப்பு கேட்டு சோழ தேசத்தை விட்டு, பாண்டிய தேசத்துக்கு ஓடிவிடுங்கள். உங்களால் சண்டை போட முடியாது. உணவு உட்கொண்ட பிறகும் உங்களால் என்னை எதிர்த்து நிற்க முடியாது. மல்யுத்தத்தின் எந்த ரகசியமும் உங்களுக்குத் தெரியவில்லை என்பது நீங்கள் நிற்பதைப் பார்த்தாலே தெரிகிறது. ஏன் பொய் சொன்னீர்?''

மல்லன் வில்லிதாசனை நோக்கி கை கூப்பினான்.

''உண்மைதான். உண்மைதான். நான் மல்லன் இல்லை. என்னைப் பார்த்தவர்கள் எல்லோரும் இவன் மல்லனோ என்று வியப்பார்கள். நானும் ஆமாம் என்று சொல்லிவிடுவேன். அரசன் என்னைப் பார்த்ததும், மல்லனா நீ என்று கேட்டார். ஏதேனும் பரிசு கொடுப்பார் என்பதற்காக ஆமாம் என்று அவர் எதிரில் தொடை தட்டிவிட்டேன். அரசருக்கு கோபம் வந்துவிட்டது...''

அரசன் கிருமிகண்டன் சட்டென்று எழுந்தான்.

''ஆக, என் முன்னே மல்லனென்று நீ தொடை தட்டியது பொய் அல்லவா? யாரங்கே... இவனை சவுக்கால் அடியுங்கள்.''

அவன், நடுங்கிப்போய் மன்னனின் கால்களில் விழுந்தான். மன்னன், கிருமிகண்ட சோழன் அவனை எட்டி உதைத்தான். அவனை, தூக்கி நிறுத்தினார்கள். தூணோடு கட்டினார்கள். தீப்பந்தத்தை அருகில் கொண்டு வந்து அவன் முகத்தைப் பார்த்தார்கள். அவன் வாய்கோணி ஒரு குழந்தை போல் அழுதான். ஒரு பைத்தியம் போல் பிதற்றினான்.

''யாரங்கே, சவுக்கை நமது மல்லனிடம் கொடுங்கள். அடி ஒவ்வொன்றும் படுவேகமாக விழ வேண்டும். ஒவ்வொரு அடிக்கும் சதை பிய்ந்து தொங்க வேண்டும். எங்கே... உன் வலு அனைத்தையும் சேர்த்து அவனை அடித்து சித்ரவதை செய்.'

கிருமிகண்டன், கட்டளையிட்டான்.

வில்லிதாசன் கையில் சவுக்கு கொடுக்கப்பட்டது.

''என்ன தலையெழுத்து இது. இப்படியொரு உத்தியோகம் தேவைதானா?''

'ஒரு அப்பாவியை... ஒரு சோற்றுத் தடியனை சவுக்கால் அடித்து சதை சதையாகப் பிய்த்து என்ன பார்க்கப் போகிறான். மன்னர் சொன்னார் என்பதற்காக எல்லா வற்றையும் செய்துவிட முடியுமா? கைகூப்பி கெஞ்சுகிறான், ஓடிவிடுகிறேன் என்று அழுகிறான். இவனை, சதை பிய்யும்படி வலிக்க வலிக்க எப்படி அடிப்பது? ஏன் சித்ரவதை செய்ய வேண்டும்?'

வில்லிதாசன் சவுக்கை சுருட்டி, மன்னரை நோக்கி கைகூப்பினான்.

''ஒரு மல்லன் இன்னொரு மல்லன் அழுகிறபோது பார்த்துக் கொண்டிருப்பது தவறு. இவன் மல்லன்தான். ஆனாலும் பயிற்சிகள் சரிவர செய்யாததனால்... ஊதிவிட்டான். தயவுசெய்து இவரை விட்டுவிடுங்கள். இவரை அடித்து துன்புறுத்த வேண்டாம். பாண்டிய தேசம் வரையிலும் இவரை நான் கொண்டு போய் விட்டுவிட்டு வருகிறேன். ஒரு மனிதன் கைகூப்பி அழும்போது, மன்னிப்பு என்று கேட்கும்போது மன்னிப்பதுதான் உங்களைப் போன்ற பெரியோர்களது கடமை.''

''என் கடமைப் பற்றி எனக்குச் சொல்லாதே. என்னிடம் தொடை தட்டிப் பேசியவன் தன்னை மல்லன் என்று பொய் சொன்னான். அடித்து துன்புறுத்து. அடி.''

'தயவுசெய்து எனக்காக இவன் மீது பரிதாபம் கொண்டு...''

''ஏன்? இவன் மீது எதற்காக நான் பரிதாபப்பட வேண்டும்? நீ சொல்லி நான் எதற்கு கேட்க வேண்டும்?...''

''அப்பாவியை, வெறும் அழுகையானை எதற்கு அடிக்க வேண்டும் அரசே? தயவுசெய்து அவனை விட்டு விடுங்கள் என்று இறைவன் பெயரால் கேட்கிறேன்.''

''முடியாது. எவன் பெயரால் கேட்டாலும் முடியாது.''

கிருமிகண்டன் பற்கடித்தான். அவன் கடைவாய் ஓரம் ரத்தம் வழிந்தது. துடைத்துக் கொண்டான். அவன் அருகே வந்து பேசும்போது துர்நாற்றம் ஏற்பட்டது.

''போ, போய் இவனை சதை பிய்யும்படி அடி. உடம்பெல்லாம் ரத்தம் வழியும்படி செய். வரிவரியாய் உடம்பில் காயங்கள் ஏற்படும்படி சவுக்கால் விளாசு.'' கிருமிகண்டன் மறுபடியும் கத்தினான். வில்லிதாசன். பின்னடைந்தான். மறுபடி கைகூப்பினான்.

•

'எனக்கு மனம் ஒப்பவில்லை. நான் ஒரு வீரன் இன்னொரு வீரனிடம்தான் என் வீரத்தை காட்ட வேண்டுமேயொழிய வாயில்லா பிராணிகளிடம் என் வீரத்தை காட்டுவது நல்லதல்ல. என் குரு அப்படி செய்யக்கூடாதென்று தடுத்திருக்கிறார். கையெடுத்து கும்பிடுபவர்களை, கதறுபவர்களை, மன்னித்து விடுங்கள் என்று கெஞ்சுபவர்களை ஒருக்காலும் துன்புறுத்தக் கூடாதென்று சத்தியம் வாங்கியிருக்கிறார். நான் குருவுக்கு கொடுத்த சத்தியத்தை ஒருநாளும் மீறமாட்டேன். தயவு செய்து என்னை மன்னித்துக் கொள்ளுங்கள்.

''என்ன திமிர்? என்ன திமிர்? நாலூரா... நாலூரா... நமது மல்லன் நம்மை எதிர்த்து பேசுகிறான். நான் சொன்ன கட்டளையை ஏற்க மறுக்கிறான். அடிக்கச் சொன்னால் அடிக்கமாட்டேன் என்கிறான். நான் போருக்கு போ என்றால் மாட்டேன் என்று சொல்வான் போலிருக்கிறது. என்ன திமிர்? நாலூரா... கேட்டுக் கொண்டுதான் இருக்கிறாயா?''

கிருமிகண்டன் இடது வலதுமாக அலைந்தான்.

இப்போது அரசர் கோபம் தன்மீது திருப்பப்பட்டு விட்டது என்பதை வில்லிதாசன் உணர்ந்தான்.

'''மறுபடி கேட்கிறேன். இந்த தடியனை அடித்துக் கொல்லப் போகிறாயா இல்லையா?...''

''இல்லை அரசே. ஒரு அப்பாவியை ஒருநாளும் நான் அடிக்கமாட்டேன். அவன் என்னை அடிக்க வந்தால் இரண்டு தட்டு தட்டி படுக்கவைத்து விடுவேன். துன்புறுத்த மாட்டேன். பிறரை துன்புறுத்துவதற்காக நான் மல்யுத்தம் கற்கவில்லை. தற்காப்புக்காக கற்றேன். உடற்பயிற்சிக்காக கற்றேன். சீரான உடலமைப்புகாக கற்றேன். சக்தி வாய்ந்த

ஒரு சோழ தேசத்தை நாம் உருவாக்க வேண்டுமென்பதற்காக கற்றேன். இப்படி அப்பாவிகளை அடிக்க வேண்டுமென்பதற்காக கற்கவில்லை...''

''நாலூரா... நாலூரா... நான் நன்றாக இல்லை. காலையிலிருந்து என் கழுத்துவலி அதிகமாயிருக்கிறது. முதுகுவலியும் அதிகமாயிருக்கிறது. அதோடு சேர்ந்து இவனும் என்னை துன்புறுத்துகிறான், நாலூரா... என்ன தண்டனை கொடுக்கலாம்?''

நாலூரார் யோசித்தார்.

''ஒருவேளை இப்படிச் செய்யலாமா அரசே?''

''என்ன?''

''பாண்டிய தேசத்து மல்லனிடம் ஒரு சவுக்கு கொடுத்து, நம்முடைய மல்லனிடமும் ஒரு சவுக்கு கொடுத்து ஒருவரை ஒருவர் அடித்துக் கொள்ளுங்கள் என்று சொல்லலாமா? இப்போது சமாதானம் பேசும் வில்லிதாசன், பாண்டிய சேத்து மல்லனால் சவுக்கடி பட்டால் பிய்த்தெறிந்து விட மாட்டானா?''

''ஆமாம். ஆமாம். அற்புதமான யோசனை. சிங்கம் வெறுமே படுத்துக் கொண்டிருக்கிறது. மான் போனால் போகட்டும் என்று விட்டுவிடுகிறது. ஆனால், வேங்கை ஒரு சிறு சீறினால், சிங்கம் பதிலுக்கு சீறும். ஆகவே, அந்த பாண்டிய மல்லன் கையிலும் ஒரு சவுக்கு கொடு. ஒரு அடிக்கு ஒரு பொன் தருவதாக சொல். வில்லிதாசன் மீது படுகின்ற ஒவ்வொரு அடிக்கும் ஒரு பொன் தருவதாக சொல்.''

நோய் மனப்பான்மையுடைய அரசன், கிறுக்கு பிடித்த மந்திரி அந்த சபையில் நர்த்தனமாடத் துவங்கினார்கள்.

சபையில் உள்ள பெரியோர்கள் முகம் தொங்கப் போட்டு உட்கார்ந்தார்கள். வீரர்கள் கைகட்டி தலைகவிழ்த்துக் கொண்டார்கள். பெண்கள் முகம் திருப்பிக் கொண்டார்கள். மண்டபத்தில் மேலே அமர்ந்திருந்த நடனமணிகள் தங்கள் இல்லத்திற்கு திரும்பிக் கொண்டிருந்தார்கள். தீப்பந்த வெளிச்சத்தில் நீண்ட சவுக்குகள் எடுத்து ஒருவரை ஒருவர் அடித்துக் கொள்கிற காட்சியைப் பார்க்க ஒருவரும் தயாராக இல்லை.

பாண்டிய தேசத்து வீரனிடம் ஒரு சவுக்கு தரப்பட்டது. அவன் கட்டுகள் அவிழ்த்துவிடப்பட்டன. அவனை நடுசபையில் நிறுத்தினார்கள். ''வில்லிதாசன் என்கிற சோழ மல்லரை ஒங்கி அடி. ஒரு அடிக்கு ஒரு பொன்.''

கிருமிகண்ட சோழன், அந்த வீரனை உற்சாகப் படுத்தினான்.

அந்த வீரன் தலைகுனிந்து நின்றான்.

''நீ அடிக்கப்போகிறாயா? தலைவெட்டுப்பட்டு சாகப்போகிறாயா? நீ அடிக்கவில்லையென்றால், நாளைக் காலை மரணதண்டனை நிச்சயம். பாண்டிய தேசத்திலிருந்து சோழ தேசத்துக்கு வந்த ஒற்றனாக உன்னைக் கருதி கண்டந்துண்டமாக வெட்டிப்போடுவது நிச்சயம். எனவே, உயிர் பிழைக்க வேண்டுமென்றால், உயிர் பிழைப்பது மட்டுமல்லாமல் காசு சம்பாதிக்க வேண்டுமென்றால் எங்கள் மல்லனை சவுக்கால் அடி.''

அமைதியாக இருந்த அந்த போர்வீரன் தலை நிமிர்த்தினான்.

சவுக்கை சொடுக்கினான்.

நிமிர்ந்து வில்லிதாசனைப் பார்த்தான். வில்லிதாசனுக்குள் வியப்பு ஏற்பட்டது 'இவனுக்காக நாம் மன்றாடி இவன்

உயிர்ப்பிச்சை பெறவேண்டும், துன்புறுத்தலாகாது என்று நாம் நினைத்துப் பேசப் போக, இவன் கையில் சவுக்கு கொடுக்கப்பட்டு நம்மீது இவன் பிரயோகப்படுத்தவும் தயாராகி விட்டானே.

என்ன விந்தை உலகமிது.

அரங்கரே, அரங்கரே, அன்புமிக்க அரங்கரே, என்ன லீலை நடத்திக் கொண்டிருக்கிறீர்? நான் உம்மைப் பார்க்க வேண்டும் என்று நினைத்தால் என் உடம்பு முழுவதும் புண்ணாய் போவதற்கு வழிவகுத்துக் கொண்டிருக்கிறீரே. நான் வேலை அலுத்துப் போய் உம்மிடம் வந்து உட்கார வேண்டுமென்று நினைத்தால், எனக்கு இங்கு தேவையற்ற ஒரு வேலை கொடுத்துவிட்டீரே.

அரங்கரே... அரங்கரே! என்னை என்ன செய்ய நினைத்துக் கொண்டிருக்கிறீர்? வில்லிதாசன் உம்மை தரிசிக்கவே கூடாதென்று அவனை இங்கேயே சித்ரவதை செய்து சமாதியாக்க முடிவு செய்து விட்டீரா?

அரங்கரே... அரங்கரே! நான் சாவது பற்றி சிறிதும் கவலைப்படவில்லை ஆனால், சாவதற்கு முன்பு... அரங்கரே... உம்மை சந்திக்க வேண்டும். உம்மை கண்குளிர பார்க்க வேண்டும் என்று ஆசைப்பட்டேன். அரங்கரே... உம் சந்நிதியில் வாழவேண்டும் என்று ஆசைப்பட்டேன். ஸ்ரீரங்கத்தில் சிறிது நாள் தங்கியிருந்து காவிரி நீராடி, கொள்ளிட நீராடி, உங்களைப் பற்றி புகழ்ந்து பேசுகின்ற பல கவிதைகளைக் காதாரக் கேட்டு அங்குள்ள வைணவர் களுக்கு சேவை செய்து... அரங்கரே... அரங்கரே...

இவ்விதம் பல்வேறு ஆசைகளை அடக்கி வைத்திருக் கிறேன். இவையெல்லாம் ஒரு சவுக்கில் துடைத்துவிடப் போகிறீரா? சரி... உம்முடைய விருப்பம். நான் என்ன

இப்போது செய்ய வேண்டும் என்று தயவுசெய்து உள்ளுக்குள் குரல் கொடுங்கள். எனக்கு தெரியவில்லை. நான் சாதாரண மல்லன். அதிகம் படிப்பில்லாதவன். தத்துவ ஞானம் இல்லாதவன். பக்தி நெறியில் போகாதவன். பெரியோர்களுடைய வார்த்தைகளைப் புரிந்துகொள்ள முடியாதவன். மொழியறிவு இல்லாதவன். உடம்பு மட்டுமே இருக்கின்ற ஒரு சாதாரண மல்லன். அரங்கரே... உம் மீது எனக்குப் பெரிய காதலிருக்கிறது. ஐயா, திருவானைக்காவல் அகிலாண்டேஸ்வரியை நான் நேசிப்பது போல, தாயுமான ஸ்வாமியை நேசிப்பது போல, வெக்காளியம்மனின் கருணை மிகுந்த முகத்தை நேசிப்பது போல, வயலூரில் குடிகொண்டிருக்கும் சுப்ரமண்யசாமியை நேசிப்பது போல, அங்குள்ள ஆதிநாதனை நேசிப்பது போல... அரங்கரே... உம்மையும் நேசிக்கிறேன். இப்போது நான் என்ன செய்ய வேண்டுமென்று தயவுசெய்து எனக்கு சொல்லிக் கொடுங்கள். உம்மை கெஞ்சிக் கேட்டுக் கொள்கிறேன். உமது உத்தரவில்லாமல் என் சவுக்கு நகராது. அவனை பதிலுக்கு அடிக்க மாட்டேன் தயவுசெய்து, தயவு செய்து... இந்த வில்லிதாசன் அடுத்து என்ன செய்ய வேண்டுமென்று சொல்லிக் கொடுங்கள்.'

எதிரே, மறுபடியும் சவுக்கு பலமாக சொடுக்கப் பட்டது. அந்த பாண்டிய மல்லன் சவுக்கை உருவி, மெல்ல வில்லிதாசனை நோக்கி நடந்து வந்தான். வில்லிதாசன் கண்களை உற்றுப் பார்த்தான். ஸ்ரீரங்கத்தில் திகழ் சக்கரத்தில் ஸ்ரீராமானுஜர் உடல் சிலிர்த்தார். கண்களை மூடிக் கொண்டார்.

'அரங்கா' என்று அவர் அழைத்த அழைப்பு அரங்கனின் காதில் விழுந்தது.

அழைப்பவர் அழைத்தால் இறைவன் உடனே உதவிக்கு ஓடிவருகிறான். தனக்கு நெருங்கியவர்களுக்கு

யாரோ தண்டனை கொடுக்க தயாராயிருக்கிறார்கள் என்று ஸ்ரீராமானுஜருக்கு தெரிந்துவிட்டது. அவர் அப்படி நடக்கக்கூடாது என்று அரங்கனை நோக்கி 'அரங்கா' என்று குரல் நடுங்கக் கெஞ்சினார். 'சரி' என்ற அரங்கன் பதிலை உள்வாங்கிக் கொண்டார்.

பாண்டிய தேசத்து மல்லன் மனதுக்குள் மெல்லிய குரல் கேட்டது.

''சவுக்கை கீழே போட்டுவிட்டு தென்திசை நோக்கி ஓடு. உன்னை யாரும் பிடிக்கமுடியாது!'' என்ன? திகைத்தான். எங்கிருந்து வருகிறது இந்தக் குரல்? பாண்டிய மல்லன் அல்லாடினான். நாலாபுறமும் பார்த்தான். வில்லிதாசனை நோக்கினான். மனசுள் பேசினான்.

''வில்லிதாசரே! நீர் உருவத்தில்தான் மல்லர். முகம் குழந்தையைப் போல் இருக்கிறது. வில்லிதாசரே... உமது முகத்திலிருந்து ஓர் அருள் ஒளிவீசிக் கொண்டிருக்கிறது. வில்லிதாசரே... உமது முகத்திலிருந்து ஒரு அன்பு வழிந்து கொண்டிருக்கிறது. பாண்டிய தேசத்து மல்லனான என்னிடம் இவ்வளவு கருணை வைத்து எனக்கு உயிர்ப் பிச்சை கொடுப்பதற்காக வாதாடினீரே. எனக்காக தண்டனையும் பெற்றீரே.

உம்மை நான் சவுக்கால் அடிப்பது தகுமா?... இந்த முட்டாள் அரசன் சொன்னான் என்பதற்காக நான் அடித்தால் எந்த ஜென்மத்திலாவது நான் கடைத்தேறுவேனா?... நான் வெட்டுப்பட்டு செத்தாலும் பரவாயில்லை.

அந்த பாண்டிய வீரன் சவுக்கை கீழே போட்டான். திபுதிபுவென்று வாசல் நோக்கி ஓடினான். பெரிய கதவுகளை இழுத்தான். அரண்மனை கூடத்தின் கதவுகள் திறக்க, பெரும் காற்று குப்பென்று உள்ளே நுழைந்தது.

கிருமிகண்டனுக்கு குளிர் பிடிக்காது என்பதால், காற்று வீசினால் தாங்க மாட்டான் என்பதால், கண் எரியும் என்பதால் கதவை மூடியே வைத்திருப்பார்கள். அறைகளை புழுக்கமாகவே வைத்திருப்பார்கள். தெருக்கதவைத் திறந்ததும் தெற்கத்தி பக்கத்திலிருந்து வரும் மாலை நேரத்து காற்று அரண்மனை கூடத்திற்குள் புகுந்து அங்கிருக்கின்ற அத்தனை தீப்பந்தங்களையும் ஒரே வீச்சில் அணைத்தது. இருள் உடனே சூழ்ந்தது. அந்த பாண்டிய வீரன் வேகமாக வெளியே ஓடினான். அரண்மனை தாண்டினான். யார் எதற்கு ஓடுகிறார்கள் என்று தெரியாமல் எல்லோரும் முன்னும் பின்னும் அலைந்தார்கள் வில்லிதாசன் கைகட்டியபடியே ஓடுகிற வீரனை வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தான். அந்த வீரன் வெகு தூரம் போய் திரும்பி நின்று ஒருமுறை கைத்தூக்கி வில்லியை கும்பிட்டான். மறுபடியும் வேகமாக ஓடினான். இங்குள்ள வீரர்கள் தீப்பந்தம் ஏற்றுவதிலேயே மும்முரமாக இருந்தார்கள்.

ஓடிய வீரனை பார்ப்பதற்காக விலுக்கென்று எழுந்ததால் கிருமிகண்டனுக்கு கழுத்தில் வலி அதிகரித்து விட்டது. ''ஐயோ'' என்று அலற, எல்லா வீரர்களும் கிருமி கண்டனை நோக்கி திரும்பினார்களே ஒழிய, ஓடியவனை துரத்தவில்லை. கிருமிகண்டன் கட்டளையிட்டான் ''ஓடுங்கள், ஓடுங்கள். அந்த பாண்டிய வீரனை மடக்கிக் கொண்டு வாருங்கள். வெட்டி வீழ்த்துங்கள். வீழ்த்திவிட்டு வந்து என்னிடம் சொல்லுங்கள்'' என்று சொல்லி சிம்மாசனத்திலிருந்து எழுந்து தன் கழுத்தை இரண்டு கைகளாலும் தாங்கியபடி அறையை நோக்கி நகர்ந்தான்.

அவன் பின்னே மருத்துவர்கள் போனார்கள். பந்தங்கள் பலவும் ஏற்றப்பட்டன, நாலூரான் என்கிற மந்திரி வில்லிதாசனை உறுத்துப் பார்த்தான்.

''இத்தனை திமிராகிவிட்டதா? எங்கள் சோற்றைத் தின்றுவிட்டு எங்களுக்கே உபதேசமா? இன்றிலிருந்து உனக்கு சோழ தேசத்தில் வேலையில்லை. சோழப் படையில் மானியமில்லை. எனவே, நீ உன்னுடைய கேயூரத்தை கழற்றி கீழே வைத்துவிட்டு வெளியே போகலாம். எங்கேனும் போய் ஏதேனும் செய்து கொள். இங்கு நீ மல்லனாக இல்லாவிட்டாலென்ன, ஆயிரம் மல்லர்கள் கொண்டு வந்து நிறுத்த என்னால் முடியும். போ. வெளியே போ.'' உரக்கக் கத்தினான்.

நாலூரான் என்கிற அந்த மந்திரி பேசப் பேசப் வில்லிதாசனுக்கு மனதில் குதூகலம் பொங்கி வழிந்தது. இடது புறத்தில் சோழ தேசத்து சின்னத்தோடு கட்டியிருந்த தாமிர கேயூரத்தை, அதாவது அவன் அரசாங்க மல்லன் என்ற அடையாளச் சின்னத்தை பளிச்சென்று அறுத்தெடுத்தான். மெல்ல போய் பணிவோடு அதை நாலூரான் காலில் வைத்தான். கையெடுத்து கும்பிட்டான் ''மிக்க நன்றி'' என்றான். திரும்பினான், வெளியே வந்தான். இப்போதும் குப்பென்று காற்று அடித்தது. அந்த காற்று அவன் உள்ளத்தில் விளக்குகள் ஏற்றி வைத்தன. மனம் வெளிச்சமாக இருந்தது போல் ஒரு உணர்வு ஏற்பட்டது. அவன் தன் வீடு நோக்கி நடந்தான். அங்கே ஸ்ரீரங்கத்தில் திகழ் சக்கரத்தார் ஸ்ரீராமானுஜர் ''அரங்கா, அரங்கா'' என இரண்டு முறை அன்போடு அழைத்தார். அதற்கு நன்றி என்ற பொருள்.

துஷ்டனைக் கண்டால் தூர விலகு. இது மிக நல்லது. உறையூரில் இனியும் இருந்தால் ஏதேனும் வம்பு வரக் கூடும். தேவையில்லாமல் பிரச்சினைகளை ஏற்படுத்தக் கூடும். ஆட்களை விட்டு அடிப்பதற்கு முயற்சிகள் செய்யக் கூடும். ஆட்கள் அடிக்கத் தயங்குவார்கள். ஆனாலும்

யாருக்கும் தர்மசங்கடம் கொடுக்காமல் உறையூரை விட்டுப் போய்விடுவதுதான் நல்லது. சொந்தத்தில் வீடு இருக்கிறது. அந்த வீட்டை யார் எடுத்துக் கொள்வார்கள்? எவருக்கு கொடுப்பது? உடனே விற்றால் வாங்குவதற்கு யார் தயாராக இருக்கிறார்கள்? தெரியவில்லை.

ஆனாலும் உறையூரை விட்டு உடனே போய்விடுவது தான் நல்லது. உறையூரை விட்டு எங்கே போவது? சேர தேசம் போகலாமா? அல்லது சேதுபதிகள் வாழும் இடம் போய்விடலாமா? இல்லை குமரி கடற்கரையோரம் போய்விடலாமா? வேண்டாமா. பிறகு? இங்கேயே இருப்போம். ஸ்ரீரங்கத்திற்கு போய் விடுவேன்.

ஸ்ரீரங்கம் வைஷ்ணவ தலம். அங்கு சைவர்களுடைய கோபம் செல்லுபடியாகாது. சைவர்கள் கோபப்பட்டால் வைஷ்ணவர்கள் ஒன்றுதிரண்டு எதிர்க்க வந்துவிடுவார்கள். வைஷ்ணவர்கள் பலமாகி வருகிறார்கள் என்பதால் சைவர்கள் அங்கு நுழையப் பயப்படுகிறார்கள். எனவே நாம் அரங்கரை நோக்கிப் போய்விடுவோம். அடிக்கடி அரங்கரின் நினைப்பு வந்துகொண்டு இருக்கிறது. அரங்கனுக்கு அருகே இனிமேல் வாழ்க்கையை நடத்தத் துவங்கி விடுவோம். அத்தோடு இந்த மல்லன் வேலை போதும். வேறு ஏதேனும் நல்ல வேலை தேடிக் கொள்ளலாம். வேலை ஏதும் இல்லாவிட்டாலும் கையிலிருக்கிற காசுக்கு இன்னும் பத்து வருடங்கள் நன்றாக சாப்பிட்டு ஊர் சுற்றலாம். ஆனால், அரங்கன் அருகே போனதும் ஏதேனும் வேலை கிடைக்கும். அல்லது அரங்கனை தோளில் தூக்கி சுமக்கிற வேலையாவது கிடைக்கும். எனவே அரங்கனை நோக்கிப் போய்விடுவது தான் நல்லது. அதுதான் பாதுகாப்பு. கிருமிகண்ட சோழனின் சோழ வீரர்கள் ஸ்ரீரங்கம் நுழைய பயப்படுவார்கள், அவர்களை நோக்கி அங்கே கேள்வி கேட்கப்படும்

என்பதால் அதிகம் வாலாட்ட மாட்டார்கள் இரவோடு இரவாக தன் பொருட்களை கட்டிக்கொண்டு ஒரு மாட்டு வண்டியில் ஏற்றிக் கொண்டு தெருவாசிகளிடம் கைகூப்பி விடை பெற்றான்.

''வீடு என்ன செய்யப் போகிறீர் வில்லிதாசரே?'' ஊர் பெரியவர் பிரியத்தோடு வினவினார்.

''என்ன செய்ய வேண்டுமென்று சொல்லுங்கள் பெரியவரே! அவ்விதமே செய்து விடுகிறேன்.''

''தமிழ் இலக்கணம் கற்றுக் கொடுக்க ஒரு இடம் வேண்டுமென்று ஒரு புலவர் இன்று காலையில்தான் என்னிடம் கேட்டார். வகுப்புகளை மரத்தடியில் நடத்தி வருகிறாராம். அப்போது கவனம் சிதறி வருகிறதாம். வெயில் ஏற மரத்தடியில் இருக்க முடியவில்லையாம். எனவே ஒரு கூரை கிடைத்தால் போதுமானது என்றார். இப்போது அவருக்கு வீடே கிடைத்திருக்கிறது என்று எண்ணுகிறேன். உமது வீட்டை தமிழ்ப் புலவருக்கு கொடுக்க சம்மதம்தானா?''

''இது பாக்கியமல்லவா. தமிழுக்கு கொடுப்பதை விட சந்தோஷமான விஷயம் வேறு என்ன இருக்க முடியும். பெரியவரே, என்னுடைய வீட்டிற்கு பூட்டுகள் ஏதுமில்லை. கதவைத் திறந்தபடியே வைத்துவிட்டுதான் வெளியே வந்திருக்கிறேன். இப்போதே ஒரு ஓலை கொடும். அந்த ஓலையில் என்னுடைய வீடு தமிழ் வகுப்பு நடத்து வோருக்கு சொந்தமானது என்று எழுதித் தருகிறேன். அதை நீங்கள் மேற்பார்வை பார்த்து செப்பனிட்டு வைத் திருக்கலாம். யாரெல்லாம் தமிழ் படிக்க நினைக்கிறார்களோ அவர்கள் அங்கே தங்கிப் படிக்கலாம். அது எட்டு கட்டு வீடு. ஒவ்வொரு கட்டிலும் ஒவ்வொரு விதமான பாடங்கள்

நடத்தலாம். எனவே இப்பொழுதே ஒரு ஓலை கொடும். எழுதுவதை நீங்கள் பின்னால் எழுதிக் கொள்ளும். நான் கைச்சாற்று தருகிறேன்.'' ஓலையை வாங்கி, எழுத்தாணி வாங்கி வில்லிதாசன் என்று அழகாக கையெழுத்திட்டுக் கொடுத்தான். அந்த வீடு தமிழுக்குச் சொந்தமாயிற்று.

ஸ்ரீரங்கத்தில் அந்த திகழ் சக்கரத்தார் திடீரென்று வாய்விட்டு சிரித்தார். ''வா வா'' என்று கூப்பிட்டார். யாரைக் கூப்பிடுகிறார் என்று தெரியாமல் சீடர்கள் தலைதூக்கிப் பார்த்துவிட்டு மறுபடியும் படுத்துக் கொண்டார்கள்.

வில்லிதாசன் தொழிலுக்குரிய உபகரணங்களையும், ஆயுதங்களையும், பாத்திரம் பண்டங்களையும் சேமித்து வைத்த தானியங்களையும் மாட்டுவண்டியில் ஏற்றிக் கொண்டு இரண்டு வேலைக்காரர்கள் பின் தொடர ஸ்ரீரங்கம் நோக்கி நடந்தான்.

பகலிலிருந்த வெப்பம் முற்றிலும் கரைந்து போய் இரவு குளுமையாக இருந்தது. தெற்கே வெகு தூரத்தில் மழை பெய்வதால் காற்று ஈரமாகி உடம்பிலுள்ள வேர்வையை சுத்தமாக துடைத்து எறிந்தது. உறையூரிலிருந்து காவிரிக்கு அருகே போய் காவிரியில் இறங்கி மாடுகள் முதுகில் நீர் ஊற்றிவிட்டு தன் உடம்பிலும் நீரால் துடைத்துக் கொண்டு முழங்கால் அளவு ஜலத்தில் மாட்டுவண்டிக்கு தோள் கொடுத்து நகர்த்திக் கொண்டே ஸ்ரீரங்கத்தின் தென்கோடியை தொட்டான்.

திரும்பி மலைக்கோட்டை விநாயகரை நமஸ்கரித்தான். 'ஐயனே! புது இடத்திற்கு வருகிறேன். எனக்கு துணையாக இருந்து நல்வழி காட்ட வேண்டும். நான் உய்வதற்கு உதவி செய்ய வேண்டும். மலைக்கோட்டை விநாயகனே! எப்பொழுதெல்லாம் காவிரிக் கரைக்கு வருகிறேனோ

அப்பொழுதெல்லாம் உன்னை கையெடுத்து கும்பிடு கிறேன். தயவுசெய்து இந்த வில்லிதாசன் மீது கருணை வைத்து, அவனுக்கு நல்ல கதி காட்ட வேணும்.' வேண்டிக் கொண்டு ஸ்ரீரங்கத்து தெருக்களில் நடக்க ஆரம்பித்தான்.

வீடுகளில், வாசலில் வெண்கல விளக்குகளை ஏற்றி வைத்து அதில் ஆமணக்கு எண்ணெயை ஊற்றி தடித்த திரிகள் ஒன்றுக்கு இரண்டாக போட்டு ஏற்றி, அதற்கு அருகே அமர்ந்து பெண்களும், கிழவர்களும் குழந்தைகளும் பாடிக் கொண்டிருந்தார்கள். அரங்கனின் புகழை வாய்விட்டு அழகிய குரலில் கும்பலாய் ஸ்லோகமாய் சொல்லிக் கொண் டிருந்தார்கள். வேறொரு வீட்டுத் திண்ணையில் ராமனது சரித்திரத்தை கதையாய் விவரித்துக் கொண்டிருந்தார்கள். இன்னொரு வீட்டுத் திண்ணையில் ஆதிசங்கரருடைய அத்வைதத்தைப் பற்றி வாதிட்டுக் கொண்டிருந்தார்கள். இன்னும் ஒரு வீட்டில் வெறும் வாத்தியக் கருவிகளை இசைத்துக் கொண்டு மக்களைப் பரவசப்படுத்திக் கொண்டிருந்தார்கள்.

மல்லிகைப் பூக்களை சரம்சரமாக கட்டி விற்றுக் கொண்டிருந்தார்கள். வெல்லத்தில் செய்யப்பட்ட அப்பம், உளுந்தில் செய்யப்பட்ட வடை, அரிசியில் செய்யப்பட்ட பணியாரம் போன்றவற்றை சுடச்சுட விற்பனை செய்து கொண்டிருந்தார்கள்.

கரும்புச் சாறிலிருந்து காய்ச்சி எடுக்கப்பட்ட இனிப்பு பண்டங்கள் சல்லிசாய் கிடைத்தன. சில இடங்களில் மதுவின் நெடியும் வீசியது.

முதல் மதில்சுவர் தாண்டி உள்ளே நகர, மாட்டு வண்டியை ஸ்ரீரங்கத்து கோவில் வீரர்கள் நிறுத்தினார்கள்

''என்ன இருக்கிறது உள்ளே?''

''ஆயுதங்கள்.''

''என்ன?'' திகைத்தார்கள்.

''ஆமாம், நான் ஒரு மல்லன். போர் செய்ய பயிற்சி தருபவன். என்னுடைய ஆயுதங்களும் சீடர்களுக்கு கொடுப்பதற்கான ஆயுதங்களும் மாட்டுவண்டியில் இருக்கின்றன. இதை தவிர தானியங்களும், பாத்திர பண்டங்களும், என் துணிகளும், சில ஓலைச் சுவடிகளும் இருக்கின்றன.''

''ஏன், எதற்காக இவையெல்லாம் ஸ்ரீரங்கத்திற்குள் எடுத்து வருகிறீர்கள்?''

''நான் அரங்கமா நகருக்கு குடிபெயர்ந்து விட்டேன். உறையூரிலிருந்து உதறிக் கொண்டு இங்கு வருகிறேன்.''

''அப்படியா! உங்கள் பெயரென்ன?''

''மல்லன் வில்லிதாசன்.''

''அட! கேள்விப்பட்டிருக்கிறோம். பெரும் மல்லனல்லவா நீர்? கேயூர தாரியல்லவா?''

''ஆமாம்.''

''உண்மையிலேயே நீங்கள் உறையூரை உதறி விட்டீர்களா?''

''அரங்கன் சத்தியமாய் நான் உறையூரை உதறி விட்டேன்.''

''ஸ்ரீரங்கத்திற்கு கெடுதல் செய்வதற்காக ஆயுதங்கள் எடுத்து வரவில்லையே?''

''அரங்கன் சத்தியமாக சொல்கிறேன். ஸ்ரீரங்கத்திற்கு ஒருபோதும் கெடுதல் செய்ய மாட்டேன். கெடுதல் செய்வதற்காகவும் நான் வரவில்லை.''

''சரி. நீங்கள் உள்ளே போகலாம். அரங்கன் மீது சத்தியம் செய்ததால் உங்களை முழுவதும் நம்புகிறோம்.''

அவர்கள் கை கூப்பினார்கள். வரவேற்றார்கள்.

மாட்டுவண்டி உள்ளே நகர்ந்தது. சித்திரை வீதிதாண்டி, உத்திர வீதி தாண்டி, உத்திர வீதியின் வழியாக அவன் மேற்கு நோக்கி நகர்ந்து, பிறகு வடக்கு நோக்கி நகர்ந்து, பிறகு கிழக்கு நோக்கி நகர்ந்து கோவிலின் மறுபக்கம் இருக்கிற உத்திர வீதிக்குள் நுழைந்தான். கொள்ளிடத்துப் பக்கம் உள்ளே உத்திர வீதியில் மடங்கள் இருப்பதை வில்லி அறிவான். எனவே ஏதேனும் ஒரு மடத்தில் அல்லது சத்திரத்தில் தங்கலாம். நிறுத்தி மாடுகளை அவிழ்த்துவிட்டு அதற்கு புல்கட்டு வாங்கிப் போட்டு உள்ளே போய் கைகால்கள் கழுவிக் கொண்டு வாசல் திண்ணையில் விசிறியோடு உட்கார, அரங்கன் கோவிலிலிருந்து பெரிய தட்டில் பிரசாதம் வந்தது.

தலைமீது மடப்பள்ளி ஆள் சுமந்து கொண்டு வந்தான்.

''எங்கே அந்த ஆள்?'' சத்திரத்துக்காரனை கேட்டான்.

''எந்த ஆளைக் கேட்கிறாய்?''

''ஒரு வணிகர் உட்கார்ந்திருந்தாரே. பத்து பட்டை சர்க்கரைப் பொங்கல், பத்து பட்டை வெண் பொங்கல் வேண்டுமென்று கேட்டாரே.''

''ஆமாம். பத்து பட்டையா கேட்டார்? யாரோ அழைத்தார்கள் என்று போய்விட்டாரே!''

''எங்கே?''

''தெரியவில்லையே. அழைத்தவனைப் பார்த்தால் தாசிவீட்டிலிருந்து வந்தவன் போல் தெரிந்தது. மறுபடி அவர் வருவதாக எனக்கு தெரியவில்லை. இன்று இரவு தாசி வீட்டில் தங்கி விடுவார் என்றுதான் நினைக்கிறேன். இப்பொழுது இந்த பத்துப் பட்டை சாதத்தை நான் என்ன செய்வது!''

''தெரியவில்லையே.'' சட்டென்று சத்திரக்கார
சொல்ல, மடப்பள்ளி ஆள் கோபத்தில் குமுறினான்.

''என்ன அயோக்கியத்தனம். என்னிடம், பத்து பட்ட
சாதம் கொண்டுவா. காசு தருகிறேன் என்று சொல்லிவிட்
எங்கோ போய் உட்கார்ந்து கொண்டிருக்கிறானே. இ
மறுபடியும் எப்படி கோவிலுக்கு எடுத்துக் கொண்
போவது. யார் பத்துபட்டை சாதம் வாங்குவார்கள்? இ
நஷ்டமானால் யார் பொறுப்பேற்பது?'' உரக்க கத்தினான்.

''ஏன் கத்துகிறாய்? வேண்டுமென்றால் இன்னொருவ
வந்திருக்கிறார். அவரிடம் வேண்டுமா என கேட்டுப் பார்.''
வில்லிதாசனை அவ்விருவரும் பார்த்தார்கள்.

''பத்து பட்டை சர்க்கரைப் பொங்கல், பத்து பட்டை
வெண்பொங்கல் சாதம் இருக்கிறது. உங்களுக்குத் தேவையா?''

''நல்லது. கொடுங்கள்.'' அவன் பை திறந்து
பொற்காசுகள் இரண்டை அவர்களுக்கு கொடுத்தான்.

அவர்கள் ஆவலோடு காசை வாங்கிக் கொண்டார்கள்.

பணிவோடு தட்டை வில்லிதாசனிடம் நீட்டினார்கள்.

''பட்டையை எடுத்து தின்னையில் வைத்து
விடுங்கள். தட்டை எடுத்துக் கொண்டு போங்கள்.'' வில்லி
சொன்னான்.

''இல்லை. கீழே வைத்தால் எறும்புகள் வந்துவிடும்.
தட்டிலேயே இருக்கட்டும். நாளை காலை வந்து தட்டு
வாங்கிக் கொண்டு போகிறேன். நீங்கள் நிதானமாக
உண்டுவிட்டு தட்டை அலம்பி வைத்துவிடுங்கள்.''

வில்லிதாசன் வேலை ஆட்களை கூப்பிட்டு ஆளுக்கு
இரண்டு பட்டை சாதம் கொடுத்தான். மீதியிருந்த
உணவுகளை எடுத்து கையில் வைத்துக் கொண்டான்.

அவனுக்கு குடிக்க நீர் தரப்பட்டது. நிதானமாக சர்க்கரைப் பொங்கலையும், வெண்பொங்கலையும் ரசித்து சாப்பிட்டான். நடந்த களைப்பு மனதில் எழுந்த கொதிப்புக்கு இனிப்பு உணவும், உப்பு உணவும் மிகவும் தேவையாக இருந்தன.

சுத்தமாக துடைத்துவிட்டு தட்டை வேலையாட்கள் அலம்பி தர, அவன் ஓரமாக வைத்துவிட்டு தலைக்கு மணைப் பலகை வைத்துக்கொண்டு, மெல்லிய வேட்டியை மேலே போர்த்திக் கொண்டு வேலையாட்கள் விசிற, அயர்ந்து தூங்கினான். அவன் தூங்கியதும் வேலையாட்கள் தூங்கினார்கள்.

ஸ்ரீரங்கம் அமைதியாய் தூங்கியது.

திகழ் சக்கரத்தார் எழுந்தார். மெல்ல கொள்ளிடம் நோக்கி நடக்கத் துவங்கினார். திரும்பி உத்தர வீதியில் அவனிருக்கும் இடத்தை உற்றுப் பார்த்தார்.

''வருகிறேன். நாளை காலை வந்து நீ என்ன செய்கிறாய் என்று பார்க்கிறேன்'' என்று சொல்லிவிட்டு மெல்ல கொள்ளிடம் நோக்கி நடந்தார்.

அவருக்கு பின்னே இரண்டு சீடர்கள் தொடர்ந்தார்கள். கொள்ளிடக் கரையில் அரசமரத்தடியில் பாறை மீது துண்டு போட்டு மெல்ல சாய்ந்து உட்கார்ந்து கொண்டார்.

''நீங்கள் இருவரும் இங்கே எங்கேனும் படுத்துக் கொள்ளுங்கள்'' என்று சொன்னார்.

அவர்கள் மரத்தடி மணலில் தலைப்பாகை கட்டி படுத்துக் கொண்டார்கள். காற்று இன்னும் குளுமையாய் வீசத் துவங்கியது. நாரைகள் பேசத் துவங்கின. இருட்டில் எழுந்து எழுந்து அமர்ந்தன.

இங்குதான், இங்குதான் ஆயிரம் பேரை கொன்ற இடம் இங்குதான். இது கொலை செய்த இடம், கொல்லிடம் என்று நாரைகள் பேசிக் கொண்டன.

அவர் கண்மூடி தலையசைத்து ''ஆமாம்'' என்றார். இது திருமங்கை மன்னன் காலத்தில் நடந்தது. இந்த கோவில் கட்டியது திருமங்கை மன்னன். தன் சொத்து முழுவதையும் விற்று, தன் மனைவி நகைகள் முழுவதும் விற்று கோவில் கட்ட, அது போதாமல் தமிழ்நாடு முழுவதும் சுற்றி கொள்ளையடித்து பல அரசர்களை பயமுறுத்தி கப்பம் வசூலித்து, அந்த கப்பம் வசூலித்த காசில் ஆட்களை வரவழைத்து, ஆட்களுக்கு கூலி கொடுத்து, சோறு போட்டு பிராகாரம்... பிராகாரம்... பிராகாரமாய் அறுபது ஆண்டுகளில் ஏழு பிராகாரமுள்ள இந்தக் கோயிலை கட்டியிருக்கிறார்

வாஸ்து சாஸ்திரப்படி மிக துல்லியமாய், அழகாய் ஒவ்வொரு கல்லும் கணக்கு பார்த்து பதித்திருக்கிறார். எண்பது ஆண்டுகள் வாழ்ந்த திருமங்கை மன்னர் அறுபது ஆண்டுகளை கோவில் கட்டுவதிலேயே செலவழித்திருக் கிறார். ஏழு பிராகாரங்களையும் உறுதியாய் அமைத்திருக் கிறார். எல்லா மண்டபங்களையும் கணக்கு பார்த்து கட்டியிருக்கிறார். ஒவ்வெரு இடத்திலும் ஒவ்வொரு தேவதைகளை ஆவாகனம் செய்து, மந்திர பிரதிஷ்டை செய்து ஸ்ரீரங்கத்திற்கு தனியொளி ஏற்றியிருக்கிறார். எப்பேர்ப்பட்ட கோவில் இது. அறுபது ஆண்டுகள் கட்டபட்ட அற்புமான கோவில். யாரால் இப்படி அறுபது ஆண்டுகள் இடைவிடாது கோவில் கட்டமுடியும். கோவில் கட்டுவதையே வாழ்க்கையாக மாற்றிக் கொள்ள முடியும். கையில் காசு இல்லையென்றால் விட்டுவிடுவோமா? காசு வரும் வரை காத்திருப்பதா? இல்லை, எப்படி காத்திருக்க

முடியும்? எதையாவது செய்து கோவிலை கட்டியாக வேண்டுமே. என்ன செய்யலாம்? கொள்ளையும் அடிக்கலாம். திருமங்கை மன்னன் தன் சொத்து முழுவதும் தந்துவிட்டு மேற்கொண்டு தேவைப்பட்டது என்று பல இடங்களில் கொள்ளையடித்திருக்கிறார். பல இடங்களில் கட்டாய வசூல் நடத்தியிருக்கிறார். பல கல் தச்சர்களை மிரட்டி ஸ்ரீரங்கத்திற்கு கொண்டு வந்திருக்கிறார். கூலிகளுக்கு உணவு தருவதற்காக நிறைய நெல் வாங்கி யிருக்கிறார், நெல் வாங்குவதற்கு தங்கக் கழஞ்சுகளை கொள்ளையடித்திருக்கிறார். அவர் எது செய்தாலும் கோவிலுக்கு, அரங்கருக்கு என்றே செய்திருக்கிறார். அவருக்கென்று அவர் எதுவும் செய்து கொள்ளவில்லை. அவர் பிச்சை எடுத்தே உண்டிருக்கிறார். தனக்கென்று எதுவும் வைத்துக் கொள்ளாமல் அரங்கனுக்கு, அரங்கனுக்கு, அரங்கனுக்கு என்று பைத்தியம் பிடித்தது போல ஏழு பிராகாரங்களுள்ள அற்புதமான கோவில் கட்டியிருக்கிறார். என்ன அற்புதம், எத்தனை வெறித்தனமான அன்பு. எப்பேர்ப்பட்ட போராட்டம். அவரோடு இருந்த ஆயிரம் கள்ளர்கள் ஏழாவது பிராகாரம் கட்டி முடித்தவுடன் 'எங்கள் பங்கு எங்கே?' என்று கேட்கத் துவங்கிவிட்டார்கள். 'நீ கோவில் கட்டலாம். எங்களுக்கு என்ன? நாங்கள் உயிர் கொடுத்து போராடவில்லையா? நாங்கள் தொலைதூரம் பசியும், வெயிலும் பொறுத்துக் கொண்டு பயணப்பட வில்லையா? அதற்கு கூலி தர வேண்டாமா? கல் தூக்கியவனுக்கு கூலி கொடுத்தாய், கல்செதுக்கி சிலை செய்தவனுக்கு கூலி கொடுத்தாய், நீர் ஊற்றியவனுக்கு கூலி கொடுத்தாய். ஆனால், எங்களுக்கு என்ன கொடுத்தாய்? எங்கள் பங்கை எடுத்து வை. இல்லையேல் உன்னை சும்மாவிட மாட்டோம்.' கள்ளர்கள் மிரட்டினார்கள்.

கோவில் கோவில் என்று வேலை செய்து வயதாகி
போனவரை கழுத்தில் துண்டு போட்டு இழுத்து
கேட்டார்கள். இளம் வயதாக இருந்தால் வெட்டி
வீழ்த்தியிருப்பார். திருமங்கை மன்னனுக்கு என்பது
வயதாகிவிட்டது. கோல் பிடித்து நிற்கத்தான் முடியும்
தவிர, சண்டை போட முடியவில்லை. சண்டை போட
முடியாது என்று தெரிந்து சண்டைக்கு வருகிறார்கள்.

திருமங்கை மன்னன் கவலைப்பட்டார். திருமங்கை
மன்னனுக்கு நாலு சீடர்கள். அவருக்காக உயிரைத்
கொடுக்கவும் தயாராக இருப்பவர்கள். 'அரங்கன் கோயிலை
அவர் கட்டி முடிப்பதற்காக நாங்கள் எதையும் இழக்க
சித்தமாக இருக்கிறோம்' என்று சத்தியம் செய்தவர்கள். அந்த
சீடர்கள் நால்வரும் நாலு வித்தைகளில் கைதேர்ந்தவர்கள்.
முதல் சீடன் பெயர் 'தாழுதுவான்.' அவன் வாயால் ஊதி
பெரிய பூட்டுக்களைக் கூட திறந்து விடுவான். தாழ்ப்பாளை
ஊதுபவன். ஆகவே அவன் பெயர் தாழ் ஊதுவான். அவனை
வைத்துக் கொண்டு பல பெட்டகங்களைத் திறந்து, பல
கோட்டைக் கதவுகளைத் திறந்து விட, திருமங்கை மன்னன்
எளிதாக கொள்ளையடித்து பொற்காசுகளை ஸ்ரீரங்கத்திற்கு
கொண்டு வந்திருக்கிறார்.

இன்னொரு சீடன் பெயர் 'வாதில் வென்றான்.'
அவனிடம் வாதமிட்டு எவரும் வெற்றிபெற முடியாது.
அவன் வாதுக்கு வீணை அழைத்து வாது செய்ய வைத்து
அவர்களை வெற்றி கொண்டு அந்த காசை வாங்கி அவரிடம்
கொடுத்து விடுவான்.

இன்னொருவன் பெயர் 'நிழலில் ஒதுங்குவான்.'
அவன் யார் நிழலையாவது காலால் மிதித்தால் அவர்களால்
அந்த இடத்தை விட்டு நகர முடியாது. எனவே, பகல்
பொழுதில் பல்வேறு காவல் வீரர்களை அவனை மிதிக்க

வைத்து அதனால் அவனை இடற வைத்து, அவர்களை விழச்
செய்து இவர்கள் கோட்டைக் கதவுகளையும், கொத்தளங்
களையும் உடைத்து ஜெயித்திருக்கிறார்கள்.

இன்னொரு சீடன் பெயர் 'நீர் மேல் நடப்பான்.'
அவன் தரையில் நடப்பது போலவே தண்ணீர் மீதும் நடந்து
செல்பவன். அவன் அகழிகளைத் தாண்டி, ஆறுகளைத்
தாண்டி, இவர்கள் பயணத்திற்கு பெரிதும் உதவினான். இந்த
நீர்மேல் நடப்பான் என்கிற சீடன், திருமங்கை மன்னனைக்
கவலையோடு பார்த்தான்.

''மன்னா, இந்த ஆயிரம் பேர்களையும் நான் ஏதேனும்
செய்து சமாதானப்படுத்தி விடட்டுமா?'' அவன் சொல்வது
என்னவென்று திருமங்கை மன்னனுக்கு புரிந்தது.

''சரி... செய்.'' என்று கட்டளையிட்டான்.

நீர் நடப்பான் காவிரிக்கரையில், பெரிய படகு
பலகைகள் இரண்டை கொண்டு வந்தான். அந்த பெரிய
படகுகள் பாறைகள் கொண்டு வர பயன்பட்டவை. அந்த
படகுகளைக் கரையில் வைத்துவிட்டு அந்தக் கள்ளர்களை
நோக்கி அவன் பேசினான். வாதில் வென்றானும் அருகில்
இருந்தான்.

''ஐயா, திருமங்கை மன்னனுக்குச் சொந்தமான
மிகப்பெரிய தங்கப்புதையல் ஒன்று, வடகாவிரியின்
வடக்குப்பக்கம் இருக்கிறது. புதைத்து வைத்த இடம்
எனக்குத் தெரியும். படகில் ஏறிக் கொள்ளுங்கள்.
வடகாவிரியின் வடக்குப்பக்கம் போவோம். அங்கே
புதையல் இருக்கும் இடத்தை காட்டுகிறேன். நீங்கள்
தோண்டி எடுத்து உங்களுக்குள் பங்கிட்டுக் கொள்ளுங்கள்,
திருமங்கை மன்னனை விட்டுவிடுங்கள்'' என்று
சொன்னான்.

வாதில் வென்றானும் பேச, கள்ளர்கள் நீரில் நடப்பானையும் நம்பினார்கள். படகில் ஏறினார்கள். அது மழைக்காலம். காவிரி சுழித்துக் கொண்டு போயிற்று. அவர்கள் படகில் ஏற, தூறலாக இருந்த வானம் வேகமாக பெருமழையாக பெய்தது. ஆனாலும் அவர்கள் போர் வீரர்கள் என்பதால் சற்றும் பயப்படாது படகுக்குத்துடுப்பு போட்டு காவிரியின் ஓட்டத்தைக் கிழித்துக் கொண்டு வடகரை நோக்கி படகை செலுத்தினார்கள். நீர் மேல் நடப்பானும் அவர்களோடு படகில் ஏறிக்கொண்டான்.

திருமங்கை மன்னனும், நிழலில் ஒதுங்குவானும், தாள் ஊதுவானும், வாதில் வென்றானும் கரையோரம் நின்று கொண்டு அந்தப் படகுகளையே உற்றுப்பார்த்தார்கள். படகு மழை இருட்டில் நடந்து நடுக்காவேரிக்கு போயிற்று. திடீரென்று ஓலங்கள் எழுந்தன. நீரில் நடப்பான் இரண்டு படகுகளையும் மோதவிட்டு கவிழ்த்துவிட்டு, தரையில் நடப்பதுபோல காவிரி நீரில் நடந்து கரை சேர்ந்தான். திருமங்கை மன்னன் பாதத்தில் விழுந்து 'என்னை மன்னிக்க வேண்டும்' என்று சொன்னான்.

''எதற்கு மன்னிப்பது. அவர்களுடைய பணி முடிந்து விட்டது. அரங்கன் அவர்களை அனுப்பியது இந்தப் பணிக்காகவே. தன் கோவிலைக் கட்டுவதற்கு நிதி திரட்டுவதற்காகவே இவர்களை அனுப்பினான். இவர்கள் பணி முடிந்துவிட்டதால்தான் இப்படிப் பேசுகிறார்கள். இவர்கள் நேரடியாய் வைகுந்தத்திற்கு போய்விடுவார்கள். இவர்களைப் பற்றி எந்தக் கவலையும் வேண்டாம்'' என்று காவிரி நோக்கி கைகூப்பி விட்டு திரும்பினான். அது ஆயிரம் பேரைக் கொன்ற இடம். கொலை செய்த இடம் கொல்லிடம், கோயிலுக்காக கொள்ளையடித்த ஆயிரம் பேர் இங்கே ஜலசமாதி ஆனார்கள். திகழ் சக்கரத்தான்

ஸ்ரீராமானுஜர் அந்த இடத்தை வாத்ஸல்யத்துடன் பார்த்தார். அந்த ஆயிரம் பேருக்கும் வணக்கம் சொன்னார். அவர்கள் மனம் குளிர்வதற்காக காயத்ரி ஜபம் சொல்லத் துவங்கினார்.

திருமங்கை மன்னனை காதலுடன் நினைத்துக் கொண்டார்.

மெல்ல விடிந்தது. வில்லிதாசன் போர்வையை உதறி எழுந்திருந்தான். நன்கு சாப்பிட்டதால் வயிறு தன்னை காலி செய்யும்படி கெஞ்சியது. அவன் வழி கேட்டான். கொள்ளிடத்துக்கு வழி அவருக்கு சொல்லப்பட்டது. ஒரே ஒரு வேலையாள் துணையோடு, தோளில் கோல் சார்த்தி அவன் கொள்ளிடம் நோக்கி நடந்தான். புதர் மறைவில் அமர்ந்தான். பிறகு கொள்ளிடத்தில் இறங்கினான். நீருக்குள் முங்கிக் குளித்தான். மிருதுவான மணலால் உடல் முழுவதும் தேய்த்துக் குளித்தான் மறுபடியும் முங்கினான். தெளிவான ஜலத்தில் சுத்தம் செய்து கொண்டு கரை யேறினான். துண்டு உதறி உலர் கோமணத்தை இடுப்பில் தரித்து ஒரு குச்சியில் வேட்டியையும் தலைப்பாகையையும் மேல்துண்டையும் உலர்த்தியபடியே அவன் சத்திரம் நோக்கி நடந்தான்.

திகழ் சக்கரத்தார் அவனை விருப்பத்தோடு பார்த்தார்.

''இவன் மாதிரி ஆயிரம் இளைஞர்கள் இருந்தால் அரங்கமா நகருக்கு வரும் எந்தத் துன்பத்தையும் நான் தடுத்து நிறுத்த முடியும், ஆயிரம் இளைஞர்கள் இவனைப் போல எனக்குக் கிடைக்குமா. அரங்கா...'' என கெஞ்சினார். ''குறைந்தபட்சம் இவனையாவது கொடு அரங்கா'' என்று வேண்டினார். அவர் ஈரத்துணிகளோடு அவரைத் தாண்டி திரும்பத் திரும்பி மறைந்தான்.

''ஐயா... வில்லிதாசரே கொள்ளிடத்தில்தானே குளித்துவிட்டு வருகிறீர்?''

''ஆமாம்.''

''ஏதோ அருவியில் குளித்துவிட்டது போல முகம் சிவந்து காணப்படுகிறதே. ஏன்?''

''இல்லையே. என் முகம் சிவந்து காணப்படுவது போல் எனக்கு தோன்றவில்லையே. நன்கு மண்தேய்த்து குளித்துவிட்டுதான் வருகிறேன். நீர் வெகு சுத்தமாக இருந்தது. குளுமையாக இருந்தது. குளியல் சந்தோஷமாக இருந்தது. மற்றபடி வேறு எந்த புதுமையும் எனக்கு புரியவில்லையே.'' வில்லிதாசன் வியப்போடு சொல்ல,

''அதென்னமோ தெரியவில்லை. நீர் நேற்றிங்கு வரும் போதும். காலையில் விழிக்கும்போதும் இருந்த களைப்பு முற்றிலும் மாறி ஒரு அரச குமாரன் போல் தோற்றமளிக்கிறீர். ஆகவேதான் ஏதாவது அருவியில் குளித்துவிட்டு வந்தீரா? இத்தனை சிகப்பாய் உடம்பு மாறிவிட்டதே என்று கேட்டேன். நான் நேற்றிரவு உங்களை சரியாக பார்க்கவில்லை போலிருக்கிறது.''

''ஐயா! நான் ராஜகுமாரன் அல்ல. மல்லன். மல்யுத்தம் புரிபவன்! ஸ்ரீரங்கத்தில் ஏதேனும் வேலை கிடைக்குமா?''

''மல்யுத்தம் செய்பவருக்கு என்ன வேலை? மல்யுத்தம்தானே வேலை?''

''இல்லை ஐயா மல்யுத்தம் செய்வது மட்டுமே மல்லர்கள் வேலையல்ல. போட்டி என்று வந்தால் மல்யுத்தம் செய்யலாம். மற்றபடி பெரிய தவ வலியுள்வர் களுக்கு காவலாய் இருப்பதும் கோவில் பண்டாரங்களுக்கு காவலாக இருப்பதும், அல்லது மாடுகளுக்கும், யானை களுக்கும் காவலாக இருப்பதும் என்னால் செய்ய முடியும்.''

''யானைகளுக்கு காவலாக இருக்க உம்மை போன்ற மல்லர் எதற்கு? தபஸ்விகளுக்கு காவலாக இருப்பது

வேண்டுமானால் சொல்லலாம். ஆனால், அப்படி யாரும் காவலுக்கு அழைக்கிறார்களா என்று தெரியவில்லை. யானைகளுக்கு காவலாக இருக்க முடியுமென்று சொல்கிறீர். யானைகளுக்கு காவல் அவசியமா என்பது எனக்குத் தெரியவில்லை. யானைகளுக்கு காவல் யானைப் பாகர் தானே. தனியே யாரும் காவல் செய்வார்களா?''

''இல்லை. யானைப் பாகர்கள் யானைகளை வழி நடத்துவார்கள். பழக்கப்படுத்துவார்கள். குளிப்பாட்டு வார்கள். இரவு நேரம் யானைகளை தொந்தரவு செய்யா மலிருக்க யானைப் பாகர்கள் காவலாட்களை நியமிப்பது வழக்கம். யானைகளை காவல் காப்பது ஒன்றும் எளிதான வேலை அல்ல ஐயா. யானைகளை காவல் காக்கவும் நான் சித்தமாயிருக்கிறேன்.''

''கோவிலுக்கு என்று ஆறு, ஏழு யானைகள் இருக்கின்றன. யானைகளை ஒரு வைணவர் பராமரித்து வருகிறார். அதற்காக கோவில் அவருக்கு மானியம் தருகிறது. அவரிடம் போய் கேட்போம். அந்த வைணவர் எனக்கு நன்கு தெரிந்தவர்தான்.'' சத்திரக்காரன் வில்லிதாசனை அழைத்துக் கொண்டு யானை கொட்டடியை நோக்கி நடந்தான்.

2

திருவானைக்காவல் கோவிலிலுள்ள அந்தப் பெண் யானையை வாங்கி ஸ்ரீரங்கத்திற்கு ஒருவர் தானமாகக் கொடுத்து விட்டார். நல்ல விலை கொடுத்து யானையை வாங்கினார். திருவானைக்காவலிலிருந்து யானையை ஓட்டிக் கொண்டு வந்து ஸ்ரீரங்கத்தில் நிறுத்தினார். ஸ்ரீரங்கத்திலுள்ள யானைகளுக்கு அருகே அதையும் கட்டிப் போட்டார். புதிய பாகனுக்கு திருவானைக்காவல் பாகன்

இந்தப் பெண்யானையைப் பற்றிய விவரங்கள் சொன்னான்.
கட்டளை மொழிகளை கற்றுக் கொடுத்தான். விடை
பெற்றுக் கொண்டு போனான். யானை தன்னுடைய பாகன்
வருவானென்று இரண்டு நாட்கள் அமைதியாகக் காத்துக்
கொண்டிருந்தது. வேறு பாகன் வந்து மிரட்டவே தலையை
அசைத்து அவனை விரட்டியது தும்பிக்கையால். அவனை
புறந்தள்ளியது. 'ம்ஹூம்' என்று ஓங்காரமிட்டு அவனை
நெருங்கவிடாமல் செய்தது. பாகன் மூங்கில் பிரம்பால்
'சுரீர்' 'சுரீர்' என்று அடித்தான். சங்கிலியைச் சுழற்றி பின்கால்
வழியாகப் போட்டு அதை சுருக்கிட்டு கட்டினான். சங்கிலி
பெண்யானையின் பின்காலை அதிகம் தொந்தரவு செய்தது.
பட்டினி போட்டால் கட்டளைக்கு கீழ்படியுமென்று மிகக்
குறைவாகவே உணவு கொடுத்தான். யானை கோப
மாயிற்று. திருவானைக்காவலுக்கு போக வேண்டுமென்று
முயற்சி செய்தது. மற்ற யானைகளுக்கு நடுவே நிற்க
மாட்டேனென்று பிடிவாதம் பிடித்தது. ஒருமுறை கட்டை
அவிழ்த்து கொள்ளிடக் கரைக்குக் குளிப்பாட்ட கூட்டிக்
கொண்டு போனபோது அது திருவானைக்காவலை நோக்கி
நடக்க ஆரம்பித்துவிட்டது. அதை மடக்கி மறுபடியும்
கொட்டகைக்கு கொண்டு வர இரண்டு நாட்களாயிற்று.
அப்படி கொட்டகைக்கு வருவதற்குள் பல முறை அது
மோசமாக அடிபட்டது. மற்ற யானையால் குத்துப்பட்டது.
மறுபடியும் பட்டினி போடப்பட்டது. யானைப் பாகனுக்கு
ஒரு மனக்கிலேசம் தொடர்ந்து இருந்தது. அந்த யானையை
மறுபடியும் திருவானைக்காவலுக்கு அனுப்பி வைத்து
விடுவதா அல்லது வேறு கோவிலுக்கு விற்று விடுவதா
என்று. பாகனும், பாகனின் முதலாளியான வைணவரும்
யோசித்துக் கொண்டிருக்கும்போது, கூட்டத்திலுள்ள
ஆண்யானை, அந்த பெண்யானையை தன்வசம் இழுக்க சில

தந்திரங்கள் செய்தது. பாகனில்லாததாலும், திருவானைக்
காவல் சூழ்நிலை இல்லாததனாலும், ஆண்யானையின்
தொந்தரவாலும், பாகனின் பிரம்படியினாலும் அந்த யானை
சோர்ந்து போயிருந்தது. இங்கே எல்லோரிடமும்
தந்திரமாகத்தான் நடந்து கொள்ள வேண்டுமென்று
நினைத்தது. அமைதியாக இருந்தது. அமைதியாக இருக்கும்
ஒரு நேரத்தில் உணவு அதிகம் தரப்பட்டது. உணவு நன்றாக
எடுத்துக் கொண்டு பாகன் சொன்னபடி முன்னும், பின்னும்
நகர்ந்து அவனுக்கு அருகே மெல்ல உராய்ந்து
தும்பிக்கையை தயக்கமாய் நீட்டி. காதுகளை பெரிதாய்
ஆட்டி, லேசாக அசைத்து பல நல்ல சைகைகளை செய்ய,
பாகன் சங்கிலியை அவிழ்த்து விட்டான். ஆனாலும்
யானைக்கு திருவானைக்காவல் சூழ்நிலை மறக்கவில்லை.
இங்கிருக்க பிடிக்கவில்லை, அது தப்பித்துப் போக
எண்ணம் கொண்டிருந்தது.

அவளுக்கு பெயர் பொன்னாச்சி. நடனம் அவள்
குலத்தொழில், அவள் தேவரடியார் இனத்தைச் சார்ந்தவள்.
கோவிலுக்கு தன்னை அர்ப்பணித்தவள். ஸ்ரீரங்கநாதர்
கோவிலில் நடனமாட உரிமைபெற்றவள். கோவிலிலிருந்து
அப்படி நடனமாடுவதற்கு பரம்பரை பரம்பரையாய்
மானியம் பெறுபவள் அவள் நடனக்கலையில் பல
நுணுக்கங்களைத் தெரிந்து வைத்திருந்தாள். எழுத படிக்க
தெளிவாக கற்றிருந்தாள். காவிய பாடங்கள் கேட்டிருந்தாள்.
ஸ்ரீரங்கத்தின் திருச்சிராப்பள்ளியில் செல்வந்தர்களின்
பெண்களுக்கு அலங்காரம் செய்வாள். மண்டபங்களிலும்,
ஸ்வாமி புறப்பாடு நடக்கிறபோது வீதி முனைகளிலும்
அவளும், அவள் குடும்பத்தினரும், அவள் தோழிகளும்
சுற்றி நின்று பலவிதமான ஆட்டங்கள் ஆடுவார்கள். இவள்
பேரழகியாக இருப்பதால் இவளை ஆட்டத்துக்கு நடுவே

கிருஷ்ணனாகவோ, ராதையாகவோ, ஆண்டாளாகவோ அல்லது நாச்சியாராகவோ அலங்கரித்து நிறுத்தி நடனமாடுவார்கள். மிக அழகாக அபிநயம் பிடிப்பாள். அவள் அபிநயத்திலும் சொக்க வைக்கும் அவள் அழகிலும் நெகிழ்ந்து முகமன் கூறாத ஸ்ரீரங்கத்து மனிதர்களே எவரும் இல்லை. அவள் எதிர்ப்பட்டால் நல்லது என்று சொல்லி அவளை ஒரு பொற்காசு கொடுத்து நல்ல வேலைகளுக்கு போகும்போதும் நல்ல காரியங்கள் செய்ய முற்படும்போதும் எதிர்படச் சொல்லி கேட்பார்கள். அவளுக்கு எது வேண்டுமானாலும் கொடுக்க பலர் தயாராக இருந்தார்கள். பெண்களும் அவளை மிகவும் மதித்தார்கள். அவள் ஓவியம் எழுதுவதில் கெட்டிக்காரியாக இருந்ததால், வீட்டிற்கு அழைத்துப் போய் சுவரில் பல்வேறுவித ஓவியங்கள் வரையச் சொல்லி சந்தோஷப்பட்டார்கள். அவளுடைய வாழ்க்கை அரங்கனையும், அரங்கன் பற்றிய கதைகளை சொல்வதிலும், அரங்கனை சுற்றி உள்ளவர்களுக்கு ஆறுதல் அளிப்பதிலேயும் கழிந்தது. அரங்கன் இல்லாத ஒரு வாழ்க்கையை அவளால் சிந்தித்துப் பார்க்க முடியவில்லை. அவள் ஒவ்வொரு அசைவும் கோவிலோடு பிணைக்கப் பட்டிருந்தது. அவளுடைய வாழ்க்கை மட்டுமல்ல, ஸ்ரீரங்கத்தில் பல பேருடைய வாழ்க்கை அந்தக் கோவிலோடும், அரங்கனோடும் பிணைக்கப்பட்டிருந்தது. அவர்கள் எப்போதும் கோவிலைப் பற்றியே பேசினார்கள், எப்பொழுதும் அரங்கனைப் பற்றியே புகழ்ந்தார்கள். எப்பொழுதும் ஆழ்வார்கள் பாடல்களையே பாடினார்கள். அது அல்லாது வேறு எது பற்றியும் அவர்கள் பேசுவதேயில்லை. அரங்கனைப் பற்றி பேசுகிற ஸ்ரீரங்கத்து மக்கள் மீது அவர்கள் மிகுந்த மதிப்பு வைத்திருந்தார்கள். ஸ்ரீரங்கத்தில் பிறந்தது புண்ணியமென்று நினைத்தார்கள். ஸ்ரீரங்கத்தில் உள்ள ஒவ்வொரு ஆண்களையும் அரங்க

னுடைய வேலையாளராக மதித்தார்கள். ஸ்ரீரங்கத்திதலுள்ள ஒவ்வொரு பெண்ணையும் அரங்கனுடைய தாசியாக நினைத்தார்கள். தன்னை அரங்கனுக்கு அர்ப்பணித்தவனாக கற்பித்துக் கொண்டார்கள். அந்த அரங்கனின் மீது காதல் கொண்ட அந்த தேவரடியாருக்கு பெயர் பொன்னாச்சி. பொன்னாச்சியை பொன்னா, பொன்னு என்று ஊர்மக்கள் அன்போடு அழைத்தார்கள்.

பின்னே மல்லிகை சூடி முடிவில் சிறிய தங்கக் குஞ்சலம் வைத்து கோத்து வங்கி அணிந்து, கழுத்தில் ஒரு ஆரம் அணிந்து, இடுப்பில் ஒரு முத்துமாலை, ஒட்டியாணம் அணிந்து கச்சைகள் இறுக்கிக்கட்டி. இடுப்புப் பாவாடையின் மீது தாவணி போட்டு, காலில் கனத்த தண்டைகள் ஒலிக்க படியிறங்கினாள். கூரையில்லாத மாட்டுவண்டி ஏறினாள். அந்த மாட்டுவண்டிக்கு எப்பொழுது வேண்டுமானாலும் கூரை போட்டுக்கொள்ள முடியும். கூரை தனியே செய்யப்பட்டு இருந்தது. அதை அப்படியே சொருகி வைத்துவிடலாம். ஆனால், இம்மாதிரி காலை வேளைகளில், பொன்னாச்சி கூரையில்லாத மாட்டுவண்டியில்தான் பயணம் செய்வாள். ஸ்ரீரங்கம் முழுவதும் அவள் போவதை வியப்போடு பார்க்கும். அப்படி ஸ்ரீரங்கத்தின் ஆண் பெண்கள் வியப்போடு பார்ப்பது பொன்னாச்சிக்குப் பிடிக்கும். அது மட்டுமில்லாமல் ஸ்ரீரங்கத்தைப் பார்த்துக்கொண்டே இந்த மாட்டுவண்டியில் பயணப்பட முடியும். சிறிய தஞ்சாவூர் மோழைகள் இரண்டு வண்டியில் கட்டப்பட்டிருந்தன. மாடுகள் மிகத்துடிப்பாக இருந்தன. வண்டி வில்வண்டியாக இருந்தபடியால் அதிகம் அதிர்வு தெரியவில்லை. வீட்டிலிருந்து கிளம்பி வண்டி மெத்தையில் ஏறி அமர்ந்து கொண்டு வண்டிக்காரர் வெங்கடேசன் ஓட்ட, அவள் மலர்

மாலை நிறைந்த கூடைகளை மடியில் வைத்துக் கொண்டாள். காலையில் கதவு திறந்து விஸ்வரூப தரிசனம் முடித்து ஸ்ரீரங்கத்திலுள்ள பெரிய மனிதர்கள் வந்து தீர்த்தம் அருந்திவிட்டுப் போன பிறகு விடிந்த ஒரு நாழிகையில் நடை சார்த்திவிடுவார்கள். உள்ளே போய் சுத்தம் செய்து அரங்கனுக்கு வேட்டி நகைகள் மாற்றி, மறுபடியும் தீப தூபங்கள் காட்டி, நைவேத்தியங்கள் முடித்து நன்கு வெயில் ஏறிய பிறகு கதவு திறப்பார்கள். அப்போது வெளியூர் யாத்திரீகர்கள் வந்து தரிசனம் செய்வார்கள்.

உள்ளூர் மக்களுக்கு விடிகாலை தரிசனமும் வெளியூர் மக்களுக்கு வெளிச்சம் வந்த பிறகு தரிசனமுமாய் ஸ்ரீரங்கம் நல்ல வழக்கங்களைக் கொண்டிருந்தது. உள்ளூர் மக்கள் இதனால் சந்தோஷம் அடைந்தார்கள் வெளியூர் மக்கள், உள்ளூர் மக்களின் இடைஞ்சல் இல்லாது தரிசனம் செய்து வந்தார்கள். பொன்னாச்சி உள்ளூராக இருந்தாலும். வெளியூர் மக்கள் பார்த்து வியக்கவேண்டும் என்பதற்காக, வெளியூர் மக்கள் வந்து தரிசனம் செய்யும்போது, மலர் மாலைகளுடன் அரங்கன் சந்நிதிக்குப் போவாள். அங்கு மலர்மாலையை அரங்கனுக்குச் சார்த்திவிட்டு கால்நாழிகை நின்று பாட்டுப்பாடி, நடனமாடிவிட்டு வருவாள். அவள் பாட்டையும், நடனத்தையும் வெளியூர் ஜனங்கள் விரும்பிக் கேட்பார்கள். கைதட்டிப் பாராட்டுவார்கள். 'அடடா, என்ன அழகு? என்ன அழகு?' என்று வியப்பார்கள். அப்படி மக்கள் பாராட்டுவதும், வியப்பதும் பொன்னாச்சிக்குப் பிடித்திருந்தன.

உள்ளூர் மக்களும் வியக்காமல் இல்லை. உள்ளூர் மக்களும் வியந்துதான் பாராட்டுவார்கள். திரும்பத் திரும்ப, உள்ளூர் மக்களின் பாராட்டு கேட்டு புளித்துப் போயிற்று. எனவே, வெளியூர் மக்கள் வந்து அரங்கனைத் தரிசிக்கும் போது, பொன்னாச்சி வேண்டுமென்றே அசைவாய் நடந்து,

அரங்கனை நமஸ்கரித்துவிட்டு வருவாள், அவளுக்கு அதில் ஒரு தனித்த சந்தோஷம் இருந்தது.

கோயில் வாசலில், வண்டியை நிறுத்திவிட்டு உள்ளே போனாள். தாயார் சந்நிதியை நெருங்கி நமஸ்கரித்தாள். தொடுத்த முல்லைச் சரத்தை தாயாரின் சிரசில் சூட்டச்சொன்னாள். அவள் கொடுத்த முல்லைச் சரத்தை வாங்கி நீர் தெளித்து தாயாரின் சிரசில் பட்டர் அழகாகச் சூட்டினார். மஞ்சள் பெற்றுக் கொண்டு, அதைக் கழுத்திலும், நெற்றியிலும், நெஞ்சிலும், வயிற்றிலும் தடவிக் கொண்டு. உள்ளங்கைகளில் குழைத்தெடுத்து இரண்டு புஜங்களிலும் அழுந்தத் தடவிக் கொண்டு அரங்கன் சந்நிதி நோக்கி நடந்தாள்.

மஞ்சள் வாசனையாக இருந்தது. மஞ்சள் பட்ட இடங்களெல்லாம் விறுவிறுவென்று ஒரு உணர்வு பரவியது. அரங்கன் சந்நிதியில் அவளுக்கு வழிவிட்டார்கள். அவள் எல்லாக் கூட்டத்தையும் தாண்டி, அரங்கனுக்கு அருகே போனாள். குறுக்குக் கட்டையை எடுத்துவிட்டு அவளுக்கு இடம் தந்தார்கள். ''வா, பொன்னாச்சி'' என்று வாய் நிறைய உள்ளுக்குள் இருந்த பட்டர் கூப்பிட்டார். நகர்ந்து கொண்டார்.

பொன்னாச்சி அரங்கனுக்கு அருகே போய் நமஸ்கரித்தாள். மாலையை பட்டரிடம் கொடுத்தாள். பட்டர் அந்த மாலையை அரங்கனுடைய உற்சவமூர்த்திக்கு அணிவித்தார். அவளுக்கு துளசியும் தீர்த்தமும் கொடுத்து சடாரி சாதித்தார். அவள் கைகூப்பிய வண்ணம் உற்சவருக்குப் பின் நீண்டு படுத்துக்கொண்டிருந்த அரங்கனைப் பார்த்தாள்.

இவரைத் தேடிக் கொண்டு எவ்வளவு தொலைவி லிருந்து மக்கள் வருகிறார்கள். இவரைப் பார்ப்பதற்கு

எத்தனை பேர் ஆசைப்பட்டிருக்கிறார்கள். வாசலில் பெரிய பைராகி கூட்டம் நிற்கிறது. ஸ்ரீரங்கம் பற்றிக் கேள்விப் பட்டு, முப்பது வருடங்களாகத் திட்டம் தீட்டி, காடு, மலை, ஆறுகளெல்லாம் கடந்து, இங்கே வந்து ஒரு மாதமாகக் குடியிருக்கிறது தினம், தினம் அரங்கனை நமஸ்கரித்துக் கொண்டு, அவர்கள் மொழியில் பாட்டுப் பாடிக் கொண்டிருக்கிறது. அந்த பைராகிக் கூட்டத்தைப் பார்க்கிற போதெல்லாம் பரம சந்தோஷமாய் இருக்கிறது. இப்படி தானும் ஊர் சுற்ற வேண்டும் என்று ஒரு ஆசை வந்திருக்கிறது.

இப்படி மக்களை இழுக்க இந்த கறுப்பு வண்ணமேனியானுக்கு எப்படி முடிந்தது? இது கடவுளா, இல்லை வெறும் சுதைச் சிற்பமா? இந்த முகமும், கையும், காலும், நகமும் செய்ய இதன் மீது ஏறி உட்கார்ந்துதானே ஆகவேண்டும்? ஒரு மனிதன் செய்த சிலைதானே இது? இதற்கு இத்துணை ஈர்ப்பு எப்படி வந்தது? கண்ணை மூடினால் நீண்டு, நெடுகக் கிடக்கும் இந்த மாலன் உருவம், திருமால் உருவம் எப்படி மனதிற்குள் பதிந்து போயிற்று? இதற்குள் இருக்கிற சக்தி என்ன? இது வெறும் சிலையா, இல்லை வேறு ஏதேனுமா?

இந்த அரங்கன் சிலைக்குக் கீழ் ஒரு கல் இருக்கிறது. அந்தக் கல்லை நகர்த்த முடியும். அந்தக் கல்லை நகர்த்தினால், கீழே படிகள் போகின்றன. அந்தப் படிகளின் வழியாக சுரங்கத்தில் இறங்கினால் கீழே மிக அபூர்வமான சாளக்கிராமங்கள் வைக்கப்பட்டிருக்கின்றன. அந்த சாளக்கிராமங்களுக்குக் கீழே ஒரு முனிவருடைய சமாதி இருக்கிறது. முனிவருடைய சமாதி அங்கிருப்பதால்தான் ஸ்ரீரங்கம் பொலிவோடு விளங்குகிறது.

ரங்கநாதருடைய சுதை உருவத்துக்குக் கீழ் சட்டை முனி என்கிற முனிவர் சித்த புருஷர் அடக்கமாயிருக்கிறார்.

அவர் சூட்சும ரூபத்தில் ஸ்ரீரங்கம் முழுவதும் அலைகிறார். அவர் சந்திர, சூரியர் உள்ளவரை அரங்கனுக்குக் கீழே அமர்ந்திருப்பார் என்று அவளுக்கு சொல்லப்பட்டிருந்தது. அவள் கண்மூடி ஆவலோடு அரங்கனைத் தாண்டி அந்த சட்டை முனியை வேண்டினாள். 'முனிவரே, நீர் இருப்பது எனக்குத் தெரியும். தினமும் நான் போடுகின்ற மாலை உன் தோளை வந்து அணையட்டும். அரங்கர் சிலைக்கு இந்த மாலை போடப்பட்டாலும், இதனை நான் உங்களுக்கே போடுவதாய்தான் நினைத்துக் கொள்கிறேன். தெய்வம் மனித ரூபம் என்று சொல்லப்படுகிறது. நீர் மனிதராக இருந்து தெய்வமாக மாறியவர். உம்முடைய சக்தியும் எங்கும் நிறைந்த இறைவன் சக்தியும் ஒன்றே. உம்முடைய சக்தியும், நாராயணன் என்று நினைத்துக் கொண்டிருக்கிற ஆதிமூலத்தின் சக்தியும் ஒன்றே. நீரே நாராயணன், நீரே ஆதிமூலம், நீரே அமைதியாக இருந்து இந்த பரதக் கண்டத்தை ஆட்சி செய்து கொண்டிருக்கிறீர். சட்டை முனியே, சட்டை முனியே! இந்த தாசி பொன்னாச்சியின் நமஸ்காரங்களை ஏற்றுக் கொள்ளும். என் மாலைகள் உங்களுக்குப் பிடித்திருக்கின்றனவா? இன்னும் வேறு ஏதேனும் வேண்டுமா என்று கருணை கூர்ந்து எனக்குச் சொல்லும். வார்த்தைகளாகவா? சைகை மூலமாகவா? எப்படிச் சொல்வீர்? எப்படியாவது எனக்குப் புரியும்படி தயவுசெய்து சொல்லுங்கள். சட்டை முனியே, சட்டை முனியே! இன்னும் ஒரு விண்ணப்பம், என் ஆயுட்காலத்தில் ஒரு முறை உங்களை நான் பார்க்க வேண்டும். நீங்கள் எப்படி இருந்திருப்பீர்கள் என்று நான் தெரிந்துகொள்ள வேண்டும் அதனால் ஏதேனும் ஒருமுறை தயவுசெய்து என் எதிரில் தோன்றி என்னை ஆசீர்வாதம் செய்யுங்கள். நான் இப்படித்தான் பொன்னாச்சி இருந்தேன் என்று எனக்குத்

தெரிவியுங்கள். செய்வீர்களா, முனிவரே' - அந்தப் பதினெட்டு வயது பெண் ஒரு குழந்தை போல் அரங்கனுக்கு எதிரே வேண்டினாள்.

''பொன்னாச்சி, தரிசனமாயிற்றா? நகர்ந்து கொண்டால், மற்றவர்கள் தரிசனம் செய்ய ஏதுவாக இருக்கும்.'' பட்டர் சொல்ல, அவள் வெளியே வந்தாள். கூட்டம் அவளையே ஆவலோடு பார்த்துக் கொண்டிருந்தது. காயத்ரி மண்டபத்தின் ஓரமாக நின்று கொண்டாள். தூண்களுக்கு இடையே, தொலைவில், அரங்கன் முகம் அவ்வப்போது தெரிந்தது. மறுபடியும் கைகூப்பினாள். 'சட்டை முனியே, சட்டை முனியே, நான் போய் வரவா? நான் இப்படிக் கூப்பிடுவது உங்களுக்கு ஒன்றும் வருத்தமில்லையே. திருப்பதி, திருமலைக்குப் போய் அங்கு வெங்கடேச பெருமாளிடம் நின்று 'கொங்கணரே', கொங்கணரே' என்று கூப்பிட்டால், கொங்கணர் ஏதேனும் ஒரு ரூபத்தில் வந்து ஆசீர்வாதம் செய்வாராம். அதே போல, அரங்கனுக்கு அருகில் இருக்கிற உங்களையும் சட்டை முனியே, சட்டை முனியே என்று கூப்பிட்டால் வந்து ஆசீர்வாதம் செய்ய மாட்டீர்களா என்ற நினைப்பில்தான் இப்படிக் கூப்பிடுகிறேன். தவறாக இருந்தால் மன்னித்துக் கொள்ளுங்கள். நான் வருகிறேன். நாளை காலை மறுபடியும் பார்ப்பேன்.' அவள் காயத்ரி மண்டபம் விட்டு வெளியே வந்தாள் துவாரபாலகர்களை வணங்கினாள். இறங்கி இரண்டாம் பிராகாரம் சுற்றி விமான தரிசனம் முடித்து வெளியேறினாள்.

அவளை யாத்ரீகர்கள் எல்லாரும் வியப்போடு பார்த்தார்கள். ''அடேயப்பா, என்ன அழகு? ஒரு கவிதை நடந்து போவதைப் போல் இருக்கிறது.'' ஒரு பைராகி வடமொழியில் வாய்விட்டுக் கூவினான்.

''ஸ்ரீரங்கம் நெளிந்தோடும் காவிரிக்கும், அழகிய தாசிகளுக்கும் பெயர் போனது என்று சொல்வார்கள். அது உண்மைதான் என்பது கண்ணெதிரே பார்த்துவிட்டோம்'' என்று உரக்கக் கூவினான். அவளுக்கு அது புரியவில்லை.

நான்காம் பிராகாரம் வழியாய் மறுபடியும் தாயார் சந்நிதி அடைந்து கம்பர் இராமாயணம் எழுதிய மண்டபத்தை ஒருமுறை சுற்றிக் கொண்டு அங்கிருந்தபடியே தாயாரைக் கும்பிட்டுவிட்டு வெளியே கோபுரம் தாண்டி வந்து அங்கே நின்றிருந்த மாட்டுவண்டியில், ஏறி வண்டியோட்டி மாட்டுவண்டியை செலுத்த, வீட்டுக்குப் போய் இனி என்ன செய்வது என்று யோசித்துக் கொண்டிருக்கும் வேளையில் எதிரே நாற்பது, ஐம்பது பேர் திபுதிபுவென்று ஓடி வந்தார்கள். மாட்டுவண்டி திகைத்தது முன்னும் பின்னும் அல்லாடிற்று. என்னாயிற்று என்று அவள் எழுந்து பார்த்தாள்.

அடுத்த கோபுர வாசலிலிருந்து ஒரு பெண்யானை பிளிறிக் கொண்டு, மாட்டு வண்டியை நோக்கி ஓடிவந்தது. தஞ்சாவூர் மோழை மாடுகள் பயந்துபோய் வட்டமடித்து திரும்பின. முழங்காலில் நின்று 'என்ன ஆயிற்று?' என்று பார்த்தவள், தூக்கியெறியப்பட்டாள். தரையில் விழுந்தாள். வண்டி வந்த வழி நோக்கி ஓடத்துவங்கியது. அவள் எழுந்து நிற்பதற்குள் யானை, வெகு அருகே வந்துவிட்டது. அவள் பயத்தில் வீறிட்டாள். முகத்தை பொத்திக் கொண்டாள். யானை அவளை வாரிக் கொண்டது.

யானையின் துதிக்கையில் மாட்டிய ஒரு விஷயத்தை அதிலிருந்து விலக்குவது எளிதா? அதுவும் மதம் பிடித்த யானையின் துதிக்கையிலிருந்து சிக்கிய பொருளை வாங்கி விட முடியுமா? அதை சேதமாக்க முடியாமல் துதிக்கை யிலிருந்து நீக்கிவிட முடியுமா? அந்தப் பெண்ணை யானை

வாரியதும் வீட்டு வாசலில் உட்கார்ந்திருந்த மல்லன் தெருவுக்குப் பாய்ந்து வந்தான். யானைமீது எகிறி, அதன் துதிக்கையை இறுக்கப் பற்றிக் கொண்டு, வலக் கையால் இறுக்கிக் கொண்டு, இடக் கையை அண்டக் கொடுத்து, துதிக்கையை நெரித்தான். யானை தளரவிட்டது. காலால் அந்தப் பெண்ணுடம்பை எத்த முயற்சித்தது. இடக்காலைத் தரையில் ஊன்றி, வலக்காலால் யானையினுடைய கால் வேகத்தை உள்ளங்காலால் வாங்கித் தடுத்தான். யானையைப் பின்னுக்குத் தள்ளினான்.

அந்தப் பெண் தரையில் கிடந்தாள். வேறு சில பேர் ஓடிவந்து அந்தப் பெண்ணைத் தூக்கிக் கொண்டு ஓடினார்கள். அவர்கள் ஓடியது தெரிந்ததும், மல்லன் யானையின் பிடியைத் தளரவிட்டான். தளர்ந்து பின்னுக்குப் போகும்போது, பளீரென்று வேகமாய் யானையின் கன்னத்தில் அறைந்தான். அந்த அடி உலக்கை அடிபோல யானையைத் தடுமாறச் செய்தது. யானை கோபமாயிற்று பிளிறிக் கொண்டு மல்லனை நோக்கி வந்தது. யானை துதிக்கையை வீசி மல்லனைத் தாக்க முயற்சித்தது. மல்லன் வெகுவேகமாக எழுந்து, யானையினுடைய தாக்குதலுக்கு சிக்காமல் நகர்ந்தான். யானை வேகமாக முட்ட வருகிற போது, அதனுடைய சிறு தந்தத்தை இறுக்கப் பிடித்துக் கொண்டு வலிக்கத் திருப்பினான். மறுபடியும் பளீரென்று அதன் இடக் கன்னத்தில் அறைந்தான். கண்ணுக்கு கீழே அடி வாங்கிய யானை நிலைகுலைந்தது. யானையினுடைய காதில் 'வீல்' என்று கத்திவிட்டு, பளீச்சென்று அதன் முதுகில் தாவி ஏறினான். கழுத்துக்கருகில் காலை வைத்துக் கொண்டான். மத்தகத்தில் ஓங்கி, ஓங்கி வேகமாகக் குத்தினான். கால்களை இறுக்கிக் கொண்டு, கழுத்தை நெரித்தான். இரண்டு காதுகளையும் வலிக்கத் திருகினான்.

குனிந்து முகப்படாம் மீது இரண்டு அறை வைத்தான். யானை இந்த வேகத்தைத் தாங்கமாட்டாமல் பின்னே வேகமாய்ப் போய் சுவரில் அவனைத் தேய்க்க முற்பட்டது. அவன் யானையின் கழுத்தை இறுக்கப் பற்றிக் கொண்டு, அது நீட்டிய துதிக்கைக்கு சிக்காமல் மறுபடியும் கன்னங்களில் அறைந்தான். யானை திரும்பி கொள்ளிடம் நோக்கி ஓடத் துவங்கியது. யானை ஓடட்டும் என்று காத்திருந்தான்.

யாரோ விசிறிப் போட்ட மூங்கில் கழியை லாவகமாய்ப் பிடித்து, அதன் முதுகில் வலிக்க அடிக்கத் துவங்கினான். பளீர், பளீர் என்று அடித்து ஓடு என்று விரட்டினான். யானையின் ஓட்டத்திற்கு ஏற்ப கால்களில் தாம்புக் கயிற்றைச் சுற்றிக் கொண்டு, கீழே விழாமல் லாவகமாய் சவாரி செய்தான். கொள்ளிட மணலில் இறங்கியதும், குரல் கொடுத்து ஜனங்களை விலக்கிவிட்டு தாம்புக் கயிறிலிருந்து கால்களை விடுவித்துக் கொண்டு. எகிறி மணலில் குதித்தான். திபுதிபுவென்று கரையேறினான். யானை தன் கோபத்தைக் குறைக்க மணலில் தந்தத்தை சொருகியது. உறிஞ்சி நாலு பக்கமும் வீசியெறிந்தது. தண்ணீருக்குள் இறங்கியது. விழுந்து அலை எழும்ப புரண்டது. மக்கள் கரையோரம் நின்று யானையின் அட்டகாசத்தை வேடிக்கை பார்த்தார்கள். யானைப் பாகர்கள் நீண்ட அங்குசங்களை எடுத்துக் கொண்டு, யானையை நோக்கி ஓடினார்கள். அவர்கள் கையில் தாம்புக் கயிறுகள் இருந்தன. போகும்போது மல்லனுக்கு நன்றி சொல்விட்டுப் போனார்கள். மல்லன் நடந்தான்.

எந்த வீட்டில் அவன் அமர்ந்திருந்தானோ, அந்த வீட்டின் முற்றத்தில் அவளைக் கிடத்தி விசிறிக் கொண்டிருந்தார்கள். அந்த வீட்டுப் பெண்கள் அவளை

மடியிலிருந்தி, முகத்தில் நீர் தெளித்துக் கொ
டிருந்தார்கள். அவன் உள்ளே ஏறி, எட்டி அந்த
பெண்ணைப் பார்த்தான். முகம் திருப்பிக் கொண்டான் ஒ
பெண் படுத்துக் கொண்டிருப்பதைப் பார்ப்பது நல்லதல்ல
மறுபடியும் தெருவுக்கு வந்தான். அவனை உள்ளுக்குள்
வருமாறு அந்த வீட்டின் தலைவி கூப்பிட்டாள். யாரோ ஒ
ஆண்பிள்ளையை, வீட்டின் தலைவி கூப்பிட, அது
தன்னைக் காப்பாற்றியவனைக் கூப்பிட, அவளுக்கு அ
பிடித்துப் போயிற்று. அவள் வெட்கத்துடன் எழுந்
உட்கார்ந்தாள். யார் தன்னைக் காப்பாற்றியது என்
பார்ப்பதற்கு ஆசைப்பட்டாள்.

''உங்கள் பெயர் வில்லிதாசனா? உங்கள் ஊ
உறையூரா? தொழில் மல்லனா? ஆனாலும் எவ்வளவு
தைரியமாக யானையைப் பிடித்தீர்? அபாரமய்யா!
இவ்வளவு விரைவாகப் போய் யானையை அறைந்தவரை
நான் பார்த்ததேயில்லை. யானை மிரண்டு போயிற்று. என்ன
அறை? அடேயப்பா!'' யாரோ வியந்து கூவினார்கள்.

''இதில் வலியைவிட துணிச்சல் தான் மி முக்கியமாக
இருந்தது. நீர் நகர்ந்து போன வேகத்தைப் பார்த்தால் அதை
யானையாகவே நினைக்கவில்லை. ஏதோ ஒரு எருமையை
அல்லது சிறிய கன்றை அடித்து நகர்த்துவதற்குப் போவது
போல் அத்தனை விரைவாகப் போனீர். வேறு யாராக
இருந்திருந்தாலும் பொன்னாச்சி நசுங்கி செத்துப்போ
யிருப்பது திண்ணம். பொன்னாச்சிக்கு உயிர் கொடுத்தீர்
அய்யா, அரங்கன்தான் உமது உருவில் வந்து பொன்னாச்சியைக்
காப்பாற்றிவிட்டான். அம்மா பொன்னாச்சி, எழுந்திரு.'' வேறு
யாரோ குரல் கொடுத்தார்கள்.

பொன்னாச்சி எழுந்து நின்றாள். வாசல் நோக்கி
லேசாய் தள்ளாடி நடந்தாள். வாசலில் உள்ள ஆண்கள்,

பெண்களின் வரவுக்காகக் காத்திருந்தார்கள். பெண்கள்
இருக்கின்ற இடத்திற்கு, ஆண்கள் தடக்கென்று
வரமாட்டார்கள். பெண்கள் வாரிச் சுருட்டி எழுந்திருப்பதை
அவர்கள் ஒரு இக்கட்டமான விஷயமாகக் கருதுவார்கள்.
அந்த நிலைக்குப் பெண்களை ஆளாக்கக் கூடாது என்று
அவர்கள் விரும்புவார்கள். எனவே, பெண்கள் தங்களுடைய
உடையைச் சீர்செய்து கொண்டு தங்களுக்கு அருகே வரும்
வரை காத்திருப்பார்கள்.

அந்த வீட்டில் உள்ள பெண்களும், பொன்னாச்சியும்
வாசலுக்கு வர, ஆண்கள் எழுந்து நின்றார்கள.
பொன்னாச்சியின் அழகு கண்டு மல்லன் திகைத்தான். தலை
கலைந்து கிடந்தது. உடை சற்று நெகிழ்ந்திருந்தது. முகத்தில்
மிரட்சியும், பயமும் இருந்தன. அதிகம் வேர்த்துப்
போயிருந்ததால், முகத்தில் லேசான எண்ணெய் பளபளப்பு
இருந்தது. கண்களில் கடும் சோர்வு தெரிந்தது. நடையில்
தளர்வு தெரிந்தது. ஆயினும் பொன்னாச்சி, தேவதை போல
அழகாக இருந்தாள்.

''இவர்தான் உன்னை தூக்கித் தனியே எடுத்துக்
காப்பாற்றியது. யானையை அப்புறப்படுத்தியது. இவர்
பெயர் வில்லிதாசன். உறையூரைச் சேர்ந்த மல்லன்.''

பொன்னாச்சி கைகூப்பி நமஸ்கரித்தாள். பதிலுக்கு
வில்லிதாசனும் நமஸ்கரித்தான். அங்கிருந்த எல்லா
ஆண்களையும்விட, வில்லிதாசன் இரண்டு அடி உயரம்
அதிகமாக இருந்தான். மூன்று உள்ளங்கைகள் அகலமாக
இருந்தான். இடுப்பு குறுகி, மார்பளவு பெரிதாக உறுதியான
கால்களோடும், கைகட்டி நின்றபோதும், அகலமான
தோள்களுடனும் மிக அழகாக இருந்தான். மனிதர்களில்,
அதுவும் குறிப்பாக ஆண்களில் அழகானவர் மிகச் சிலரே.
நிறைய மல்லர்கள் உயரமாக, அகலமாக இருந்தாலும்

முகத்தில் கொடூரமிருக்கும், பல்கடித்து, பல்கடித்து கன்னக் கதுப்புகள் மேடேறி இருக்கும். ஆனால் நீள்வட்டமாக வில்லிதாசன் முகம் இருந்தது. மீசை அளவாகவும், மெல்லியதாகவும் இருந்தது. புருவங்கள் கம்பி போல் நீண்டிருந்தன. கண்கள் பெரிதாக இருந்தன. உதடு சிவந்து, கனிந்து காணப்பட்டது. முகத்தில் ஒரு அமைதி இருந்தது. நான் மல்லன்தான், ஆனாலும் சண்டைக்காரனல்ல என்று அடிக்கடி சொல்லிக் சொல்லி, வலிந்து கொள்ளப் பட்ட ஒரு நிதானம் இருந்தது. தலைமுடிகள் மெல்லியதாய், நீண்டதாய் அடர்த்தியாய் இருந்தன. அவன் பொன்னாச்சியையே வியப்போடு பார்த்துக் கொண் டிருந்தான். அவள் என்ன பேசப் போகிறாள் என்று ஆவலாக இருந்தான்.

''என்னைக் காப்பாற்றியதற்கு மிக்க நன்றி. மரணத்தைக் கண்முன்னே இன்று சந்தித்தேன். நான் படுத்துக் கிடக்கையில், யானையின் உருவம் மிகப் பிரமாண்டமாய்த் தெரிந்தது. யானையினுடைய உள்ளங்கால் இன்னமும் என் கண் முன் நிற்கிறது. அது என் நெஞ்சில் கால் பதித்து நகரப் போகிறது என்று நான் நினைத்துக் கொண்டிருந்தேன். அது துதிக்கையில் வாரித் தூக்கியவுடன். இடுப்பில் ஒரு முறை லேசாக இடித்தது. அடுத்த இடி மிகப்பலமாக, வலப்பக்க முன் காலால் தாக்கப்போவதை நான்கண்டுகொண்டேன். அந்த அடிக்காக நான் காத்துக் கொண்டிருந்தேன். மிக வேகமாக ஒரு சத்தம் கேட்டதும், என் மீது யானை இடித்துவிட்டது என்று நினைத்தேன். ஆனால், யானையை நீங்கள் அறைந்தீர்கள் என்பது பிற்பாடு தெரிந்தது. மூன்று நொடிப் பொழுதுகளில் மரணம் என்னைத் தழுவியிருக்கும். இடுப்புத் துண்டாக ஒடிந்திருக்கும். இடுப்பு இற்று விழுந்து பிறகு, யானை

என்னை விசிறி வெகுதொலைவில் போட்டிருக்கும். ஓட்டுக் கூரையில் மண்டை அடிப்பட்டு, முதுகு கிழிந்து நான் எங்கேனும் தொங்கியிருக்கக் கூடும். என்னை மறுபடியும் அரங்கனுக்கு நடனமாடும் வண்ணம் செய்துவிட்டீர்கள். நீங்கள் என்னைப் பொறுத்த வரை மனிதரே இல்லை. நான் உங்களை நமஸ்கரிக்கிறேன்.'' அவள் மெல்ல அவன் பாதம் பணியக் குனிந்த போது, மிக வேகமாக வில்லிதாசன் தடுத்தான்.

''தாயே, உங்களைக் காப்பாற்றியது அரங்கன் என்றால், என்னை ஏன் வணங்க வேண்டும்? அரங்கனையே வணங்குங்கள். நாம் அனைவருமே அரங்கனின் கருவிகள். இதில் நாம் பரஸ்பரம் கைகூப்பிக் கொள்வோமே தவிர, காலில் விழுந்து வணங்கவேண்டிய அவசியமில்லை. எனக்கு உங்களைக் காப்பாற்றியது மிகுந்த சந்தோஷம், கர்வம், பெருமை. ஏனெனில், உங்களைப் பற்றி இந்த இடத்தில் எல்லோரும் உயர்வாகப் பேசுகிறார்கள். பொன்னாச்சி பிழைத்துவிட்டாள், பொன்னாச்சி பிழைத்து விட்டாள் என்று கூவுகிறார்கள். ஆக நீங்களும் அரங்கனும் மிக முக்கியமானவர் என்று நன்றாகத் தெரிகிறது. ஸ்ரீரங்கத்தில் ஒரு நல்ல இடத்தில் வாழ்பவர் என்று புரிகிறது. எனவே, என் காலில் விழவே வேண்டாம். அரங்கனை நமஸ்கரியுங்கள், போதும். நான் விடை பெறுகிறேன்.'' எல்லோரிடமும் கைகூப்பினான். நடந்தான்.

வைணவரோடு யானைக் கொட்டிலை நோக்கிப் போனான். தோளில், சரிகை கலந்த சால்வை தொங்க வில்லிதாசன் வேகமாய் நடந்து போவது அங்கு எல்லோருக்கும் ஆச்சரியமாக இருந்தது. அவன் உருவமும், அழகும் கொடுத்த திகைப்பு அங்கு எல்லோரையும் பரவசப்படுத்தி இருந்தது. ''அடேயப்பா, இவன் அல்லவா

மல்லன்!'' யாரோ ஒரு வார்த்தையில் வில்லிதாசனைப் பாராட்டினார்.

''வெறும் மல்லன் இல்லை, நல்ல மனிதன்.'' இன்னும் விவரம் தெரிந்தவர் யாரோ, அவனை உச்சாணியில் உயர்த்தி வைத்தார்.

அந்த வார்த்தை, பொன்னாச்சிக்குப் பிடித்திருந்தது. அவள் தன் வீடு நோக்கி நடந்தாள்.

யானையைப் பராமரித்து வந்த ஸ்ரீவைஷ்ணவர் அவன் மீது கோபம் கொண்டார். ''யானையின் குறுக்கே வந்து விட்டு, யானையை அறைவானேன்? இப்போது அறைந்தவனே, விரட்டியிருக்கும் யானையை யார் மீட்டு வருவது? எதற்காக யானையிடம் அவ்வளவு முரட்டுத்தனம் காட்ட வேண்டும்? அந்த யானை ஏற்கெனவே பயந்துபோய் இருக்கிறது. நீ இப்படி அதனை அறைந்து சாத்தினால், அந்த யானையை என்னால் ஸ்ரீரங்கத்துக்குக் கொண்டு வரவே முடியாது வெறும் பசு என்றால், எக்கேடும் கெட்டுப் போ என்று அவிழ்த்துவிடலாம். எருமை அதுபாட்டுக்குக் கிடக்கட்டும் என்று விட்டு விடலாம். ஒரு யானையை அப்படி விட முடியுமா? அப்படி விட்டால், ஸ்ரீரங்கத்தி லுள்ள பெரியவர்கள் சும்மா இருப்பார்களா? முட்டாள் தனமாக யானையை அறைந்துவிட்டு, என்னிடமே வேலைக்கு வந்து நிற்கிறாய்.'' அவர் கூச்சலில் நியாய மிருப்பதை வில்லிதாசன் உணர்ந்தான்.

''இப்போது என்ன செய்ய வேண்டும் என்று நினைக்கிறீர்கள்?''

''அந்த யானையை மறுபடியும் கொண்டு வந்து கொட்டடியில் கட்டு.''

யானைப் பாகர்கள் அதற்கு ஆட்சேபம் தெரிவித்தார்கள். ''வேண்டாம், அந்த யானை இருப்பதால், மற்ற யானைகளும் தொந்தரவு செய்கின்றன. அது திமிருவது போல மற்ற யானைகளும் திமிரத் தொடங்கிவிட்டன. அந்த யானை வந்த நாளிலிருந்து நன்றாகவே இல்லை. எனவே, அந்த யானையை மறுபடியும் திருவானைக்காவல் போய் விடுவதே நல்லது.''

யார் விடுவது? நீ போகிறாயா? அவன் போகட்டுமா? இவன் போகட்டுமா? எல்லாரும் மற்றவர் பெயர் சொன்னார்கள்.

யாரும் அந்த யானையை திருவானைக்காவல் கொண்டு போய்விட ஒப்புக்கொள்ளவில்லை. வில்லிதாசன் எழுந்தான்.

''ஒரு அடியான மிருகத்தை நான் அடித்துத் துன்பப்படுத்தியது அவஸ்தவம்தான். எனவே, அந்த பொறுப்பை நானே ஏற்றுக்கொள்கிறேன். யானையை திருவானைக்காவல் நோக்கி நான் நடத்திக் கொண்டு போகிறேன்.''

பாகன் கூறினான்.

''அது எளிதல்ல.'' - ஒரு யானைப

''எதுவும் எளிது, கடவுளுடைய கிருபை இருந்தால். நான் அரங்கனை நினைத்துக் கொண்டு, அந்த யானையை திருவானைக்காவலுக்கு அழைத்துப் போய் விடுகிறேன். இது என்னுடைய முக்கியமான வேலை. இதற்கு எவரும் கூலி கொடுக்க வேண்டிய அவசியமில்லை'' என்று சொல்லிவிட்டு அந்த யானைக் கொட்டடியை விட்டு வெளியே வந்தான். வேகமாக கொள்ளிடம் நோக்கி நடந்தான். தொலைவில் உள்ள யானையை வியப்போடு பார்த்தான். யானையை நோக்கி நடந்தான்.

யானையைச் சுற்றி மக்கள் கூட்டம் இருந்தது. ஒரு யானை தனியே நீர் தூக்கி, தூக்கி ஆடிக் கொண்டிருப்பதை அவர்கள் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தார்கள். ஒரு மெல்லிய மூங்கிலை ஒடித்து எடுத்துக் கொண்டு, அவன் யானைக்கு அருகே போனான். ''வா. திவானைக்காவல் போகலாம், வா'' என்று உரக்கக் கூப்பிட்டான்.

யானை அவனைப் பார்த்து நீர் பீய்ச்சியது. அவன் மீது முழுக்க நீர் விழுந்தது. கூட்டம் உரக்கச் சிரித்தது. ''வா, திருவானைக்காவல் போகலாம், வா'' என்று திருவானைக் காவலை நோக்கிப் பிரம்பு காட்டினான். யானை பின்னடைந்தது. யானையும், மனிதனும் மாறி, மாறி ஒருவரை ஒருவர் பயமுறுத்துவதை மக்கள் வியப்போடு பார்த்தார்கள். கூச்சலிட்டார்கள். ''மறுபடியும் சொல்கிறேன். முட்டாளே, திருவானைக்காவல் போகலாம், வா.'' அவன் திருவானைக் காவல் நோக்கி நடந்தான்.

யானை அவனையே பார்த்துக் கொண்டிருந்தது. 'வா, வா' யானையை நோக்கி கைகாட்டினான், யானை நகராமல், அவனையே உற்றுப் பார்த்தது. மறுபடியும் சிறிது தூரம் திருவானைக்காவல் நோக்கி நடந்தான். யானைக்கு லேசாய்க் குளிர்ந்தது. அந்த மரங்களை ஞாபகம் வைத்துக் கொண்டிருந்தது. யானை அவனை நோக்கி நடந்தது. அவன் முன்னே நடந்தான். யானைக்கும், அவனுக்கும் நல்ல இடைவெளி இருந்தது, அவன் கரையேறித் திரும்பிப் பார்த்தான். யானை நிதானமாக நீரில் நடந்து வந்தது. மெல்லக் கரையேறிற்று. கரைநெட்டுக்குத்தாக இருந்ததால் சற்றுத் திணறியது.

ஒரு நல்ல இடத்தை, சரியான சரிவை வில்லிதாசன் தேர்ந்தெடுத்தான். அந்த இடத்தில் மூங்கிலால் வேகமாக தோண்டி, யானை கால் வைக்கும் அளவுக்கு படிகள் போல

செய்தான். யானை தொலைவில் இருந்து அதைக் கவனித்துக் கொண்டிருந்தது. அவன் தோண்டிய இடத்தில் கால் வைத்து முழு பலத்தோடு மேலே ஏறியது. ஒரு உச்சிக்கு வந்ததும் யானையை நோக்கித் தன் கையை நீட்டினான். அவன் கையை துதிக்கையால் பற்றிக் கொண்டது. பின் காலால் அழுத்தி மேலேறியது. அவன் இழுத்து யானையை கரையில் ஏற்றினான். பின்னால் வந்த கூட்டம் பலமாய்க் கை தட்டியது. யானை அவனைத் தொட்டுக் கொண்டிருந்தது. யானையை அவன் வேகமாக கன்னங்களிலும், காதுகளிலும், உச்சந்தலையிலும் நெற்றியிலும் அழுந்தத் தடவிக் கொடுத்தான். யானையை அவன் மெல்லத் துதிக்கையைப் பற்றிக் கொண்டு, திருவானைக்காவல் நோக்கி நடந்தான்.

நடக்க, நடக்க யானைக்குத் தான் திருவானைக்காவல் நோக்கி நடக்கிறோம் என்று தெரிந்துபோயிருக்க வேண்டும். காதுகளை மிக சந்தோஷமாக ஆட்டியது, அங்கங்கே நிறுத்தி யானைகளுக்கு உண்டான கோரைப் புல்லைப் பிடுங்கிப் போட்டான். மெல்லக் கோயிலுக்கு உள்ளே போய், மண்டபங்கள் தாண்டி அங்குள்ள கொட்டடியில் கொண்டு போய் யானையை நிறுத்தினான்.

யானை பல முறை சந்தோஷத்தில் பிளிறியது. முன்னும், பின்னும் அலைந்தது. அங்குள்ள சுவர்களில் முதுகு தேய்த்தது. மரத்தைத் துதிக்கையால் கட்டிக் கொண்டது. அந்தப் பாகன் வந்து நின்றதும் மறுபடியும் பிளிறியது. அந்தப் பாகன் அருகே போய் யானையின் காலைக் கட்டிக்கொண்டான். யானை அவனைத் துதிக்கையால் தழுவிக் கொண்டது. ''எனக்குத் தெரியும். இவள் அங்கே தங்கமாட்டாளென்று. இவள் ஒரு கோயிலுக்கென்று வாழ்க்கைப்பட்டு விட்டாள். இன்னொரு

கோயிலுக்குக் கொண்டு போய் இவளை விட்டால் எப்படி வாழ்வாள்? யானைதான் என்றாலும், இவளுக்கு உள்ளுணர்வு மிக அதிகம். சிவன்பால் ஈடுபாடு மிக அதிகம், இவளால் வைணவக் கோயிலில் இருக்க முடியாது. என்ன செய்ய? விற்க வேண்டிய சூழ்நிலை.''

''ஏன் விற்க வேண்டும்?''

''என்னால் பராமரிக்க முடியவில்லை.''

''நான் காசு தருகிறேன். பிறகு மெல்ல, மெல்ல வேறு எவரிடமேனும் காசு வாங்கி, பராமரிக்க ஆரம்பித்து விடு. எத்தனை பொன் கொடுத்தால், ஒரு யானையை ஒரு மாதம் பராமரிக்க முடியும்?''

''நான்கு பொன்களுக்குப் பராமரிக்க முடியும்.''

''இந்தா, எட்டுப் பொன்!'' இடுப்பிலிருந்து சுருக்கவிழ்த்து யானைப் பாகனிடம் எட்டுப் பொன் நீட்ட, அவன் சந்தோஷமாய் வாங்கிக் கொண்டான்.

''ஒரேயொரு சத்தியம் மட்டும் செய்து கொடு. வயிறாரத் தீனிபோட்டு, மிக அன்பாகப் பேசு. இந்த யானை என் வாழ்க்கையை மாற்றிவிட்டது என்று நினைக்கிறேன். இவள் மீது எனக்கு மிகப் பெரிய காதல் இருக்கிறது. எனவே, ஒரு நாளும், ஒரு வேளையும் இவள் வயிறு வாட விடாதே.'' அவன் மெல்ல யானையைத் தடவிக் கொண்டு வெளியே வந்தான்.

ஸ்ரீரங்கத்திலிருந்து அவனைத் தொடர்ந்த அந்தக் கூட்டம், அவன் செய்கைகளை ஆவலுடன் பார்த்து, எட்டுக் கழஞ்சு கொடுத்ததைக் கவனித்துவிட்டு, வாய் பிளந்தது. 'அடேயப்பா, இந்த மல்லன் செல்வந்தனாக இருப்பான் போலிருக்கிறதே' என்று உரக்கப் பேசியது. அவனைச் சுற்றிச் சுற்றிக் கொண்டு ஸ்ரீரங்கம் நோக்கி நடந்தது.

''நீங்கள் யார்? என்ன செய்கிறீர்கள்? எதற்கு ஸ்ரீரங்கம் வந்திருக்கிறீர்கள்?'' என்று விசாரிக்கத் துவங்கியது. அடுத்த சில நாழிகையில் அவனைப் பற்றிய எல்லா செய்திகளும், ஸ்ரீரங்கத்திலுள்ள எல்லோருக்கும் தெரிந்தன. திகழ் சக்கரத்தார் மடத்துக்கும் எட்டியது. திகழ் சக்கரத்தார் மடத்தில் இரண்டு சீடர்கள் பேசிக் கொண்டார்கள். திகழ் சக்கரத்தார் தொலைவில் இருந்தாலும், காதைக் கூர்மையாக்கி, அவர்கள் பேசுவதைக் கேட்டார்.

''யாரோ மல்லனாம். உறையூரிலிருந்து வந்திருக்கிறானாம். யானையை அறைந்து அடக்கினானாம். பிறகு கொஞ்சி வசப்படுத்தினானாம். கொண்டு போய் திருவானைக்காவலில் விட்டுவிட்டு, பராமரிக்க எட்டுப் பொற்காசுகள் கொடுத்திருக்கிறானாம். யானைக்கே எட்டுப் பொற்காசுகள் கொடுப்பவன், மற்றவருக்கு எவ்வளவு கொடுப்பான்?'' என்று பேசிக் கொண்டார்கள். அவர், திகழ் சக்கரத்தார் மறுபடி சிரித்தார். ''நிறைய, நிறைய கொடுப்பான். அள்ளி அள்ளி கொடுப்பான்'' என்று வெறுமே எவரும் இல்லாத திசையை நோக்கிப் பேசினார். அவர் மூன்று காலமும் அறிந்தவர். அவர் பேசுவதில் மிகுந்த அர்த்தம் இருக்கும். புரிந்துகொள்ளத்தான் மற்றவருக்குத் தெரிய வேண்டும்.

3

கிருமிகண்டன். உறையூரை விட்டுக் கிளம்ப சித்தமானான். கழுத்துப் புண் சற்றுக் குறைந்தது. மருந்தில் சற்று குணம் தெரிந்தது. மறுபடியும் பயணப்பட வேண்டும் என்ற பேரவா எழுந்தது. அவன் படைகளுக்கு மதுரை நோக்கிப் போக வேண்டும் என்று கட்டளையிட்டான். படைகள் நகர ஆரம்பித்தன.

உறையூரில் தங்கும் சேனாதிபதிகளுக்கு அரசன் பல உத்தரவுகள் வழங்கினான், படைகளுக்கு எப்பொழு தெல்லாம் உணவு அனுப்பவேண்டும் என்று ஓலை எழுதிக் கொடுத்தான். உறையூர் கோட்டையின் பாதுகாப்பு பற்றிப் பேச்சு வந்தது 'அந்த மல்லனைத் துரத்தி விட்டீர்களே' என்று ஒரு வயதான சேனாதிபதி அரசனிடம் முறையிட்டார்.

''ஏன், அவனில்லாமல் கோட்டையைக் காவல் காக்க முடியாதா?'' நாலுரான் பேசினார்.

''நீங்கள் வாளோடு தெற்கே போய்விடுவீர்கள். வடக்கே இருந்து எவரேனும் தாக்கினால் இங்கு சரியான வாலிபர்கள் வேண்டாமா? வாலிபர்களைக் கட்டளையிட்டு வழிநடத்தும் தலைவர்கள் வேண்டாமா? அந்த மல்லனுக்கு உறையூர் வாலிபர்கள் பயந்தார்கள், நீங்கள் அவனை ஸ்ரீரங்கத்துக்குத் துரத்திவிட்டீர்கள். இப்போது இந்தக் கோட்டை பாதுகாப்பானது என்று சொல்ல முடியாது.''

''என்ன வேண்டுமென்று எதிர்பார்க்கிறீர்கள்?'' குறைசொன்ன சேனாதிபதியை நாலூரான் கேட்க, ''மறு படியும் அந்த மல்லனை வேலைக்கமர்த்த வேண்டும்.''

''அது முடியாது.'' - நாலூரான் உரக்கக் கத்தினார்.

மந்திரியின் கூச்சல் அரசருக்குப் பிடிக்கவில்லை. ''ஏன் கத்துகிறாய்? அவர்கள் ஆசைப்பட்டால், அந்த மல்லனை வைத்துக் கொள்ளலாம். அதே சம்பளம் கொடுக்கலாம். எனக்கு ஒன்றும் ஆட்சேபணையில்லை. நாம் ஒரு விளையாட்டிற்காக அவனை ஏவினோம். அந்த விளையாட்டிற்கு அவன் உடன்படவில்லை. அவ்வளவு தான். மற்றபடி அந்த மல்லன் மீது எனக்கு எந்த கோபமும் இல்லை, அவன் சோழ தேசத்தவன். சைவ சமயத்தவன். எதற்காக அவன் மீது இத்தனை கோபம்?''

''எவ்வளவு திமிரிருந்தால் ஸ்ரீரங்கம் போய் உட்கார்ந்து கொள்வான்?''

''அவனுடைய விருப்பம். நீ தொந்தரவு செய்தாய். அதனால் போய் உட்கார்ந்து கொண்டான். விடு... சேனாதிபதியே; நீ மறுபடியும் அந்த மல்லனை வேலைக்கு வைத்துக் கொள்ளலாம். சன்மானம் கொடுக்கலாம், எனக்கு எந்த ஆட்சேபணையும் இல்லை. நான் மதுரை எல்லை வரை போய்விட்டு, அங்கிருந்து உறையூர் திரும்புகிற போது, மறுபடியும் அந்த மல்லனை சந்திக்கிறேன் என்று சொல்.'' அரசன் குதிரையேறி தெற்கு நோக்கிப்போனான்

சேனாதிபதிகள் சந்தோஷப்பட்டார்கள். ஸ்ரீரங்கத்துக்கு ஓலை அனுப்பினார்கள் அதற்குள் ஸ்ரீரங்கத்தில் அவன், அழகான ஒரு வீடு பார்த்து அதற்கு ஒரு பொற்காசு வாடகை கொடுப்பதாகவும், ஒப்பந்தம் எழுதிக்கொண்டான். வீட்டைச் சுத்தம் செய்து கட்டில்களும், மணைப் பலகைகளும், சமையல் பாத்திரங்களும் தேவையானது வாங்கிப் போட்டு ஒரு வைணவரை சமையலுக்கு வைத்துக் கொண்டு, அரங்கனைத் தினசரி சேவிக்கின்ற ஆனந்தத்தை வில்லிதாசன் வகுத்துக் கொண்டான். உறையூர் ஓலை அவனை வேலைக்கு வரச் சொல்லியது.

மல்லன் யோசித்தான். தினம் காலையில் தஞ்சை நோக்கி ஒடுவோம். அதற்கு பதிலாக ஸ்ரீரங்கத்திலிருந்து ஆறு இறங்கி, உறையூர் நோக்கி ஓடினால், வேலைக்கு வேலையும் ஆயிற்று. வலுவுக்கு வலுவும் ஆயிற்று. காலை மட்டும் வேலைக்கு வருவேன். பிற்பகல் திரும்பி விடுவேன் என்று சொன்னால் மாலை முழுவதும் ஸ்ரீரங்கத்தில் நன்கு பொழுது கழிக்கலாம். விடிகாலை சூரிய உதயத்திற்கு முன்பு வேலைக்குப் போய்விடலாம் என்று நினைத்தான். சேனாதிபதியிடம் அப்படியே பேசிக் கொண்டான்.

தினமும் காலையில் கையில் கோலோடும், இடுப்பில் வாளோடும் மல்லன் வில்லிதாசன் ஸ்ரீரங்கத்திலிருந்து குதிரையைப் போல காவிரியை நோக்கி ஓடி, காவிரியில் இறங்கி, நீந்தி எதிர்க்கரைக்குப் போய் அங்கிருந்து உறையூர் நோக்கி ஓடுவது வழக்கமாகக் கொண்டான். பிற்பகல் அதே விதமாகத் திரும்பி வந்தான். உண்டான். உறங்கினான். மாலையில் அரங்கனையும், தாயாரையும் கண்குளிர தரிசித்தான்.

நடுவே நான்கு முறை பொன்னாச்சியைச் சந்திக்க நேர்ந்தது. இருவரும் ஒருவரையொருவர் ஏறிட்டுப் பார்த்துக் கொண்டு கைகூப்பினார்கள், பிறகு, நகர்ந்து போனார்கள். பொன்னாச்சியின் அழகு அவ்வப்போது ஞாபகம் வந்தது. மறுபடியும் பார்க்க வேண்டும் என்ற ஆவலைத் தூண்டியது. ஆனாலும், இது முறையில்ல என்பதால், மல்லன் சற்று விலகியிருந்தான். பொன்னாச்சிக்கும் மல்லனின் உயரமும், அகலமும், வலுவும், வியப்பைக் கொடுத்தன. அவனோடு எதிரும் புதிருமாய் உட்கார்ந்து சல்லாபிக்க வேண்டும் என்ற ஆசை வந்தது. ஆனாலும். இது பலர் பேச வாய்ப்பேற்படுத்தும் என்பதால் விலகி இருந்தார்கள். இருவரும் விலகி இருந்தாலும், ஒருவரைப் பற்றி ஒருவர் அதிகம் யோசித்துக் கொண்டிருந்தார்கள். பார்க்க வேண்டும் என்று ஆவல் கொண்டார்கள். பார்ப்பதற்காக மெல்ல சில முயற்சிகள் செய்தார்கள். அவள் இருக்கும் தெருப்பக்கம் அவன் நடந்து போவான். அவள் வீட்டின் பக்கம் மாட்டுவண்டியை நிதானமாக ஓட்டச் சொல்வாள். அவள் எப்பொழுது கொள்ளிடத்திற்கு வருகிறாள் என்று அவன் நேரம் தெரிந்து கொண்டான். அவன் காலை வேளையில் வேலைக்குப் போய்விடுகிறான் என்பதை அவளும் புரிந்துகொண்டாள். அவன்

கொள்ளிடத்தில் குளித்துவிட்டு, அரங்கனைச் சேவிக்க வருகிறான் என்பதால் மாலையில் குளிக்க வேண்டும் என்ற வழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ள முனைந்தாள்.

'குளிர் காலம், எதற்கு?' என்று வீடு கோபித்துக் கொண்டது. வெயில் காலம் வரை காத்திருக்க வேண்டுமோ என்று கவலைப்பட்டாள். குளிர் காலத்திலும் இரண்டு, மூன்று முறை போய் குளித்துவிட்டு வந்தாள். குளிக்கக் கரையிறங்கியபோது, வில்லிதாசன் சற்றுத் தொலைவே ஒரு மண்மேட்டில் உட்கார்ந்து, காவிரியைப் பார்த்துக் கொண்டிருப்பதையும், காவிரியின் ஆழமான பகுதிக்குள் போய் நீந்துவதையும் கவனித்தாள். கரைக்கு வந்தால் அல்லவா பேசலாம். வெகு தொலைவில் இருப்பவனோடு வலிந்து போய், ஒரு தாசி என்ன பேசுவது? அவளுக்கு வருத்தமாக இருந்தது. 'அட, மாலையிலும் வருகிறாளா? போய்க் கரையில் உட்கார்ந்து கொள்ளலாம். இத்தனை நாள் தள்ளிப் போய் நீந்திவிட்டு, தாசி வந்தவுடன் கரைக்கு வந்து உட்கார்ந்து கொண்டான் என்று உடனடியாக ஸ்ரீரங்கத்து வைஷ்ணவர்கள் நொட்டை சொல்வார்கள். எனவே மெல்ல, மெல்லப் போவதே நல்லது. உடனடியாகத் திரும்பாமல் இருப்பதே குற்றமாகும்.

மாலை வேளையில், பொன்னாச்சி குளிப்பதற்கு கொள்ளிடம் வருகிறாள் என்று தெரிந்து, ஸ்ரீரங்கத்தினுடைய பணக்கார இளைஞர்கள் அங்கே வட்டமிட்டார்கள். அவர்களும் குளிப்பதற்கு இறங்கினார்கள், அந்த பணக்கார இளைஞர்களுக்கு தாசி பொன்னாச்சி, வில்லிதாசனைத் தேடுகிறாள் என்பதோ, வில்லிதாசன் என்கிற மல்லன் தாசி பொன்னாச்சியால் கவரப்பட்டு அலைக்கழிக்கப்படுகிறான் என்பதோ தெரியவில்லை. அந்த இருவரும் தங்களுடைய ஆசைகளை, காதலை

வெளியே சொல்லிக் கொள்ள வெட்கப்பட்டார்கள். தயங்கினார்கள். நான் தேவரடியாள். ஒரு மல்லனைப் போய் நான் காதலிக்க முடியுமா? திருமணம் செய்து கொள்ள, எந்த மல்லனாவது சம்மதிப்பாரா என்று பொன்னாச்சி யோசித்தாள்.

வில்லிதாசா, நேற்று ஸ்ரீரங்கத்துக்கு வந்துவிட்டு இன்று தாசி உறவா? நல்லது. காசு இருக்கும்வரைதானே என்று ஸ்ரீரங்கத்து வைஷ்ணவர்கள் ஏளனம் பேசுவார்கள். இது என்ன? இவள் அழகு எனக்கு முக்கியமா? அல்லது வேறு ஏதேனும் என்னைக் கவர்ந்து இழுக்கிறதா? நான் முதலில் புரிந்துகொண்டுதான் இவளிடம் பேசத் துவங்க வேண்டும். இந்தப் பெண் எனக்குள் என்ன பாதிப்பை ஏற்படுத்துகிறாள் என்பதை நான் யோசிக்க வேண்டும். திரும்பத் திரும்பப் பார்ப்பதால் ஏற்படுகின்ற பிரேமை மட்டும் முக்கியமானதாய் இராது. இவளை நான் அனுபவிக்க ஆசைபடுகிறேனா அல்லது இவளை அண்டி வாழ ஆசைப்படுகிறேனா? இவள் எந்த விதத்தில் எனக்கு முக்கியமானவள்? மல்லன் வில்லிதாசன் அமைதியாய் யோசிக்கத் துவங்கினான். அவளைப் பற்றியே இடைவிடாது நினைக்கத் துவங்கினான்.

தை மாதம், நடுங்கும் குளிர் போய் மாசி மாதத்து ஊதற்காற்றும் நகர்ந்து, பங்குனியின் இதமான நேரம் துவங்கியது. மல்லிகையும், முல்லையும் மலரத் துவங்கின. சாமந்தி கொட்டத் துவங்கியது. அரளி குப்பென்று பூத்தது. மருக்கொழுந்து நெடியடித்தது. பெரிய, பெரிய நாகலிங்க மலர்கள் மலர்ந்தன. தாமரைகள் வெயில் பட்டதும், பெரிது, பெரிதாய் விரிந்தன. பூமியின் ஈரத்தை உறிஞ்சி. வெயிலின் சுகத்தை வாங்கி தாவரங்கள் அற்புதமாய் செழிக்கத் துவங்கின. பங்குனி மாதம் தமிழ்நாட்டின் எல்லாக்

கோயில்களும் உற்சவத்திற்குத் தயாராகி விடும். குளிர் குறைந்து, வெயிலும் அதிகமில்லாமல், தாவரங்கள் செழித்து வளர்ந்து, காய்கறிகளும், கனிகளும் பெருகத் துவங்கிய இந்த காலகட்டத்தில் உற்சவங்கள் மக்களுக்கு சந்தோஷம் தரும். அடுத்த வேலையை ஆரம்பிக்கும் முன்பு உழவர்கள் ஊர் ஊராய்ப் போய் சாமி தரிசனம் செய்து, சந்தோஷமாக ஊர் திரும்பி, தங்களுடைய வேலையைக் கவனிப்பதற்கு இந்த பங்குனித் திருவிழாக்கள் உதவி செய்தன. தை மாதம் அறுவடை முடித்து, மாசி மாதம் அவைகளை விற்றுக் காசாக்கி திருமணம் போன்ற விஷயங்களை முடித்து ஊர் ஒன்றுகூடி குடும்பம், குடும்பமாய் யாத்ரீகம் செய்வார்கள். யாத்ரீகம் செய்ய பங்குனி மாதம் மிகச் சிறந்த மாதம். குளிரும், வெயிலும் அதிமில்லாத காலம். இந்த பங்குனி உற்சவத்திற்கு பெரியாழ்வாருடைய பாசுரங்கள் பத்தை, நாட்டிய நாடகமாக்க ஸ்ரீரங்கத்து தேவரடியார்களில் ஒரு பிரிவினர் முயற்சி செய்தார்கள். வடக்கு உத்தர வீதியிலுள்ள அவர்களுடைய வீட்டில் அந்தப் பாசுரங்களை பல முறை படித்து, விவாதித்துப் புலவர்களோடு சேர்ந்து கொண்டு தனியாக பாட்டுகள் எழுதி, அந்தப் பாசுரங்களையும் பண்ணமைத்துப் பாடி நாட்டிய நாடகமாக உருவாக்கி னார்கள்.

ஒரு மகள் அரங்கன் மீது பித்தாக மாற, அவன் மீது காதல் கொள்ள, அந்த மகளின் தாய் புலம்பும்படியாக அந்தப் பத்து பாசுரங்களும் அமைந்திருந்தன. இந்த பாசுரங்களுக்கு பொன்னாச்சி மகளாக நடித்தாள். தாயாக ஒவ்வொரு பாசுரத்திற்கும் ஒவ்வொரு பெண்மணி நடித்தார்கள். மகள் உடம்பு முழுவதும் புழுதியாக தலைவாரிக் கொள்ளாமல், உடைகளைச் சரியாக உடுத்திக் கொள்ளாமல், கையில் கிளியை வைத்துக் கொண்டு

'அரங்கா, அரங்கா' என்று பிதற்றிக் கொண்டு, அவன் நினைப்பாகவே இருக்கிறாளே என்று ஒரு தாய் புலம்பினாள். கற்றையாய் முடி இன்னும் வளரவில்லை. எல்லா பற்களும் ஒழுங்காக இன்னும் முளைக்கவில்லை. சில பெண்களோடு ஒன்றாக உட்கார்ந்து அரங்கனுடைய பெருமை பேசி, இவள் மாயனான மணிவண்ணன் மேல் காதல் கொண்டிருக்கிறாளே என்று இன்னொரு தாய் புலம்பினாள்.

வெண்மணலில் சங்கு, சக்கரம் எழுதுகிறாள். தண்டும், வாளும், வில்லும், எழுதுகிறாள், அரங்கனைப் பற்றியே இடைவிடாது பேசிக் கொண்டிருக்கிறாள். ஆனால், இவளுக்கு இன்னும் மார்பகமே சரியாக வளரவில்லை. அதற்குள் காதல் ஒரு கேடா என்று இன்னொரு தாய் புலம்புகிறாள்.

அடுத்தபடியாய்,

காறை பூணும் கண்ணாடிக் காணும் தன் கையில் வளை குலுக்கும்
கூறை உடுக்கும், அயர்க்கும் தன் கொவ்வைச் செவ்வாய் திருத்தும்
தேறி தேறி நின்று ஆயிரம் பேர்த் தேவன் திறம் பிதற்றும்;
மாதில் மாமணி வண்ணன் மேல் இவள் மால் உறுகின்றாளே

இதற்கு பங்குனி உத்திர திருவிழாவின்போது பொன்னாச்சி அபிநயம் செய்தாள்.

கையிலே வளைகளைக் குலுக்கிக் கொண்டு, காறை என்கிற ஒரு அட்டிகையைக் கழுத்திலே அணிந்துகொண்டு கண்ணாடியில் தன் முகத்தைப் பார்த்துக் கொண்டு, புதிதாய் உடுப்பு உடுத்திக் கொண்டு, உடுத்திய பிறகு அயர்ந்து அமர்ந்து கொண்டு, உதட்டுக்குச் சாயம் எழுதிக் கொண்டு, திரும்பத் திரும்ப ஆயிரம் விதமாக அரங்கனுடைய பெயர்களைச் சொல்லிக் கொண்டு, பைத்தியம் போல் இவள் வீட்டில் தனித்து உறங்கிக்கொண்டிருந்தாள். இவள்

காதலை என்னால் காண சகிக்கவில்லையே என்று தாயார் வாட, தாயார் புலம்ப, ஒவ்வொரு திசையை நோக்கி அரங்கனின் விதம்விதமான பெயர்களைப் பொன்னாச்சி அபிநயம் செய்தபோது பலருக்கு அழுகையே வந்தது.

முதல் வரிசையில் அமர்ந்திருந்த வில்லிதாசன் மெய் மறந்து போனான். எவ்வளவு அழகு அந்த பொன்னாச்சி? எத்தனை அற்புதமான அபிநயம்? ஆண்டாள் மீது பெரியாழ்வார் கொண்ட பாசம் இந்தக் கவிதைகளில் வெளிப்படுகிறது. ஆண்டாள் இப்படி திகைத்திருப்பாள். பெரியாழ்வார் தனியே நின்று தன்னுடைய மகளுடைய பேதைமையை அல்லது பித்தை நினைத்து வேதனைப் பட்டிருப்பார். இவள் அரங்கன் மேல் காதல் கொள்வதைத் தடுக்கவும் முடியாமல், அரங்கன் மேல் காதல் கொள் என்று ஆற்றுப்படுத்தவும் முடியாமல், அந்த பெரியாழ்வார் ஒரு தாய் போல் ஆசைப்பட்டிருக்கிறார். அரங்கன் தெய்வம். அவரிடத்தே இந்தக் குழந்தையை எப்படி ஆற்றுப் படுத்துவது? அரங்கன் இல்லை என்று இந்த குழந்தைக்கு எப்படிச் சொல்வது? அரங்கனைக் கற்பித்ததே நாம். இப்போது இல்லை என்று சொல்ல முடியுமா? அதேசமயம் அரங்கனிடம் இவளைக் கொண்டு போய் சேர்க்க முடியுமா? பெரியாழ்வார் வேதனைப்பட்டிருக்கிறார். பெரியாழ்வார் பட்ட அவஸ்தையை, தாயாக நின்று பட்ட அவஸ்தையை மற்ற தேவரடியார்கள் நடித்துக் காட்ட, ஒரு பைத்தியம் போல், பித்து போல், காதல்வயப்பட்டுக் கிறங்கிக் கிடக்கின்ற பெண் போலும் பொன்னாச்சி நடித்துக் காட்டினாள். ஸ்ரீரங்கம் அதிர்ந்து போயிற்று.

''அடி அம்மா, போறும்டி,'' ஒரு கிழவர் கதறினார். ''அரங்கா! என்னை ஆண்டாளாக்கு.'' யாரோ அழுதார்கள்.

பெரிய உபன்யாசகர்களெல்லாம்கூட முதல் வரிசையில் அமர்ந்து, அவளைக் கைகூப்பி வணங்கினார்

கள். அவள் ஆண்டாளைப் போல் சபையில்தோன்றியதும் விளக்குகள் ஏற்றப்பட்டதும், தீப்பந்தத்துக்கும் நடுவே ஜொலித்ததும் எல்லோரும் ஏழுந்து நின்று 'வாழ்க, வாழ்க' என்று பாடினார்கள். ஆண்டாளின் புகழைச் சொன்னார்கள். பொன்னாச்சியின் நாடகம் முடிந்து அவள் கூண்டு வண்டிக்குள் ஏறி தன் வீட்டுக்குப் போனாள். சபை கலைந்து, அவளைப் பற்றியே பேசிக்கொண்டு போயிற்று.

வில்லிதாசன் கூண்டுவண்டியைப் பின்தொடர்ந்து போனான். அவள் வீட்டுக்குள் இறங்குவதைப் பார்த்தான். அவனும் நுழைந்தான் முன்பக்கத் திண்ணையில் அமர்ந்து கொண்டான். யாரோ வாத்தியக்காரா, யாரோ வண்டியோட்டி என்று அவர்கள் வீட்டார்கள் நினைத்துக் கொள்ள, அவள் உள்ளே தாயாரோடு பேசுவது கேட்டது.

'கொண்டையை அவிழ்த்து விடம்மா. உடம்பைத் துடைத்துவிடம்மா'' என்றெல்லாம் அவள் உத்தரவிட்டுக் கொண்டிருக்க, சேடிகளைப் போலவும், உறவுகளைப் போலவும் உள்ள முதிர் பெண்கள் அவளுக்கு உபசரணைகள் செய்து கொண்டிருந்தது நடமாட்டத்தால் தெரிந்தது. யாரோ ஒரு பெண் வெளியே வந்து இவளைத் தாண்ட திடுக்கென்று நின்றாள். யாரென்று கேட்டாள்.

''என் பெயர் வில்லிதாசன். நான் உறையூர் கோட்டைக்குள் மல்லனாக இருப்பவன். ஸ்ரீரங்கத்தில் வசிப்பவன். நாட்டிய நாடகம் பார்த்துவிட்டு, பிரிய மனமில்லாமல் இங்கு வந்துவிட்டேன். ஒரு முறை பொன்னாச்சியைப் பார்த்துக் கைகூப்பி விட்டுப் போய் விடுகிறேன்.''

''எதற்கு? எதற்குத் கைகூப்ப வேண்டும்?'' அவள் பதறினாள்.

தேவரடியார்கள் ஆண்களை அதிகம் நம்புவதில்லை. அவர்களால் எப்போதும் உபத்திரவம் என்று அவர்களுக்குச் சொல்லிக் கொடுக்கப்பட்ட பாடம். ''அம்மா, இங்கு வாருங்கள்'' உரக்கக் கூவி, துணைக்கு சில பெண்களை அழைத்தாள். முதிய பெண்கள் வாசலுக்கு வந்தார்கள். இடுப்பில் கைவைத்து ஏற, இறங்க பார்த்தார்கள். ''என்ன வேண்டும்?'' என்றார்கள் ''என் பெயர் வில்லிதாசன். உறையூரைச் சேர்ந்த மல்லன்.'' உள்ளுக்குள் கொண்டையை அவிழ்த்துக் கொண்டிருந்தவளுக்குக் காது கேட்டது. திடுக்கிட்டு நிமிர்ந்தாள். வாசலுக்கு ஓடிவந்தாள். இருட்டான ஆளோடியில் நின்று அவனைப் பார்த்தாள். அதிசயித்தாள். 'என்ன ஆயிற்று, இவனுக்கு? ஏன் பின் தொடர்ந்து இங்கு வந்திருக்கிறான்? தேவைப்பட்டால் நாளை காலை கோயிலுக்குள் பேசிக்கொள்ள முடியாதா? இங்கு இவர்களிடம் மாட்டிக்கொண்டு விழிக்க வேண்டுமா? என்ன முட்டாள்தனம்? தேவரடியார் வீட்டுக்கு சட்டென்று கால் வைக்கலாமா? தவறு செய்து விட்டீரே.' மனதுக்குள் நொந்தாள். ஏதேனும், வம்பு வருவதற்குள் தடுத்துவிட வேண்டுமென்று, ''என்ன, என்னை தனியே விட்டுப் போய் விட்டீர்கள்? உள்ளே வாருங்கள்'' என்று அதட்டினாள். பெண்கள் அவள் பக்கம் திரும்பினார்கள். ''அவரைப் போகச் சொல்லிவிட்டு வாருங்கள்.''

''இவர் யாரென்று உனக்குத் தெரியுமா?''

''இவர்தான் என்னை யானையிடமிருந்து காப்பாற்றியவர். இவரை எடுத்தெறிந்து ஏதும் பேசிவிடாதீர்கள். இவர் என்னைப் பார்க்க வந்திருப்பதாக சொன்னதை நான் கேட்டேன். நாளைக் காலை கோயிலில் பார்த்துக் கொள்ளலாம். இங்கு, இப்போது இங்கு தங்க

வேண்டாம். அனுப்பிவிடுங்கள்.'' அவசரமாகச் சொன்னாள்.

அந்தப் பெண்கள் முறைப்பாகப் பேசுவதைத் தவிர்த்தார்கள். அவரைப் பார்த்து கைகூப்பினார்கள். ''நீங்கள் யானையிடமிருந்து காப்பாற்றினீர்களாமே? மிக்க நன்றி. உங்களைத் தேடி வந்து நாங்கள் வணங்க வேண்டும் என்று இருந்தோம். ஆனால், இவள்தான் வேண்டாம் என்று தடுத்துவிட்டாள். அவள் சொன்னது போல இருட்டு நேரத்தில், எங்கள் வீட்டு வாசலில் நீங்கள் அமர்ந்திருக்க வேண்டாம். நாளை காலை கோயில் மண்படத்தில் எங்கேனும் சந்திப்போம்.'' அவர்கள் சென்றார்கள். அவன் இறங்கினான். கதவு சார்த்தினார்கள். தெரு வழியே நடந்தான்.

அவன் மனம் அவளையே நினைத்துக் கொண்டிருந்தது. ''என்ன அழகு? என்ன அழகு? தலை கலைந்த போதும் அவள் அழகாகத்தானே இருந்தாள். அந்த இருட்டுக்குள்ளும் அந்த விழிகள் பளபளப்பாகத்தானே இருந்தன. இப்பேர்ப்பட்ட அழகு பூமியில் உண்டா? பெண் அற்புதம்தான். இவளைவிட அற்புதமான பெண் எவளேனும் உண்டா? இவளிடம் அழகு தாண்டி ஏதோ ஒரு காந்தி இருக்கிறது. கண் விழிகள் தாண்டி உள்ளுக்குள் ஒரு கருணை பொங்குகிறது. உதட்டின் சிவப்பு தாண்டி அந்த உதடு துடிப்பது, அழகாக இருக்கிறது. அந்த மேனியின் வழவழப்பு தாண்டி, அதிலிருந்து ஒரு ஒளிவீச்சு ஏற்படுகிறது. லேசாய் வயிறு இருக்கிறது. மெலிந்துதான் இருக்கிறாள். ஆனாலும், இவள் நடையில் ஒரு சிங்காரம் இருக்கிறது. வேறு என்ன இவளிடம் இருக்கிறது என்று தெரியவில்லை. ஆனால் ஏகப்பட்ட விஷயங்கள் இவளிடம் இருப்பதை உணர்கிறேன். சே, சடக்கென்று வீட்டு வாசலில்

போய் அவளைப் பார்க்க வேண்டும் கைகூப்ப வேண்டும் என்று சொல்லிவிட்டேன். எவ்வளவு முட்டாள்தனம்? வேறு யாரேனும் பார்த்திருந்தால் எப்படிச் சிரித்திருப் பார்கள்? தாசியைக் கைகூப்புவதற்காகப் போனீரா! நல்லது, கூப்பிவிட்டு வந்துவிட்டீரா? ரொம்ப சந்தோஷம்! வேறு என்ன செய்வதாக உத்தேசம்? உலகம் தேவரடியார்களை வேறுவிதமாகத்தான் நினைத்தது. கைகூப்பிவிட்டு வந்தேன் என்றால் ஒரு நாளும் அது ஏற்காது.

அவளுக்கும் அன்று இரவு தூக்கம் வரவில்லை. 'என்ன. வீடு வரை வந்துவிட்டான்? வந்து கைகூப்ப வேண்டும் என்று சொன்னானே? நிஜமா? பொற்காசுகள் ஒரு பை எடுத்து வந்து, எனக்கு இவள் வேண்டுமென்று ஏன் கேட்கவில்லை? அப்படித்தானே ஆண்கள் மடக்கினார்கள். பொன்னாச்சி தனக்கு சுகம் தர எவ்வளவு காசு தர வேண்டும் என்றுதானே தாயாரிடம் பேரம் நடக்கும்? அம்மா, எல்லோரையும் ஒதுக்கி, 'அவள் அரங்கனுக்கு என்று படைக்கப்பட்டவள். அரங்கனின் புகழைப் பாட வளர்பவள், இப்போதைக்கு அவளை எவருக்கும் வாழ்க்கைப்படுத்த நாங்கள் விரும்பவில்லை' என்று விரட்டிவிடுகிறாளே. என் மனம் இவனை நோக்கி சென்றிருக்கிறதே. அம்மாவிடம் சொன்னால், அம்மா ஏற்பாளா? என்ன கிறுக்காப் பிடித்திருக்கிறது என்று ஏசுவாளா? ஆனால், இந்த மல்லனை மனம் நாடுகிறது. இவனோடு உட்கார்ந்து பேச வேண்டும் என்ற ஏக்கம் இருக்கிறது. இவன் நிற்பதையும், நடப்பதையும் பார்க்க ஆசை இருக்கிறது. இவன் மல்யுத்தம் செய்தால், முதல் வரிசையில் உட்கார்ந்து, கைகொட்டி இவன் சண்டை யிடுவதை வேடிக்கை பார்க்க வேண்டும் என்ற அவா எழுகிறது. அவன் ஓடுகிறபோது. குதிரை வண்டியேறி

இவனைப் பின்தொடர வேண்டும் என்று ஆவலாக இருக்கிறது. இவன் ஓடுவதை வேடிக்கை பார்க்க விருப்பம் இருக்கிறது. கருங்கற்கள் தூக்குவதையும், கர்லாக் கட்டை சுற்றுவதையும் அருகே நின்று கண்சிமிட்டாமல் பார்க்கின்ற எண்ணம் எழுகின்றது. இரும்புபோல. அரைப்பனை உயரத்திற்கு இருக்கிற இந்த மல்லன் மீது மனம் நாடுகிறது. இது என்ன? என்ன காரணம்? உடம்பா? இவ்வளவு வலிவுள்ளவன் வேண்டுமென்று எல்லாப் பெண்களுக்குமே ஆசை இருக்குமா? எனக்கும் இவன் உடம்பு பார்த்துதான் ஆசையா? இல்லை, வேறு ஏதாவதா? அந்தக் கண்களும் மிக நன்றாக இருக்கின்றன. அவன் முகம் அமைதியாக இருக்கிறது. அவனுள் ஒரு குழந்தைத்தனம் இருக்கிறது. அவன் வீட்டிலுள்ள பெண்களைப் பார்த்து கைகூப்பி எழுந்தது ஆச்சரியமாக இருக்கிறது. தேவரடியார்கள் வீட்டுக்கு வந்து யாரும் பெண்களைப் பார்த்து கைகூப்பி எழுந்திருப்பதில்லை. 'என்ன சௌக்கியமா?' என்று கால் மேல் கால் போட்டுக் கொண்டு, அதிகாரமாகக் கேட்பார்கள். ஆளுக்குத் தகுந்தபடி வீட்டுப் பெண்கள் பேசுவார்கள். ஆனால், இங்கு வீட்டுப் பெண்கள் திகைக்க அவன் கைகூப்பினான். என்னையும் கைகூப்பிப் போக வேண்டுமென்றான். நான் சொன்னதும் விருட்டென்று வெளியே போய்விட்டான். வித்தியாசமான ஆளாக இந்த மல்லன் இருக்கின்றான்.

தன்னுடைய உருவத்தின் திமிரை வெளிக்காட்டாமல் இருக்கிறான். அல்லது வெளிக்காட்டத் தெரியாதவனாக இருக்கிறான். இவனுக்கென்று மிகப் பெரிய ஒரு யோக்கியதை இருக்கிறது. அந்த வலுவை ஒரு முறையேனும் இவன் வெளியே காட்டியதில்லை. என்னிடமும் வெளிப் படுத்தியது இல்லை. வேறு எவரிடமும் அவன் அதை

செலுத்தியதில்லை. மாறாய், மிகச் சாதாரணமாய், உடல் வலு என்பது மிகவும் யோக்கியதையான விஷயம் அன்று என்று சொல்பவனாய், ஒரு சிறுபிள்ளையாய் நடந்து கொள்கிறான். இவனைவிட, வலுவில் குறைந்தவர்கள், நோஞ்சானாக இருப்பவர்கள், சிறிதளவு காசு இடுப்பில் சேர்ந்துவிட்டால் பேசுகின்ற பேச்சும், அதட்டுகின்ற அதட்டலும் ஊரை நாறடிக்கச் செய்கின்றன. ஒரு சுருக்குப் பையில் பணம் இருந்தால் போதும், உலகத்தையே வாங்கிவிட்டது போல எகத்தாளமாய் சிரிக்கப் பேசுகிறார்கள். உரக்கக் கத்துகிறார்கள். இவன் பேச்சில், சப்தமே இல்லை. எப்போதுமே மிருதுவாகப் பேசுகிறான். அதனால்தான் இவனைப் பிடித்துவிட்டதா? பொன்னாச்சி இரவு தூக்கம் வராமல் புரண்டு, புரண்டு படுத்தபடி அவனைப் பற்றி யோசித்தாள்.

மறுநாள் காலை விடிந்ததும், கொள்ளிடத்திற்குப் போனாள். குளித்தாள். அவர் எங்கிருப்பார்? எங்கு அமரச் சொன்னோம்? கோயிலில் சந்திக்கலாம் என்று பொதுப் படையாகச் சொல்லிவிட்டோமே? இவரை எங்கு தேடுவது? யோசித்துக் கொண்டு தாயார் சந்நிதிக்குப் போனாள். அவன் தாயார் சந்நிதிக்கு அருகே பூவிற்கின்ற இடத்தில் தூணை பிடித்துக் கொண்டு நின்றிருந்தான். அவன் அருகே போய் கரம் கூப்பினாள். பதிலுக்கு அவனும் கூப்பினான்.

''எப்பொழுது கோயிலுக்கு வந்தீர்கள்?''

''நீங்கள் சொன்னதுமே நான் கோயிலுக்கு வந்து விட்டேன்.''

''என்ன?''

''கோயிலில் சந்திக்கலாம் என்று சொன்னீர்கள் அல்லவா? நான் உடனே கிளம்பி கோயில் வாசலுக்கு

வந்துவிட்டேன். அதிகாலை ஐந்து மணிக்கு பின்பக்க கதவைத் திறந்தார்கள். உள்ளே புகுந்து இங்கே வந்து விட்டேன்.''

''ஸ்நானபானங்கள் முடிக்கவில்லையா?''

''இல்லை''

''ஏன்?''

''உங்களைச் சந்தித்தபிறகு, கும்பிட்ட பிறகு போகலாம் என்று இருக்கிறேன்.''

''என்ன இது? குளித்துவிட்டு அழகாக உள்ளே வரக் கூடாதா?''

''நான் தாயாரைப் பார்க்கவோ, அரங்கனைப் பார்க்கவோ வரவில்லை. உங்களைப் பார்க்கத்தான் வந்தேன். உங்களைப் பார்த்து கும்பிட்டபிறகுதான் மற்ற விஷயங்கள் செய்வதாய் உத்தேசம்''

''எதற்காக என்னைக் கும்பிடவேண்டும்?''

''உங்களுடைய கண்கள் என்னைக் கலவரப்படுத்து கின்றன. உங்கள் கண்கள் எனக்குக் கனவிலும் வருகின்றன. உங்கள் கண்கள் என்னை இரவுபகலாய்த் தூங்க வொட்டாமல் இம்சை செய்கின்றன. நீங்கள் பேரழகி என்று சொல்வதற்கில்லை. ஆனால், உங்களிடம் பேரழகு இருக்கிறது. உங்களைவிடவும் அழகான, உங்களை விடவும் நிறமுள்ள தாசிகள் திருவரங்கத்தில் உண்டு. ஆனால் உங்கள் பேச்சும், பார்வையும், நடையும் என்னைக் கிறங்க அடிக்கின்றன. உங்களிடம் ஏதோ அற்புதமான சக்தி ஒன்று இருக்கிறது. நீங்கள் ஆண்டாளாக அபிநயம் புரியும்போது, முற்றிலும் உங்களை இழந்துவிடுகின்றீர்கள். ஆண்டாளைக் கண்முன்னே கொண்டுவந்து நிறுத்து கிறீர்கள். ஆனால், நீங்கள் அப்படிக் கொண்டுவந்து ஆண்டாளை நிறுத்துகின்ற லாவகத்தை, திறமையை,

புத்திசாலித்தனத்தை நான் வியந்து பாராட்டுகிறேன். அடடா, இது ஆண்டாள் அல்லவா என்று ஒரு மனிதர் வியந்து கூறினார். இல்லை, இது பொன்னாச்சி. பொன்னாச்சியின் திறமை உங்கள் கண்ணுக்கு ஆண்டாளாகத் தெரிகிறது என்று நான் சொன்னேன். உங்களை நான் ஆண்டாளாகப் பார்ப்பதே இல்லை. அரங்கனுக்குச் சேவை செய்பவளாக பார்க்கவில்லை. ஆண்டாள் என்கிற விஷயத்தை, எவ்வளவு அழகாக மக்களுக்கு முன்பு கொண்டு வந்து கொடுக்கிறீர்கள் என்று பார்க்கிறேன். இதற்கு மிகப் பெரிய புத்திசாலித்தனம் தேவை. உங்கள் புத்திசாலித்தனம்தான் உங்கள் அழகாக வெளிப்பட்டுக் கொண்டிருக்கிறது. அந்த புத்திசாலித்தனத் திற்குக் கீழ் உங்களிடம் உண்மை இருக்கிறது. அந்த உண்மை தான் உங்கள் கண்ணில் பளபளத்து உங்களைக் கௌரவ மாக்கிக் கொண்டிருக்கிறது. உங்களை யானை மிதித் திருக்காது. யானையை நீங்கள் உறுத்துப் பார்த்திருந்தால் யானை பின்னடைந்திருக்கும் உங்கள் கண்களுக்கு அவ்வளவு சக்தியிருக்கிறது. நீங்கள் உங்கள் கண்களால் என்னைக் கட்டிப் போட்டு விட்டீர்கள், இதைச் சொல்லத் தான் நேற்று வந்தேன். இப்போது சொல்லிவிட்டேன். விடை பெறுகிறேன். நமஸ்காரம்.'' அவன் கும்பிட்டான். நகர்ந்தான். கொள்ளிடம் நோக்கி ஓடினான். அவள் திகைத்து அவன் போவதையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

அன்று இரவு, பெரியாழ்வாரின் வேறு பத்து பாட்டுக்கள் நாட்டிய நாடகமாக்கப்பட்டன. நாலைந்து ஆய்ச்சியர்கள் ஒன்றுகூடி. யசோதையிடம் உன்னுடைய மகன் கிருஷ்ணன் என்ன செய்கிறான் தெரியுமா? அவன் படுத்துகிற பாடு கொஞ்சமா, நஞ்சமா என்று குறை சொல்கிறார்கள். யசோதை திகைத்துப்போய் அதை செவி மடுக்கிறான்.

பாலைக் கறந்து அடுப்பேற வைத்து பல் வளையாள்
என் மகளிருப்ப மேலை அகத்தை நெருப்பு வேண்டி
சென்று இறைப்பொழுது அங்கே பேசி நின்றேன்,
சாளக்கிராமமுடைய நம்பி யாவும் சரித்திட்டு போந்து நின்றான்.
ஆலைக் கரும்பின் மொழி அணைய அசோதை நங்காய்
உன் மகனைக் கூவாய் இவையும் சிலவே.

பாடல் தெளிவாகப் பாடப்பட்டது. கிருஷ்ணன் ஓடிவந்தான். கிருஷ்ணனாக இப்போது தன்னைப் பொன்னாச்சி அலங்கரித்துக் கொண்டிருந்தாள். துள்ளியபடி அரங்கம் முழுவதும் சுற்றி வந்தாள். ஒரு பெண். சிறு ஆய்ச்சிப் பெண்ணாக வேடமிட்டு பாலைக் காய்ச்சி, மகளை இங்கே இரு என்று சொல்லிவிட்டு, மேலை அகத்துக்குப் போகிறாள். மேலை அகம் என்பது அந்தணர் வீடு. அந்தணர் வீட்டில்தான் அப்போதெல்லாம் நெருப்பு இருக்கும். நெருப்பு வாங்க யாதவர்கள் அந்தணர் வீட்டிற்குப் போவார்கள். ஒரு விளக்கில் நெருப்பு வாங்கிக் கொண்டு வருவார்கள் வரும்முன்பு ஊர்க்கதையையெல்லாம், அந்தணப் பெண்ணிடம் யாதவப் பெண்மணி மனம் திறந்து பேசுகிறாள். ஏதேதோ அரட்டை அடிக்கிறாள். இங்கே கிருஷ்ணன் பெண்ணைக் கைபிடித்து இழுத்து, கட்டி முத்தம் கொடுத்து, தலையை வருடி, மடியில் போட்டுக் கொண்டு தூங்கச்செய்து, அவள் தூங்கிய பிறகு, பாலை மொண்டு, மொண்டு குடித்துவிட்டு, ஓடிப்போய் விடுகிறான்.

வந்து பார்த்த ஆய்ச்சி பதறுகிறாள்' பெண்ணைக் கன்னம் திருகி, முதுகில் அடிக்கிறாள். தெருவில் வந்து 'இதோ பாருங்கள். இப்படி ஆகிவிட்டதே' என்று கூவுகிறாள். அதே நேரம் யசோதைக்கு இந்த அநியாயத்தைப் பார்த்துக் கண்ணனைக் கண்டிக்க மனம் வரவில்லை. அவள் தாயல்லவா? 'வருக! வருக! இங்கே வாமன நம்பி வருக!

இங்கே' என்று அவனை நிதானமாக அழைக்கிறாள் 'அடுத்த வீட்டுக்காரர் வந்து என்னைக் குறை சொல்லும்படி, தயவு செய்து வைத்துவிடாதே. இப்படிக் கேட்க எனக்குப் பிடிக்க வில்லை. ஏன், இவர்களெல்லாம் உன்னைக் குறை சொல்கிறார்கள்?' என்று குறை சொல்பவர்களைக் சோபித்துக் கொள்கிறாளே தவிர, கண்ணனைக் கோபித்துக் கொள்ளவே இல்லை.

கூட்டம் குதூகலமாய் யசோதையினுடைய அழைப்பை செவிமடுத்தது. ஆனால், கண்ணன் வரவில்லை.

இன்னொரு ஆய்ச்சி இன்னொரு குறையைச் சொல்கிறாள். 'இது என் வீடு என்று பாலையும் தயிரையும், வெண்ணெயையும் வைத்துவிட்டுப்போனேன். இவன் என் மகளிடத்தில் இருக்கிற வளைகளைக் கழட்டிப் போட்டு, கொல்லைப்புறத்தில் நாகப்பழம் விற்கிற ஒரு பெண்ணிடம் வளைகளைக் கொடுத்துவிட்டு ஏன் இப்படிச் செய்தாய் என்று கேட்கும்போது நான் அல்லேன் என்று சிரிக்கின்றானே என்று பாசுரம் முடிந்தது. கொல்லையில் வீட்டிற்குள் வரமுடியாத ஒரு நான்காவது வருணப்பெண். நாவற் பழம் விற்கிற பெண் கண்ணனுக்குப் பிரியமானவளா கிறாள். கண்ணன் என்கிற அற்புதமான கடவுளுக்கு வர்ண பேதமில்லை. ஜாதியில்லை என்பதை அந்தப் பாசுரம் மிக சூசகமாகச் சொல்லியது.

நாவற் பழம் விற்கிற நான்காவது வர்ணப்பெண்ணும் யாதவக் குலப்பெண்ணுடைய வளையல்களைக் கழட்டிக் கொடுத்துவிட்டு, நானா, கொடுத்தேனா, இல்லவே இல்லை என்று கண்ணன் சிரிக்கின்றான். அந்த சிரிப்பு உண்மை என்று சொல்கிறது. வாய் இல்லை என்று சொல்கிறது.

பொன்னாச்சி கண்ணனாகக் கிறங்கடித்தாள். அவள் சிரிக்க, சபை முழுவதும் பல் தெரிய சிரித்தது. அவள் சபையை வணங்கிவிட்டு, அரங்கத்தை விட்டு வெளி யேறினாள். கூண்டு வண்டி ஏறி மறுபடியும் தன் வீட்டுக்குப் போனாள்.

வில்லிதாசன் அவளைத் தொடர்ந்தான். நேரே அவள் வீட்டு வாசலுக்குப் போனான். திண்ணையில் உட்கார்ந்தான். அவள் வீட்டுப் பெண்கள் வெளியே வந்தார்கள். என்ன என்று கேட்டார்கள்.

''என்னால் பொன்னாச்சியை இனி பிரிந்திருக்க முடியும் என்று தோன்றவில்லை, பொன்னாச்சியை நான் திருமணம் செய்து கொள்ள விரும்புகின்றேன். பொன்னாச்சி எனக்கு வேண்டும். இதற்கு நான் என்ன செய்ய வேண்டும்?''

அந்த வீடு திகைத்தது. ''ஐயா, திருமணம் பேச நேரம் இதுவா? இல்லையே. நீர் மறுபடியும் யோசித்துவிட்டு, நாளை காலை ஸ்நானபானங்கள் முடித்துவிட்டு வீட்டுக்கு வாரும். அப்பொழுது இதே மனோநிலையில் இருந்தால் பேசுவோம்.'' அவன் சரியென்று சொன்னான். வீட்டை விட்டு வெளியேறினான். கதவு சார்த்தப்பட்டது. அவன் கதவுக்குப் பின்னே அமர்ந்து கொண்டான். மறுநாள் கதவு திறந்தபோது, எழுந்து வணக்கம் சொன்னான்.

''என்ன?''

''விடிந்த பிறகு வரச் சொன்னீர்களே? விடிந்து விட்டது. அதனால் இங்கு நின்றிருக்கிறேன்.''

''என்ன சொல்கிறீர்கள்?''

'பொன்னாச்சியைத் திருமணம் செய்து கொள்ள, இப்போதும் தயாராக இருக்கிறேன். நீங்கள் என்ன

சொன்னாலும் கேட்பதற்குத் தயாராக இருக்கிறேன். எனக்குப் பொன்னாச்சி வேண்டும். அவளை நான் திருமணம் செய்து கொள்ள வேண்டும்.'' கைகூப்பினான். வீடு திகைத்தது. நன்கு வெளிச்சம் வந்தபிறகு, குளித்து சுத்தமாக வாருங்கள் என்றது. அவன் விரைவாகக் கொள்ளிடம் போனான். குளித்தான். உடுத்திக் கொண்டான் மறுபடியும் வீட்டு வாசலுக்கு வந்து, பொன்னாச்சியைத் திருமணம் செய்து கொள்ள கைகூப்பிக் கேட்டான்.

விரட்டி, விரட்டி இந்தப் பெண்களைக் காதலிக்கும் இந்த ஆண்கள் ஒன்றும் புதிதில்லை. இம்மாதிரியான ஆண்களை பெண்கள் நன்கு அறிவார்கள். எப்படியாவது திருமணம் செய்து கொண்டே ஆக வேண்டும் என்று வெறிபிடித்தாற் போல் பெண்ணின் பின்னால் அலைந்த நீ என்னைத் திருமணம் செய்து கொள், திருமணம் செய்து கொள் என்று பயமுறுத்தலாய், நீ திருமணம் செய்து கொள்ளாவிட்டால் கொன்றுவிடுவேன் என்று அச்சுறுத்தலாய், தற்கொலை செய்து கொள்வேன் என்று கலவரப்படுத்துதலாய் ஆண்கள் முயற்சி செய்வார்கள், இப்படி முயற்சி செய்த ஆண்களைப் பற்றியும், பிறகு அவர்கள் குடித்தனம் செய்வது ஆரம்பத் தன்மைக்கு நேர்மாறாய் இருந்தது பற்றியும் பெரிய கதையாகப் பேசுவார்கள். ஆனால், இப்படி கைகூப்பி 'நான் திருமணம் செய்து கொள்ள விரும்புகிறேன்' என்று எந்த ஆணும் சொன்னதாக ஸ்ரீரங்கத்துப் பெண்குலத்துக்கு ஞாபகம் இல்லை.

தேவரடியார்கள் குலப்பெண்களிடம் போய், இப்படி கேட்கிறாரே, நாங்கள் என்ன செய்வது என்று கேட்டார்கள். குலப்பெண்கள் தங்கள் வீட்டுப் பெரியோர்களோடு ஆலோசனை செய்தார்கள். அந்தக் காலகட்டங்களில், ஜாதிப்

பிரிவு இருந்தது. ஆனால், எவரும் எவரையும் இழிவாகப் பேசியதில்லை. குலமகளின் கற்பும், தேவரடியார்களின் கற்பும் ஒரே மாதிரியானவை. விருப்பமில்லாமல் யார், யாரைத் தொந்தரவு செய்தாலும், அது கண்டிக்கத்தக்கது என்று தெளிவாய் மக்கள் இருந்தார்கள். பயமின்றிக் கண்டித்தார்கள். ஒரு தேவரடியாரை வீரன் போய் வாள் உருவி, 'வா, படுக்கைக்கு' என்று ஒருக்காலும் சொல்ல முடியாது. 'சீ...போ' என்று அவள் சொல்லிவிட்டால், வாளை உறையில் போட்டுக் கொண்டு அவன் வீட்டுக்குப் போக வேண்டியதுதான். பெண் விருப்பமில்லாமல். ஆண் ஒருக்காலும் அவளை வற்புறுத்த முடியாது. அப்படி வற்புறுத்தி பெண்ணை அடையவும் முடியாது என்று ஆண்கள் தெரிந்த வைத்திருந்தார்கள்.

ஊர் முழுவதும் இந்த விஷயத்தை எடுத்துக் கொண்டு பேசியது. ''நல்லவனாகத் தெரிகிறான். உனக்குத் திருமணம் வெகு முக்கியம் என்ற விஷயம் தோன்றினால் நிச்சயமாக இவரை நீ திருமணம் செய்து கொள்ளலாம். திருமணம் செய்து கொண்டு, நீ என்ன வாழப் போகிறாய், எப்படி வாழப்போகிறாய் என்பதையும அவனுக்கு முன்னால் சொல்லிவிடு. நீ நடிப்பதற்காகப் பிறந்தவள் நாட்டியமாடுவதையும் வேண்டாம் என்று சொன்னால், இதைப் பற்றி நீ தீவிரமாக யோசிக்க வேண்டும். நடனம் உன் உடம்பில் ஒவ்வொரு அணுக்களிலும் இருக்கிறது. நீ அடுத்த வருடம் ஆண்டாளாக, கண்ணனாக வேஷம் போட்டு, பாசுரங்களுக்கு அபிநயம் பிடிக்கவில்லையெனில், அது தமிழுக்குப் பிடித்த கேடு நம்முடைய சனாதனதர்மத்துக்கு நஷ்டம். வைணவத்திற்கு ஒரு இழப்பு. எனவே, உன்னை நடனமாட வேண்டாம் என்று சொன்னால், நீ திருமணத்தைப் பற்றி யோசிக்க வேண்டும். நீ நடனமாடலாம் என்று சொன்னால்,

உனக்கு நிச்சயம் ஒரு துணை வேண்டும். இப்பொழுது இளமையாக இருக்கிறாய் நீ நடனமாடுவது அற்புதமாக இருக்கிறது. பின்னால் நாற்பது வயதில் நடனமாட முடியுமா? ஆனால், இதே போல பல நூறு குழந்தைகளை உன்னால் தயார் செய்ய முடியும். அதற்கும் அவன் தடை சொல்லாது இருக்கவேண்டும். எல்லா பெண்டுகளையும் போல திருமணம் செய்து கொண்டு, புருஷனுக்குக் கால் பிடித்துவிடுவதும், சமைத்துப் போடுவதும், அவனுக்குப் பின்னால் அலைவதுமான வாழ்க்கை உனக்கில்லை என்று நினைக்கிறேன். உன் பின்னால் அவன் அலையத் தயாராக இருக்கிறானா என்று கேட்டுக்கொள். உனக்கு அவன் உதவி செய்யத் தயாராக இருக்கிறானா என்று அவனைப் பலமுறை சோதித்துக் கொள். உனக்கு சிஷ்ருஷை செய்யத்தான் அவன் இருக்கிறான் என்பதைத் தெளிவாகத் தெரிந்துகொண்டால், அவனைத் திருமணம் செய்து கொள்ளலாம். மற்றபடிக்கு தேவரடியாரான நீ ஒரு ஆணின் கையில் மனைவியாக அகப்படுவது என்பது யோசிக்கத் தக்க விஷயம். அவன் உன்னுடைய நடனத்திற்கும், உன்னுடைய வாழ்க்கை நடை முறைக்கும் தடை சொல்லவில்லையெனில், அவனோடு வாழ்வதைவிட அற்புதமான விஷயம் இந்த உலகத்தில் இருக்க முடியாது. அவன் வெகுளி, மிக மிக நல்லவன். தன் உடல் வலுவைப் பற்றிச் சிறிதும் தெரியாதவன். அவனை நேசிக்கத்துவங்கினால் இளகிவிடுகிறான். அவனிடம் நல்ல வார்த்தை சொன்னால், மிகப் பணிவாக ஆகிறான். சாதாரண மனிதர்களே அவனிடம் இனிமையாகப் பேசி, காரியங்கள் சாதித்துக் கொள்கிறார்கள், அப்போது மனைவியாக இருக்கின்ற நீ என்னவெல்லாம் சாதித்துக் கொள்ளலாம். எனவே அவனிடம் பேசிப் பார். நீ நடனமாடுவதைப் பற்றி அவனிடம் விவரித்துச் சொல். அவன் சரியென்றால், உன்

பிரிவு இருந்தது. ஆனால், எவரும் எவரையும் இழிவாகப் பேசியதில்லை. குலமகளின் கற்பும், தேவரடியார்களின் கற்பும் ஒரே மாதிரியானவை. விருப்பமில்லாமல் யார், யாரைத் தொந்தரவு செய்தாலும், அது கண்டிக்கத்தக்கது என்று தெளிவாய் மக்கள் இருந்தார்கள். பயமின்றிக் கண்டித்தார்கள். ஒரு தேவரடியாரை வீரன் போய் வாள் உருவி, 'வா, படுக்கைக்கு' என்று ஒருக்காலும் சொல்ல முடியாது. 'சீ...போ' என்று அவள் சொல்லிவிட்டால், வாளை உறையில் போட்டுக் கொண்டு அவன் வீட்டுக்குப் போக வேண்டியதுதான். பெண் விருப்பமில்லாமல். ஆண் ஒருக்காலும் அவளை வற்புறுத்த முடியாது. அப்படி வற்புறுத்தி பெண்ணை அடையவும் முடியாது என்று ஆண்கள் தெரிந்த வைத்திருந்தார்கள்.

ஊர் முழுவதும் இந்த விஷயத்தை எடுத்துக் கொண்டு பேசியது. ''நல்லவனாகத் தெரிகிறான். உனக்குத் திருமணம் வெகு முக்கியம் என்ற விஷயம் தோன்றினால் நிச்சயமாக இவரை நீ திருமணம் செய்து கொள்ளலாம். திருமணம் செய்து கொண்டு, நீ என்ன வாழப் போகிறாய், எப்படி வாழப்போகிறாய் என்பதையும அவனுக்கு முன்னால் சொல்லிவிடு. நீ நடிப்பதற்காகப் பிறந்தவள் நாட்டியமாடுவதையும் வேண்டாம் என்று சொன்னால், இதைப் பற்றி நீ தீவிரமாக யோசிக்க வேண்டும். நடனம் உன் உடம்பில் ஒவ்வொரு அணுக்களிலும் இருக்கிறது. நீ அடுத்த வருடம் ஆண்டாளாக, கண்ணனாக வேஷம் போட்டு, பாசுரங்களுக்கு அபிநயம் பிடிக்கவில்லையெனில், அது தமிழுக்குப் பிடித்த கேடு நம்முடைய சனாதனதர்மத்துக்கு நஷ்டம். வைணவத்திற்கு ஒரு இழப்பு. எனவே, உன்னை நடனமாட வேண்டாம் என்று சொன்னால், நீ திருமணத்தைப் பற்றி யோசிக்க வேண்டும். நீ நடனமாடலாம் என்று சொன்னால்,

உனக்கு நிச்சயம் ஒரு துணை வேண்டும். இப்பொழுது இளமையாக இருக்கிறாய் நீ நடனமாடுவது அற்புதமாக இருக்கிறது. பின்னால் நாற்பது வயதில் நடனமாட முடியுமா? ஆனால், இதே போல பல நூறு குழந்தைகளை உன்னால் தயார் செய்ய முடியும். அதற்கும் அவன் தடை சொல்லாது இருக்கவேண்டும். எல்லா பெண்டுகளையும் போல திருமணம் செய்து கொண்டு, புருஷனுக்குக் கால் பிடித்துவிடுவதும், சமைத்துப் போடுவதும், அவனுக்குப் பின்னால் அலைவதுமான வாழ்க்கை உனக்கில்லை என்று நினைக்கிறேன். உன் பின்னால் அவன் அலையத் தயாராக இருக்கிறானா என்று கேட்டுக்கொள். உனக்கு அவன் உதவி செய்யத் தயாராக இருக்கிறானா என்று அவனைப் பலமுறை சோதித்துக் கொள். உனக்கு சிஷ்ருஷை செய்யத்தான் அவன் இருக்கிறான் என்பதைத் தெளிவாகத் தெரிந்துகொண்டால், அவனைத் திருமணம் செய்து கொள்ளலாம். மற்றபடிக்கு தேவரடியாரான நீ ஒரு ஆணின் கையில் மனைவியாக அகப்படுவது என்பது யோசிக்கத் தக்க விஷயம். அவன் உன்னுடைய நடனத்திற்கும், உன்னுடைய வாழ்க்கை நடை முறைக்கும் தடை சொல்லவில்லையெனில், அவனோடு வாழ்வதைவிட அற்புதமான விஷயம் இந்த உலகத்தில் இருக்க முடியாது. அவன் வெகுளி, மிக மிக நல்லவன். தன் உடல் வலுவைப் பற்றிச் சிறிதும் தெரியாதவன். அவனை நேசிக்கத்துவங்கினால் இளகிவிடுகிறான். அவனிடம் நல்ல வார்த்தை சொன்னால், மிகப் பணிவாக ஆகிறான். சாதாரண மனிதர்களே அவனிடம் இனிமையாகப் பேசி, காரியங்கள் சாதித்துக் கொள்கிறார்கள், அப்போது மனைவியாக இருக்கின்ற நீ என்னவெல்லாம் சாதித்துக் கொள்ளலாம். எனவே அவனிடம் பேசிப் பார். நீ நடனமாடுவதைப் பற்றி அவனிடம் விவரித்துச் சொல். அவன் சரியென்றால், உன்

திருமணத்தை நானே நடத்திவைக்கிறேன்.'' தேவரடியார்களின் தலைவனாக இருந்த ஒரு கிழவர் பொன்னாச்சியிடம் பேசினார்.

பொன்னாச்சியைச் சுற்றி உள்ள பெண்களும் அவர் பேசுவதைக் கேட்டுக் கொண்டார்கள். அவர் என்ன சொல்கிறார் என்பதைப் புரிந்துகொண்டார்கள். மறுபடியும் வில்லிதாசனை வரவழைத்தார்கள். நடுக்கூடத்துக்குள் உட்கார வைத்து, அவனுக்கு உணவு பரிமாறினார்கள். தாம்பூலம் கொடுத்தார்கள். அவன் மனம்குளிர பாட்டுப் பாடினார்கள். அவளை அலங்கரித்து வந்து அவனுக்கு எதிரே உட்கார வைத்தார்கள். தாங்கள் யார், தங்கள் குலமென்ன என்றெல்லாம் விவரமாகச் சொன்னார்கள். தங்களுடைய வாழ்க்கை முறைகள் பற்றி விவரித்தார்கள். இவள் நடனமாடப் பிறந்தவள், இவள் நடனமாடுவதை நீர் தடை செய்தால், இந்தத் திருமணத்திற்கு அர்த்தமில்லை என்றார்கள். அவளுக்குத் துணையாக உன்னால் இருக்க முடியுமா? அல்லது கர்வப்பட்டு அவளை இம்சிக்க போகிறீரா என்று உரத்துக் கேட்டார்கள்.

வில்லிதாசன் மறுபடியும் கைகூப்பினான். 'இவள் அழகில் மயங்கி, நான் இவளைக் காதலிக்கிறேன் இவள் அழகு என்பது வெறும் உடம்பு அழகு மட்டுமல்ல. இவளிடமிருந்து வெளிப்படுகின்ற ஒவ்வொரு செயலும் எனக்கு அழகாக இருக்கிறது. இவள் பேச்சும் பார்வையும் மிக, மிக அழகாக இருக்கின்றன. இந்தப் பேச்சுக்கும் பார்வைக்கும்தான் நான் அடிமையாகிறேன். எனவே இவள் என்ன சொன்னாலும், என்ன செய்தாலும் கட்டுப்படுவேன். இவளுக்குத் துணையாக இருப்பேன். இது சத்தியம். அரங்கன் மீது ஆணை. எல்லாம் வல்ல இறைவன் மீது ஆணை'' என்று தரையில் அடித்து சத்தியம் செய்தான்.

அடுத்த முகூர்த்தத்திலேயே அவர்கள் திருமணம் நடந்தது.

வில்லிதாசனுக்கு உறவினர்கள் இல்லை. உறையூர் மல்லர்கள் நாற்பது பேர் குடும்பத்தோடு வந்திருந்தார்கள். வில்லிதாசனிடம் வித்தை கற்றுக் கொண்ட மாணவர்கள் வந்திருந்தார்கள். ஆனால், பொன்னாச்சிக்கு மிகப் பெரிய உறவுக் கூட்டம் இருந்தது. திருவானைக்காவலிலிருந்தும், உறையூரிலிருந்தும், வயலூரிலிருந்தும், சமயபுரத்திலிருந்தும், திருச்சிராப்பள்ளியின் பல பகுதிகளிலிருந்தும், தஞ்சையிலிருந்தும் குடந்தையிலிருந்தும், ஏன் காஞ்சிபுரத்திலிருந்தும் அவர்களுடைய உறவுகள் திருமணத்திற்கு வந்திருந்தார்கள்.

ஆட்டமும், பாட்டமுமாய் நான்கு நாட்கள் திருமணம் நடந்தது. வில்லிதாசன் தன்னுடைய பொற்கழஞ்சுகள் அனைத்தையும் அவள் தாயிடம் கொடுத்து, ''என் வாழ்நாள் முழுவதும் சேர்த்து வைத்திருந்த இந்த பொற்கழஞ்சுகளை உங்களுக்குக் கொடுக்கிறேன்'' என்று போற்றினான். வீடு திகைத்தது. இந்தப் பொற்கழஞ்சுகளை வைத்துக்கொண்டு, வியாபாரம் ஆரம்பித்தால் பல மடங்கு சம்பாதிக்கலாம். வட்டிக்கு விட்டால் காசு குட்டிபோடும். ஆனால், இவைகளை நல்ல முறையில் பயன்படுத்த வேண்டும். வீடு பத்திரப்படுத்திக் கொண்டது. வில்லிதாசன் மீது அவர்களுக்கு மதிப்பு அதிகமாகியது.

வில்லிதாசனையும், பொன்னாச்சியையும் தனியே குடித்தனம் வைத்து அவர்கள் உருகி, உருகி வாழ்வதைக் கொண்டாடியது. பொன்னாச்சி, வில்லிதாசனை சரிவரப் புரிந்து கொண்டாள். அவன் சத்தியசந்தன் என்பதை வெகு சீக்கிரம் தெரிந்து கொண்டாள். அவனால் வார்த்தை கொடுத்தபிறகு மாறமுடியாது. மாற விருப்பமில்லாதவன்.

என்ன சங்கடங்கள் இருந்தாலும் அந்த வார்த்தையைக் காப்பாற்ற வேண்டும் என்று ஆசைப்படுபவன் என்று தெரிந்துகொண்டாள். எனவே, அதிகம் அவனை வளைக்காமல் மிருதுவாக நடத்தவேண்டும் என்பதை விளங்கிக் கொண்டாள்.

பொன்னாச்சி மிக கூர்மையானவள். நினைத்ததை விடவும் புத்திசாலி. அதேசமயம், உத்தமியாய், நல்லவளாய், தெய்வபக்தி நிறைந்தவளாய், எல்லோருக்கும் பிரியமான வளாய் வாழ வேண்டும் என்ற அவன் எண்ணத்தையும் புரிந்துகொண்டாள். அவளுக்கு வில்லிதாசன் மீது மட்டுமல்ல, தன் தந்தையிடமும், தாயிடமும், சகோதரி யிடமும் மிகப் பெரிய பிடிப்பு இருந்தது. தன் உறவுக் கூட்டத்தை அவள் மிகவும் நேசித்தாள். அதைத் தவிர அவளுக்கு அவளுடைய நாட்டியமாடும் குழுவிலுள்ளவர் களின் நலமும் முக்கியமானதாக இருந்தது. அவர்களையும் அவள் கண்ணைனப் பார்த்தாள். ஒரு பெரிய தலைவியாக அவள் இயங்க ஆசைப்பட்டாள். அதற்கு ஆலோசனை யாகவும், துணையாகவும் தன் புருஷன் இருக்க வேண்டும் என்று விரும்பினாள். வில்லிதாசன் அவ்விதமே இருந்தான். சற்று அதிகமாகவே இருந்தான்.

பங்குனி நகர்ந்து சித்திரை வந்தது. வெயில் கடுமையாய் ஆரம்பத்திலேயே அடிக்கத் துவங்கியது. வைகாசி அனல் கக்கியது. எல்லா மாதங்களும் ஸ்ரீரங்கத்தில் விசேஷம். அன்றும் ஏதோ உற்சவம். ஆற்றங்கரைக்குப் பெருமாள் வந்திருந்தார். ஸ்ரீபாதம் தாங்கிகள் அவரைச் சுற்றி ஆற்றில் இறக்கி, பூஜைகள் முடித்து மேலேறும்போது கடும் வெயிலாகிவிட்டது. அவஸ்தையோடு ஸ்ரீபாதம் தாங்கிகள் பல்லக்கு சுமந்து பக்கத்தில் நின்றிருந்த மக்கள் மணலில் ஏறியதும், பெரிய அவஸ்தைப்பட்டார்கள். ஆறு வடக்கே

திசைமாறிப் போயிருந்தது. தெற்குப் பக்கம் பெரிய மணல்பரப்பு இருந்தது. அந்த மணல்பரப்பை, குழந்தைகளும், பெண்களும், ஆண்களும் அவஸ்தையோடு தாண்டி வந்தார்கள். அடித்து விரட்டியது போல் திபுதிபுவென்று மணல்பரப்பை ஓடிக்கடந்தார்கள். கடக்க முடியாதவர்கள், தலைதுணியை அவிழ்த்து காலில் போட்டு நின்று, பிறகு மறுபடியும் ஓடினார்கள். முழங்கால் ஜலத்தில் நின்றுகொண்டிருந்த பொன்னாச்சி, பெருமாள் கரை யேறியதும் பின்தொடர்ந்தாள். சிறிது தூரம் நடந்தவுடன் சமாளிக்க முடியாமல் மறுபடியும் நீருக்கு ஓடிவந்தாள்.

''பொன்னாச்சி, நான் உன்னைத் தோளில் தூக்கிக் கொண்டு போய்விடட்டுமா?''

''கடவுளே! வேண்டாம். ஏற்கெனவே நீங்கள் என்னை உள்ளங்கையில் வைத்து தாங்குகிறீர்கள் என்று சொல்கிறார்கள். இப்போது ஊர் பார்க்க என்னைத் தோளில் வைத்துக் தூக்கிக் கொண்டுபோக வேண்டுமா? எத்தனை பேர் குழந்தைகளும், பெண்களும் நடந்துபோகும்போது, நான் உங்கள் தோளில் சவாரி செய்வது நன்றாக இருக்காது. தயவுசெய்து விட்டுவிடுங்கள். நான் சிறிது நேரம் பொறுத்து நடந்த வருகிறேன்.'' மறுபடியும் முயற்சி செய்தாள், அவளுடைய மென்மையான பாதங்கள் சூடு தாங்காமல் திரும்பவும் நீருக்கு ஓடிவந்தாள்.

''பொன்னாச்சி, நான் சொல்வதைக் கேள். என் தோளில் அமர்ந்து கொள்.'' மண்டியிட்டு மல்லன் தோள் தட்டினான்.

''முடியவே முடியாது. வேறு ஏதேனும் சொல்லுங்கள். என்னால் உங்கள் தோளில் அமர்ந்து சவாரி செய்ய முடியாது. ஊர் நிச்சயம் உங்களை கேலி பேசும். ஊர் உங்களை கேலி செய்தால், எனக்குத் தாங்காது.''

''பொன்னாச்சி, வேறு வழியில்லை. இவ்வளவு தூரம் மணல்பரப்பை நீ எப்படித் தாண்டுவாய்?''

''சற்றுப் பொழுதில் பழகிக் கொண்டு தாண்டி விடுவேன். கால் கொப்பளித்தாலும் நடந்து விடுவேன். இரண்டு முறை சூடு தெரிந்துவிட்டது அல்லவா? மூன்றாம் முறை ஒரே ஓட்டமாக ஓடுவிடுவேன்.'' அவள் உறுதியாகச் சொன்னாள்.

வில்லிதாசன் அவள் பேச்சுக்கு மறுபேச்சு சொல்லாமல் காத்திருந்தான். அவன் கையில் அலங்காரக்குடை இருந்தது. அதை அவள் நிழலுக்காகத் தாங்கிப் பிடித்திருந்தான். பொன்னாச்சி, ஓடிவிடத் தீர்மானித்தாள். எத்தனை சூடு இருந்தாலும் திரும்பக்கூடாது என்று எண்ணிக் கொண்டாள். கரையேறினாள். நீரில் நனைந்த மணலில் சிறிது நேரம் நின்றாள். இடுப்புப் புடவையை சொருகிக் கொண்டாள். தபதபவென்று மணலில் ஓடத்துவங்கினாள். கரையேறிய பலரும், பொன்னாச்சி குலுங்க குலுங்க ஓடிவருவதைத் திரும்பிப் பார்த்தார்கள். வில்லிதாசன் குடை எடுத்துக் கொண்டு பின்னாலேயே ஓடி வந்தான். சூடு தாங்கவில்லை. அலறினாள். தூக்க முயற்சித்தபோது உதறினாள். சட்டென்று இடுப்புத் துணியை அவிழ்த்து வில்லிதாசன் தரையில் போட்டான். அதில் ஏறி நின்றுகொண்டாள். பிறகு வேட்டியை அவிழ்த்தான். நீளவாக்கில் பரப்பினான். பொன்னாச்சி அதில் நடந்து வந்தாள். இப்போது துண்டைப் பரப்பினான். பொன்னாச்சி தொடர்ந்து அதில் நடந்து வந்தாள். இப்போது வேட்டியை எடுத்து மறுபடியும் நடைபாதையாய் விரித்தான், பொன்னாச்சி அதில் நடந்து வந்தாள். மறுபடியும் மேல்துண்டை விரித்தான். பொன்னாச்சி அதில் நடந்து வந்தாள். மறுபடியும் வேட்டியை எடுத்து

நடைபாதையாய் விரித்தான். பொன்னாச்சி மனலைத் தாண்டினாள்.

அதுவரை குடை பிடித்து, அவள் நடக்க தன் தோடியை விரித்து அவள் கரையேறியதும், பக்கத்தில் குடையை நட்டு, கைவிசிறியால் விசிறி, கூஜாவில் இருந்து குளிர்ந்த ஜலம் கொடுத்து. அவளை ஆசுவாசப்படுத்தினான். கூட்டம் அவனையே பார்த்துக் கொண்டிருந்தது.

கௌபீனதாரியாய், முரட்டு உடம்போடு, குழந்தை முகத்தோடு தன்னுடைய மனைவியின் கால்கள் நோகக் கூடாது என்று, தன் உடையை அவிழ்த்து சிறிதும் வெட்கமின்றி, நடைபாதை விரித்து, குடைபிடித்து, குடிக்கத் தண்ணீர்கொடுத்து, விசிற செய்கிற சீராளனை ஸ்ரீரங்கம் வாய்பிளந்து பார்த்தது. 'அடேயப்பா, அடேயப்பா, என்று வியந்தது. தாசிக்கு வந்த வாழ்வைப் பார்த்தாயா என்று குலப்பெண்கள் பொறாமைப் பட்டார்கள். ஆனால், வீடு போக இன்னும் சிறிது தூரம் இருக்கிறது. இந்த தூரத்தைப் பொன்னாச்சி எப்படிக் கடப்பாள்? பொன்னாச்சி தன்னைச் சுற்றி ஸ்ரீரங்கம் வியந்து பார்ப்பதைப் பார்த்தாள். வீட்டிற்குப் போய்விட வேண்டும் என்று தீர்மானித்தாள். தெருவில் உள்ள புழுதியில் சூடு குறைவாகத்தானே இருக்கும். இல்லை. தெருவும் அனல் தகித்தது.

மறுபடியும், அவன் வெட்கமின்றி நடைபாதை விரித்தான். இவள் வேகமாக நடந்தாள். பின்னே குடைபிடித்து வந்தான். மேல்துண்டு விரித்தான். அவள் விரைவாக நடந்து வந்தாள். பிறகு வேட்டி விரித்தான். பிறகு அதையும் தாண்டினாள். இவ்விதம் வீடு போவதற்குள் பலமுறை நடைபாதை விரித்து, மேற்புறம் குடையைப் பிடித்து, அவன் நடந்து போவதை ஊர் வியந்து பார்த்தது.

திகழ் சக்கரத்தாரும் பார்த்தார். வியந்தார். தன்னுடைய சீடர்களைப் பார்த்து சிரித்தார். அவர்களும் வாய்பொத்திக் கொண்டார்கள். ''கலிகாலமய்யா. அதனால்தான் பெண்ணுக்கு இப்பேர்ப்பட்ட ஒரு ஆராதனை புருஷனால் நடக்கிறது. வேறு எந்த காலத்திலும் இவ்விதம் நடந்ததாகத் தெரியவில்லை.'' அவர் 'ஆம்' என்று தலையசைத்தார்.

''இப்படி செய்வதற்கு ஒரு மனப்பக்குவம் வேண்டும் உங்களால் செய்ய முடியுமா?''

''அதெப்படி முடியும்?'' சீடர்கள் கேட்டார்கள்.

''இப்படி மனைவிக்கு உதவி செய்கிறவன், மற்றவருக்கு செய்யத் திரும்பி விட்டால் என்னாகும் என்று நினைக்கிறீர்கள்?''

''அடே, அடே. மிகப் பெரிய வள்ளலாக அல்லவா அவன் இருப்பான்?''

''ஆமாம். நீங்கள் சொல்வது சரி. மனைவி என்கிற சிறிய வட்டத்தில் இப்பேர்ப்பட்ட சீராட்டங்களைச் செய்து கொண்டிருப்பவன், மக்கள் என்ற பெரிய வட்டத்திற்குத் திரும்பிவிட்டால் மிகப்பெரிய வள்ளலாக இருப்பான். இப்படிப்பட்ட வள்ளல் நமக்குத் தேவையல்லவா?''

''ஆமாம், ஆமாம்!'' சீடர்கள் உரக்கப் பேசினார்கள்.

''அவன் வீட்டுக்குள் இளைப்பாறுகிறபோது நான் அழைத்தேன் என்று அவனை அழைத்து வாருங்கள்.''

அடிக்குரலில் திகழ் சக்கரத்தார் என்கிற ஸ்ரீராமானுஜர் சீடர்களுக்குக் கட்டளையிட்டார்.

அவர்கள் காத்திருந்தார்கள். அவன் இளைப்பாறச் செல்வது தெரிந்து, மெல்ல அணுகி, அவனை வணங்கினார்கள்.

''என்ன?''

''உங்களை ஸ்ரீராமானுஜர் வரச்சொன்னார்.'' கை கூப்பினர்.

''யார் ராமானுஜர்?''

''ஸ்ரீரங்கத்தை நிர்வாகம் செய்கிறவர். சோழ மன்னனிடமிருந்து கோயிலை மொத்தமாகப் பெற்று, அங்கே வேறு எவருக்கும் உரிமை இல்லை. தமக்கே உரிமை என்று பூரணமாய் வாங்கி, இந்த ஸ்ரீரங்கம் பெரிய கோயிலை நிர்வாகம் செய்து கொண்டிருப்பவர். வைணவர்களுக்குத் தலைவர். வைணவத் தத்துவத்தை உலகமெல்லாம் பரப்பிக் கொண்டிருப்பவர். அரங்கனின் அன்புக்குரியவர். பெரிய ஞானி. தபஸ்வீ. யோகி.'' அவரைப் புகழ்ந்து சொன்னார்கள்.

வில்லிதாசன் முகம் மலர்ந்தான். ''மாலை என் மனைவியோடு வருகிறேனே'' என்று பதிலுக்குக் கைகூப்பினான்.

''இல்லை, உம்மை உடனே வரச்சொல்கிறார்.''

''இப்போது என் மனைவியை எழுப்பிச் சொல்லி விட்டு வரட்டுமா?''

''வேண்டாம். அவர்கள் ஓய்வெடுத்துக் கொண்டிருக்கிறார்கள். எதற்குத் தொந்தரவு செய்கிறீர்கள்? நாம் போய்விட்டு வந்துவிடுவோம். வாருங்கள். ஸ்ரீராமானுஜரை ஒரு எட்டு பார்த்து நமஸ்கரித்துவிட்டு வந்து விடுங்கள்.''

''ஆமாம். நானும் கேள்விப்பட்டிருக்கிறேன். ஆனால், சந்திக்கிற சமயம் வரவில்லை. என்னை எதற்காக வரச்சொல்கிறார்?''

''காரணம் இருக்கும்.'' சீடர்கள் உரக்கச் சொன்னார்கள். அவனும் தலையசைத்தான். தோளில் மேல் துணியைப் போர்த்திக் கொண்டான். தெருவில் இறங்கி நடந்தான். உச்சி

வெயில் ஸ்ரீரங்கத்தை ஆட்டி வைத்தது கீடர்களோடு அவன் மடம் நோக்கி நடந்தான்.

உள்ளே வந்தான். கால் கழுவிக் கொண்டான். இரண்டாவது கட்டில், கூடத்தில் பெரிய பலகை போட்டு, அமர்ந்து கண்மூடி உட்கார்ந்திருக்கின்ற திகழ் சக்கரத்தாரைக் கவனித்தான். அவனை அறியாமல் அவன் கை கூப்பினான். மெல்ல வாய் பொத்தி, அருகில் போனான். காலில் விழுந்து நமஸ்கரித்தான். எழுந்து நின்று கொண்டான்.

''அருகே வாப்பா.'' திகழ் சக்கரத்தார் அவனை மிருதுவாகக் கூப்பிட்டார்.

அவன் கிட்டே போக வெட்கப்பட்டான்.

''எனக்கு அருகே வந்தால்தானே உனக்கு ஏதேனும் நான்தர முடியும்?'' என்று திகழ் சக்கரத்தார் சொன்னார்.

அவர் சொல்வதில் பல அர்த்தங்கள் இருந்தன. அவன் இரண்டடி எடுத்து வைத்து, அவருக்கருகே வந்தான். கை நீட்டிக் காட்டினார். அவன் நீட்டினான். உள்ளங்கையில் தீர்த்தம் கொடுத்தார். அவன் எடுத்துக்கொண்டான். துளசி இதழ்களை அவன் உள்ளங்கையில் போட்டார். அவன் சூடிக் கொண்டான். இரண்டை வாயில் அதக்கிச் கொண்டான். மறுபடியும் விழுந்து நமஸ்கரித்தான்.

''உட்கார்!'' அவருக்கருகே இடம் காட்டினார். அவன் தயங்கினான்.

''பரவாயில்லை... உட்கார்!'' இன்னும் நெருக்கமாக இடம் காட்டினார். அவன் தொலைவே அமர்ந்து கொண்டான். தனக்கு அருகே உள்ள தர்ப்பைப் பாயைத் தட்டி, இதிலே உட்கார் என்று அழைத்தார். வில்லிதாசன் மந்திரத்துக்குக் கட்டுப்பட்டவன் போல எழுந்து, அவருக்கு

அருகே போய் கைகட்டி உட்கார்ந்து கொண்டான் அவரையே பார்த்தான். அவரும் அவனையே பார்த்தார்

எவ்வளவு அழகான முகம்? ஒரு பெண்ணிடம் இத்தனை பிரியம் வைக்க இவனால் எப்படி முடிகிறது?

எல்லா ஆண்களும் கர்வத்தில் கொதித்துக் கொண்டிருக்கிறபோது, கர்வத்தில் தலைகால் புரியாமல் ஆடிக்கொண்டிருக்கும்போது, பெண்களை நசுக்கிக் கொண்டிருக்கிறபோது, உன்னால் நடைபாவாடை எப்படி விரிக்க முடிந்தது? உன்னால் எப்படி குடை பிடிக்க முடிந்தது? உன்னால் கௌபீனதாரியாய் அவளுக்கருகே அமர்ந்து, ஆயிரம் பேர் பார்க்க எப்படி விசிற முடிந்தது? நீ யாரென்று உனக்குத் தெரியவே இல்லை, இல்லையா? உன்னை முற்றிலும் மறந்துவிட்டாய் அல்லவா? ஒரு தாசியின் எதிரே உன்னைப் பற்றிச் சிறிதும் லட்சியம் இல்லாமல் அவள் சுகமே, அவள் நலமே முக்கியம் என்று நினைத்துவிட்டாய் அல்லவா? உன் மனைவியே மிகப் பெரிய விஷயம் என்று முடிவு பண்ணிவிட்டாய் அல்லவா? என் நண்பனே வில்லிதாசா, ஒரு இடம் நீ மாறினால் எவ்வளவு உயரப்போய் விடுவாய், தெரியுமா? வில்லிதாசா, உன் பெண் சினேகத்தை நான் மறுக்கவே இல்லை. இது அற்புதம். இது முதல் படி. இங்கிருந்து அடுத்தபடியில் கால் வை. அடுத்த படி எதுவென படி. மனைவியை நேசிப்பது போல இறைவனை நேசிக்கக் கற்றுக் கொள். மனைவியை ஆராதிப்பது போல இறைவனை ஆராதிக்கக் கற்றுக் கொள். எந்நேரமும் மனைவியை நினைத்துக் கொண்டிருப்பது போல, உள்ளுக்குள்ளே இறைவனை நினைக்கக் கற்றுக் கொள் வில்லிதாசா! நீ மிகுந்த உயரத்தில் இருக்கிறாய். மற்ற மனிதர்களையெல்லாம் காட்டிலும் நல்ல இடத்தில் இருக்கிறாய். படித்தவர்களைக் காட்டிலும், நல்ல உயர்குடி

பிறப்பாளர்களைக் காட்டிலும் நீ உச்சாணிக்கிளையில் இருக்கிறாய். இன்னும் ஒரு எட்டு எகிறி சிறகு விரித்தால் வானம் உன் வசப்படும். வில்லிதாசா! உனக்கு நான் உபதேசிக்க ஆசைப்படுகிறேன் என்று மனதில் நினைத்துக் கொண்டார். ஆழ்ந்து அவன் கண்களைப் பார்த்தார்.

''மனைவியை நீர் நேசிக்கிறீரோ?''

''ஆமாம்.''

''தொழிலில் நீர் மல்லனல்லவா?''

''ஆமாம்.''

''நல்ல புஜபலம் உனக்கு இருக்கிறது.''

''ஆமாம்.''

''ஆனாலும் மனைவியை உள்ளங்கையில் வைத்துத் தாங்குகிறீர்.''

''ஆமாம்.''

''எனக்கு ஒரு கேள்வி.''

''கேளுங்கள், ஐயா.''

''அப்படி என்ன மனைவியிடம் கண்டீர்?''

வில்லிதாசன் அவரையே வியப்போடு பார்த்துக் கொண்டிருந்தான்.

''என்ன பார்க்கிறீர்?''

''இதை கேட்கவா என்னை அழைத்தீர்?''

''ஆமாம். இதைக் கேட்கத்தான் அழைத்தேன். ஸ்ரீரங்கம் முழுக்க வேடிக்கை பார்த்தது. நீர் அருகே இருந்து விசிறி குடை பிடித்து, நடைபாவாடை விரித்து அவளை வீடுவரை கொண்டு வந்தீர். யார் பற்றியும் கவலைப் படவில்லை. எது பற்றியும் லட்சியமில்லை. இப்படி ஒரு மனோநிலை உமக்கு உருவாக என்ன காரணம்? இப்படிப்

பட்ட ஒரு மனோநிலைக்கு நீர் எதனால் தள்ளப்பட்டீர்? இந்த மனோநிலை உம் மனைவியின் மீது ஏற்படு மென்றால், உன் மனைவியிடம் என்ன கண்டீர்? என் கேள்வியில் என்ன தவறு?''

''ஐயா, கேள்வியில் தவறில்லை இவ்வளவு உயர்ந்த இடத்தில் இருக்கிறவர், ஒரு சாதாரண விஷயத்தைப் போய், ஒரு மல்லன் தன் மனைவியிடம் பிரியமாக இருப்பதைப் போய் ஏன் கேள்வி கேட்டுத் தெரிந்து கொள்கிறார் என்று புரியாமல் திகைக்கிறேன்.''

''உமது திகைப்புக்கு நான் பிறகு பதில் சொல்கிறேன். என் கேள்விக்குப் பதில் சொல்லும். உமது மனைவியிடம் என்ன கண்டீர்?''

''அழகு. ஐயா, பேரழகு. அவள் ஒவ்வொரு அசைவும் அழகு. அவள் ஒவ்வொரு பேச்சும் அழகு. அவள் கண்கள் மிக அழகு. அவள் கண்கள் தனியாக ஒரு மொழி பேசுகின்றன. ஐயா, அவள் என்னைக் கோபமாக உற்றுப் பார்த்தால், அவள் என்ன சொல்ல விரும்புகிறாள் என்பதை அவள் கண்கள் தெரிவித்துவிடுகின்றன. அவள் ஆசையோடு என்னைப் பார்த்தால், எதற்கு ஆசைப்பட்டாள் என்பதையும் அவள் கண்கள் தெரிவித்துவிடுகின்றன. அவள் கருணையோடு மற்றவர்களைப் பார்க்கும்போது, அவள் மனதில் என்ன நினைத்துக் கொண்டிருக்கிறாள் என்பதை அவள் கண்கள் சொல்லிவிடுகின்றன. கண்கள் மட்டுமல்ல. கைகளால், பேச்சுக்களால், செயல்களால் அவள் தன்னை மிக அழகாக வெளிப்படுத்திக் கொள்கிறாள். அவள் உண்மையாக இருக்கிறாள். ஐயா, அதனால்தான் பேச்சும், செய்கையும் தெளிவாக இருக்கின்றன. இத்தனை உண்மையான பெண்ணை நான் பார்த்ததே இல்லை. உண்மைதான் அழகு. உண்மைதான் பேரழகு. உடம்பழகும்,

உள்ளத்தழகும் ஒன்றுசேர்ந்து அவளை ஒரு பெண்ணாக உருவகித்து என் முன்னே நிறுத்தியிருக்கின்றன. அதிலிருந்து விடுபட என்னால் முடியவில்லை. பார்த்த நாளிலிருந்து அவளிடம் அந்தப் பேரழகை இடைவிடாது பருகிக் கொண்டிருக்கிறேன்.'' அவள் அழகி. அவள் கண்கள் கொள்ளையழகு.''

''எனக்குப் புரிகிறது. நீர் சொன்னது சரி. அவள் உள்ளமும், வெளி உருவமும் ஒன்றாய் இருந்து என்ன நினைக்கிறாளோ, அதைக் கள்ளமற வெளியே சொல்ல அவளுக்கு தெரிந்துவிட்டது. பயமின்றி அவள் வெளியே செல்வதால், பயமின்றி அவள் வாழ்வதால் அவள் மிகத் தெளிவாக இருக்கிறாள். புருஷனிடத்தும், ஊர் தலைவரிடத்தும் அவளுக்கு எந்த பயமும் இல்லை. அவளை மிரட்டுவார் யாரும் இல்லை. அவளும் பிறர் குறை கூறும் விஷயங்கள் செய்வதே இல்லை. ஜனங்களுக்கு உதவி செய்யவேண்டும் என்கிற எண்ணமே கொண்டிருக்கிறாள். எனவே அந்த நல்லி குணமும் அவளிடம் அமைந்திருக்கிறது. எனக்குப் புரிகிறது. ஆனால், அவள் மனுஷிதானே. மானுடம்தானே. இன்றில்லாவிடினும். நாளை குறைகள் இருக்குமல்லவா? குறைகள் வருமல்லவா??'

''வரலாமய்யா.''

''குறையே இல்லாத, நிறைவான, முழுமையான பேரழகைப் பார்த்திருக்கிறீரா?''

''எனக்குத் தெரிந்து பேரழகு பொன்னாச்சிதான், பொன்னாச்சியைவிட மிகப் பெரிய பேரழகு இங்கு எவருக்கும் இல்லை.''

''அப்படியா? அப்படிப்பட்ட பேரழகை நான் காட்டினால் நீங்கள் என்ன செய்வீர்கள்''

''முழுமையாய் அதனிடமும் சரணடைவேன்.''

''வாரும். முழுமையான பேரழகை உமக்குக் காட்டுகிறேன். வாரும்.'' அவர் எழுந்திருந்தார். நடந்தார். அவன் பின் தொடர்ந்தான். அவருக்குக் குடை விரித்தார்கள். பந்தல் போல், நாலுபக்கமும் குடை விரித்தார்கள். அவர் வருகிறார் என்று எக்காளம் ஊதினார்கள். அவருக்கு முன்னே சிறுபறை முழக்கிக் கொண்டு போனார்கள். வீட்டிலுள்ளவர்கள் எழுந்து வந்து அவரைப் பார்த்தார்கள், மல்லன் பின்தொடர, அவர் வேகமாக கோயில் நோக்கி நடப்பதைக் கவனித்தார்கள். அவர்களில் சிலர், அவர்களைப் பின்தொடர்ந்தார்கள். அவர் கோயிலுக்குள் நுழைந்தார். அரங்கனின் சந்நிதி நோக்கி நடந்தார்.

நல்ல உச்சிவேளை. கோயில் கதவுகள் சாத்தப் பட்டிருந்தன. மற்றவர்களை இரண்டாம் பிராகாரத்திலேயே நிற்கச் சொன்னார். வெள்ளைத்திரை போட்டிருந்தது அவரும், அவனும் நுழைந்தார்கள். கர்ப்பக்கிரகத்தின் கதவுக்கருகே அவர் நின்றார். கைகளை லேசாக அசைத்தார், கதவுகள் தானாகத் திறந்து கொண்டன. அவர் உள்ளே நுழைந்தார். அவன் கர்ப்பக்கிரகத்தின் விளிம்பில் நின்றான். அரங்கனைப் பார்த்துக் கைகூப்பினான். 'அரங்கா, அரங்கா' என்று அன்போடு விளித்தான். அவர் கர்ப்பக்கிரகத்தின் உள்ளே போனார். திரும்பி அவனைப் பார்த்து சிரித்தார்.

''உள்ளே வா'' என்றார்.

'உள்ளே வருவதா? நானா? நான் வைணவன்கூட இல்லையே? பிறப்பால் சைவனாயிற்றே? வெறும் மல்யுத்த வீரனாயிற்றே? தாழ்ந்த குலத்தோனாயிற்றே? நான் கர்ப்பக்கிரகத்தினுள் எப்படி வருவது? ஸ்ரீவைஷ்ணவர்களில், சங்கும் சக்கரமும் தோளில் தரித்தவர்கள் மட்டுமே உள்ளே

நுழைய முடியும். அர்ச்சகர்கள் மட்டுமே இந்த இடத்தைக் கடக்க முடியும். மடத்தைச் சேர்ந்தவர்கள் சிலர் இங்கே வருவதற்கு அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள். வைஷ்ணவ சம்பிரதாயத்தை அனுசரிக்கிற பல பேர் இதைத் தாண்டி வருவதற்கு உரிமை இல்லாதவர்கள். அப்படி இருக்க இராமானுஜர் என்னை எதற்கு உள்ளே அழைக்கிறார்?' ஆச்சரியப்பட்டான். தயங்கினான்.

''உள்ளே வா.'' மறுபடியும் அவர் அழைத்தார்.

அவன் மந்திரத்துக்குக் கட்டுப்பட்டவன் போல உள்ளே நடந்தான். படிகளைக் கவனமாகத் தாண்டினான். அவர் அர்ச்சா ரூபத்தைச் சுற்றிக் கொண்டு அரங்கனுடைய பாதத்தருகே நின்றார். அவனும் அர்ச்சா ரூபத்தை நமஸ்கரித்தபடியே, சுற்றினான். அரங்கனுடைய பாதத்திற்கு அருகே போய் நின்றான். கைகூப்பினான். அவர் அவன் முகத்தைத் தள்ளித் தொட்டு பாதங்களுக்கு அருகே தள்ளினார். நேரே இரண்டு பாதங்களுக்கு நடுவே அவனை நிற்க வைத்தார். அரங்கனின் ஒரு பாதம் நேராக இருந்தது. இன்னொரு பாதம் சற்று சாய்வாக படுத்துக் கொண்டிருப்பவர் எப்படி இருப்பாரோ அப்படி இருந்தது. அரங்கனுடைய பாதத்தில் தங்கக் கொலுசுகள் போடப்பட்டிருந்தன. அரங்கனை அந்த இடத்தில் நின்று பார்க்கிற போது, நீண்ட நெடியோனாய்க் காட்சி அளித்தான்.

''வில்லிதாசனே, வில்லிதானே!'' அவர் மதுரமான குரலில் அழைத்தார். ''உலகில் ஒரு பெண் மீது இத்தனை உண்மையான பிரியம் வைக்க முடிந்தவன், இறைவன் மீதும் பிரியம் வைக்க முடியும். இறைவன் மீது உண்மையான பிரியம் வைத்தவன், மிக உயர்ந்த நிலைக்குப் போகமுடியும். வில்லிதாசனே, நீ கண்ட பொன்னாச்சியின் கண்களைவிட,

மிக அழகான கண்களை இதோ உனக்குக் காட்டுகிறேன். அங்கிருந்தபடியே அரங்கனுடைய கண்களைப் பார். அரங்கனைப் பார்... அரங்கனைப் பார்... அரங்கனுடைய தரிசனம் உனக்குக் கிடைக்கட்டும். அரங்கா... என் அரங்கா... இதோ நம் வில்லிதாசன் வந்திருக்கிறான்... நம் வில்லிதாசன் வந்திருக்கிறான்... அரங்கா... உன்னை அவனுக்கு உணர்த்து'' என்று இரண்டு கைகளையும் உயர்த்தி உரக்கக் கூவினார்.

வில்லிதாசன் உடம்பு நடுங்கிற்று. சில்லென்று வயிற்றுக்குள் ஏதோ நகர்ந்தது. பின் இடுப்பில் ஒரு சக்கரம் சுழன்றது. விடுபட்டது. சக்கரத்திலிருந்து மிகப் பெரிய சக்தி நகர்ந்து, பாம்பு போல் முதுகுத்தண்டில் ஏறியது, நெஞ்சை நச்சென்று அந்த பாம்பு முட்டியது. முட்டிய பிறகு நெஞ்சுக்கூடு உடைந்து வேறொரு சக்தி கிளம்பியது. அந்த சக்தி மார்பு முழுவதும் பரவி தோள் முழுவதும் பரவி, கண்டத்தில் ஏறி, சுழன்று, முறுக்கி நின்றது. மறுபடியும் உயரே ஏறி, நெற்றிக்குள் கரகரவென்று ஏறி, குறுகுறுப்பாய், பம்பரமாய்த் தைத்தது. நெற்றியிலிருந்து விடுபட்டு மேலேறி வெடித்துச் சிதறியது. அவன் அலறினான். வாய்விட்டு அலறினான். இரண்டு கைகளையும் உயர நிறுத்தி அலறினான். நெஞ்சுக்குக் கீழே இருதயத்தைத் தாங்குவது போல இடக்கையை வைத்துக் கொண்டு வலக்கையின் விரல்களைப் பிரித்தபடி மேலே பார்த்து அலறினான். அவன் சக்தி முழுவதும் அவன் தலைக்கு மேல் ஒரு கை உயரத்தில் நின்றுகொண்டிருந்தது. ஒரு கை உயரத்தில் இறைவனுடைய ஆட்சி நடப்பதை அவன் உணர்ந்து கொண்டான். தனக்குள் இருக்கும் சக்தியும் இறைவனுடைய ஆட்சிக்குள் இருக்கும் சக்தியும் ஒன்றே என்பதை உணர்ந்தான். இரண்டும் அருகருகே நின்று

ஒன்றையொன்று வியந்து பார்ப்பதை உணர்ந்தான். உடம்பிலிருக்கின்ற சக்தி, தலைக்கு மேலே இருக்கின்ற சக்தியிடம் போய் நின்று, விம்மி, விம்மி அழுவதை வியந்தான். அந்த அழுகையைத் தானும் உணர்ந்தான். தனக்குள் இருக்கிற சக்தி தவிக்கிறது. அவனும் தவித்தான். கருவறை முழுவதும் ஒரு நீல நிற சக்தி பரவிக் கிடந்தது. வெளிச்சம் இல்லாத ஒரு வெளிச்சம் அங்கு நிரவிக் கிடந்தது.

அந்த நீல ஒளியில் இரண்டு கண்கள் மெல்லத் தோன்றி அவனைப் பார்த்து சிரித்தன. 'வா' என்று அழைத்தன. முகமில்லை. வெறும் கண்கள் மிகப் பெரிய கண்கள். பிரபஞ்சம் முழுவதையும் பார்க்கின்ற கண்கள் அவன் முன்பு தோன்றின. அவன் திகைத்தான். அந்தக் கண்களால் முற்றிலுமாக ஈர்க்கப்பட்டான். அந்தக் கண்களை நோக்கிக் கரம் குவித்தான். 'அரங்கா! அரங்கா' என்று அலறினான். அரங்கன் என்பது சுதை உருவமல்ல. அவை கண்கள் எங்கும் நீக்கமற நிறைந்த ஒரு சக்தி 'ஒளியில்லாத ஒரு ஒளி' மிகப் பெரிய ஒரு இயக்கம் என்பதை அந்தக் கணம் உணர்ந்து கொண்டான்.

தனக்குள்ளும் தன்னைச் சுற்றியுள்ள எல்லா உயிர்களுக்குள்ளும் அந்த சக்திதான் நீக்கமற நிறைந்திருப்பதை உணர்ந்தான். உள்ளும் புறமும் பரவிக் கிடந்ததை உணர்ந்து கொண்டான். எல்லா இடத்திலும் அந்த சக்தியின் ததும்பலை அறிந்து கொண்டான். உடம்பு என்பது அந்த சக்தியின் வேறொரு வடிவம். தாவரம் என்பது அந்த சக்தியின் இன்னொரு ரூபம். தூண் என்பது அந்த சக்தியின் இன்னொரு அம்சம். பூமி என்பது அந்த சக்தியின் இன்னொரு நிலை. காற்று என்பது அந்த சக்தியின் வேறொரு அசைவு. நெருப்பு என்பது அந்த சக்தியின் இன்னொரு தவம். அந்த சக்தியே எல்லாம். அந்த சக்தியே பிரபஞ்சம்

முழுவதும். அந்த சக்தியே இறை. அந்த சக்தியே அரங்கன். அரங்கன் சந்நிதிக்குள் அந்த சக்தி பெரிய திகழ் சக்கரமாய், வட்ட வடிவமாய், மிக அற்புதமாய் நிறைந்து கிடந்தது. அடர்த்தியாய் அந்த அறை முழுவதும் பரவிக் கிடந்தது.

ஸ்ரீராமானுஜர் நெஞ்சுக்குள்ளும் ஒரு சக்கரம் அடர்த்தியாய் சுழன்று கொண்டிருந்தது. கருவறை முழுவதும் பரவியிருந்த அந்த சக்தி ஸ்ரீராமானுஜருடைய திகழ் சக்கரத்துக்குக் கட்டுப்பட்டது. அரங்கா என்று அவர் அழைத்தபோதெல்லாம், அந்த சக்தி அழகாய்த் துடித்தது. அவருக்கு அருகே குவிந்தது. அவர் சொன்னதைச் செய்ய சித்தமாய் இருப்பது போல் வில்லிதாசனுக்குத் தோன்றியது. வில்லிதாசன் மறுபடி அலறினான். அந்த சக்தியின் வேகம் தனக்குள் பரவுவதைத் தாங்க முடியாமல் தவித்தான். திகழ் சக்கரத்தாரின் கால்களில் ஓடிப்போய் விழுந்தான். பற்றிக் கொண்டு நெற்றியைத் தேய்த்தான். அவன் உள்ளுக்குள் ஜீவதாரகையாய், அமுதமாய் ஒரு உணர்வு பரவி அவனைக் குளுமையாக்கியது. இதுவல்ல வாழ்க்கை. இந்த உடலல்ல முடிவு. இது எல்லாம் தாண்டியது. உள்ளுக்குள் இருக்கிற சக்தி எல்லாம் தெரிந்தது. அந்த சக்தியை ஒரு முறை உணர்ந்துவிட, அந்த சக்தியை ஒரு முறை பார்த்துவிட, உடம்பினால் செய்யப்படுகின்ற செயல்கள் மிகச் சாதாரணமாக ஆகிவிடுகின்றன. அந்த செயல்கள் ஒரு நெறிமுறைக்கு உட்பட்டால் அவைகளுக்கு அர்த்தம் இருக்கிறது. இல்லையெனில், அபத்தம்தான் தலை தூக்குகிறது. எனவே, உள்ளுணர்வு என்ன சொல்கிறதோ, உள்ளுக்குள் இருக்கிற சக்தி எப்படி இயக்குகிறதோ அப்படி இயங்க இங்கே இந்த கணத்தில் கற்றுக் கொள்ள வேண்டும். அதைக் கற்றுக் கொடுத்த இந்த திகழ் சக்கரத்தார் பாதங்களை இறுகப் பிடித்துக் கொள்ள வேண்டும். அவன் மறுபடியும்

தலை உயர்த்தி அவர் கருணை முகத்தைப் பார்த்துவிட்டு, அவர் கால்களைக் கெட்டியாகப் பற்றிக் கொண்டான்.

அவர் மெல்லக் குனிந்து அவன் உச்சந்தலையைத் தடவினார். உள்ளுக்குள்ளே கொதித்த அந்த சக்தி மெல்ல அடங்கியது. சுருண்டது, சிறிய புள்ளியாகியது. இருதயத்திற்குக் கீழே உள்ள வெற்றிடத்தில் நிலைகொண்டது. அவன் எழுந்தான். அரங்கனைக் கண்குளிரப் பார்த்தான். கால்களில் தன் நெற்றியைத் தடவிக் கொண்டான். வயிறைத் தடவித் தன் முகத்தில் தேய்த்துக் கொண்டான். மார்புற அரங்கனைத் தழுவிக் கொண்டான். கன்னத்தோடு கன்னம் வைத்தான். மூக்கைத் தொட்டான். இதழை வருடினான். நெற்றியில் முத்தமிட்டான். காதுமடல்களைத் தடவினான். புஜங்களைப் பிடித்தான். விரல்களையெல்லாம் நீவினான். அவரைச் சுற்றி வந்தான். ஆதிசேஷனைத் தடவியபடியே நின்றான். உற்சவரை அள்ளி மார்புறத் தழுவிக் கொண்டான். ஸ்ரீதேவி, பூதேவியைத் தொட்டு வணங்கினான். சாளக் கிராமங்களை எடுத்து நெற்றியில் வைத்துக் கொண்டான். அரங்கனுடைய கௌஸ்துப மாலையைக் கழட்டி தன் நெஞ்சில் சிறிதுநேரம் வைத்துக்கொண்டான். அரங்கனுடைய பூணூலை எடுத்துக் கண்களில் ஒற்றிக் கொண்டான். செங்கோலை எடுத்துத் தோளில் சாய்த்து தலையில் வைத்துக் கொண்டான். மறுபடியும் பழைய இடத்தில் வைத்தான். வெளியே வந்தான். ஒட்டுமொத்தமாய் அந்த அறைக்கு நமஸ்காரம் செய்தான். அவரையும், அந்த அரங்கனையும் ஒன்றாகக் கண்டான்.

அரங்கரே திகழ் சக்கரத்தார் என்கிற ஸ்ரீராமானுஜரே அரங்கன். அது வேறு ஒரு வடிவம் கொண்டு இங்கே உலா வந்து கொண்டிருக்கிறது. ஸ்ரீரங்கம் செய்த பாக்கியம் - ஒரு கடவுள் தம்மைக் குருவாக மூங்கில் சார்த்தி, காவியுடுத்தி

வலம் வந்து கொண்டிருக்கிறது. எல்லாம் வல்ல இறை இங்கே இறங்கி வந்து மனித ரூபம் கொண்டு மெல்லச் சிரித்துக் கொண்டிருக்கிறது. கேலி செய்து கொண் டிருக்கிறது. விளக்கங்கள் சொல்லிக் கொண்டிருக்கிறது. ஆட்சி நடத்திக் கொண்டிருக்கிறது. எல்லோரையும் அன்போடு பரிதவித்து அணைத்துக் கொண்டிருக்கிறது. இது வெறும் மனித ரூபம் அல்ல. இது கடவுள் தன்மை. எங்கும் நிறைந்த இறைசக்தி. இது பிரபஞ்சத்தின் மிகப் பெரிய ஒளி தரையிறங்கி வந்து இறைவன் புகழைப் பாட தன் புகழைத் தானே பாட தீர்மானித்திருக்கிறது. தீர்மானம் செய்து மிகப் பெரிய ஒரு இயக்கத்தை ஆரம்பித்திருக்கிறது. சந்திரர், சூரியர் உள்ளளவும் இங்கே நிகழக் கூடிய ஒரு ஒழுக்கத்திற்கு வித்து வைத்திருக்கிறது, புள்ளியிட்டிருக்கிறது.

இது சாதாரணமல்ல. இது பரதகண்டம் முழுவதையும் வளைத்துப் போடுவதற்கு மிகப் பெரிய திட்டங்கள் தீட்டியிருக்கிறது. இது வெறும் துறவியல்ல. அரசாளும் வல்லமையுடையது. சக்கரவர்த்தி மிகப் பெரிய இராஜதந்திரி. இது தன்னுடைய தந்திரங்களாலும், அன்பினாலும், மக்களைக் கட்டிப்போட்டு, அவர்களை மனம்மாறச் செய்து, ஒரு பெரிய இயக்கத்தை வேரூன்றச் செய்யப் போகிறது. வெளியிலிருந்து வரும் தாக்குதலைத் தடுத்து நிறுத்த தன்னை உறுதியாக்கிக் கொள்ளப் போகிறது. இது காரணமில்லாமல் இங்கு தோன்றவில்லை. இந்து மதத்தின் ஆணிவேர் இன்னும் பூமியின் அடி வரை இறங்கப் போகிறது. எவராலும் அறுக்க முடியாதபடி, கிளைத்து எழுவதற்காக இங்கே இது இன்னும் உறுதியாய் பரவியிருக்கிறது. பரவ இவர் முயற்சி செய்கிறார்.

இது இறை. இது குரு. இது திகழ் சக்கரம். இவர் ஸ்ரீராமானுஜர். இவை எல்லாம் ஒன்றே. அவன் மறுபடியும்

விழுந்து நமஸ்கரித்தான். விம்மி, விம்மி அவரைப் பார்த்து அழுதான். ''ஐயனே, ஐயனே, ஐயனே'' என்று அவரை நோக்கிக் கைவிரித்துக் கதறினான். அவர் கருவறையில் இருந்தபடியே கை உயர்த்தி அவனை ஆசீர்வதித்தார்.

அரங்கன் கருணையுள்ளவன். அவர் நினைத்ததைவிட மிகத் தெளிவாகத் தன்னை வில்லிதாசனுக்குக் காட்டி யிருக்கிறான். வில்லிதாசனுடைய உண்மை, வில்லிதாச னுடைய வெகுளித்தனம் அவனுக்கு எதைப் பார்க்க வேண்டுமோ, அதைக் காட்டிக் கொடுத்துவிட்டது. இது வீரிய வித்து. இது மிகப் பெரிய சொத்து. இது சுத்தமான பொருள். இது நிர்மலமான விஷயம். அதனால்தான் இறைதரிசனம் மிக எளிதாக இவனுக்குள் ஏற்பட்டு விட்டது. பெண்ணைக் கொண்டாடுகிறவன் இல்லை இவன். தாசியின் பின்னால் போகிறவன் இல்லை இவன். பெண்ணின் அழகுக்காக மாய்ந்து, மாய்ந்து குடை பிடித்து, நடைபாவாடை விரிக்கின்ற சாதாரண காமுகன் இல்லை இவன். இவன் உயர்ந்த ஜாதி. உள்ளுக்குள்ளே என்ன இருக்கிறதோ, அதையே வெளியே செய்கிற தைரியமுள்ள புருஷன். பௌருஷம் நிரம்பியவன். உள்ளே என்ன நினைத்துக் கொண்டிருக்கிறானோ, அதுவே வெளியே தன் வாழ்க்கையாகவும் வைத்துக் கொண்டிருக்கிறான். உலகில் எல்லா ஆண்களும், உள்ளொன்றும் புறமொன்றுமாக இருக்க, நல்லதும் தீயதுமாகக் கலந்திருக்க, இவன் வெகுளியாய், ஒற்றையாய் நிற்கிறான். அதனால்தான் இறைதரிசனம் இவனுக்கு எளிதில் ஏற்பட்டுவிட்டது. இவனை நாம் தேர்ந்தெடுத்தது சரியான விஷயம். இவன் வைணவத்தின் ஒரு தூண். இவன் நமக்கு உகந்தவன். இவன் நம்மில் ஒருவன்.

அவர் வெளியே வந்தார். கைநீட்டி அவன் தோளை பற்றிக் கொண்டார். ''நட'' என்றார்.

உள்ளே தனித்தனியாய் போனவர்கள், அவர் முன்னாலும் இவன் பின்னாலுமாய் நடந்தவர்கள், வெளியே வரும்போது கிட்டத்தட்ட ஒருவரையொருவர் தழுவியபடி வந்தார்கள். அவர்கள் வருவதைப் பார்த்து, அவர்கள் வருகிற கோலம் பார்த்து சீடர்கள் திகைத்தார்கள். அவர் மடம் போகும் வரையில் அவன் தோள் பற்றியே நடந்தார். ஊர் இதை வியப்பாகப் பார்த்தது. ஏதோ காரணம் இருக்கும் என்று நினைத்துக் கொண்டது.

வில்லிதாசன் தாழ்ந்த குலம் அல்லவா? ஆனாலும் அவனுக்குள் ஏதோ ஒரு சக்தி இருக்கிறது. அதனால் அவனுக்கு உணர்த்திவிட்டு, இப்போது மடத்துக்கு வந்து, ராமானுஜர் நன்கு ஸ்நானம் செய்துவிடுவார். தீட்டுபோகக் குளித்து விடுவார். கிணற்றில் நீர் இறைத்து பத்து குடம் ஜலம் தலையில் ஊற்றிக் கொண்டால், வில்லிதாசனைத் தொட்ட தீட்டு உடனே அழிந்துவிடும் என்று சீடர்கள் நினைத்துக் கொண்டார்கள். ஊரும் நினைத்துக் கொண்டது. அவர் மாலை நேர பூஜைக்கு உட்கார்ந்தார். பூஜை செய்யத் தொடங்கினார், அந்தணர்கள் முகம் சுழித்தார்கள். 'வில்லிதாசனைத் தொட்ட தீட்டைக் கழிக்காமல் பூஜை செய்கிறாரே? இந்த பிரசாதத்தை எடுத்து கொள்ளலாமா? வேண்டாமா?' என்று யோசித்தார்கள். எடுத்துக் கொண்டவர்கள் பாக்கியவான் ஆனார்கள். எடுத்துக் கொள்ளாதவர்கள் ஒதுக்கப்பட்டார்கள்.

பிற்பகலில் வெளியே போனார். காணவே இல்லையே. பொன்னாச்சி திகைத்தாள். அவளுக்கு செய்தி வந்தது. இராமானுஜருடைய மடத்திலே, திண்ணையில் உட்கார்ந்திருப்பதாக செய்தி வந்தது. அவரும் வில்லிதாசனும் கோயில் கருவறைக்குள் நுழைந்தார்கள். கதவு சார்த்திக் கொண்டார்கள். உள்ளிருந்து அலறும் சத்தம்

கேட்டது. வில்லிதாசன் ஒரு மனமயக்கத்தில் நடந்து வந்தான். அவன் தோளைப் பிடித்தபடி, இராமானுஜர் தொடர்ந்து வந்தார். இராமானுஜரும், வில்லிதாசனும் தழுவியபடியே மடத்துக்கு நடந்து போனார்கள் என்றெல்லாம் செய்தி வந்தது. அவள் திகைத்தாள். 'என்னவாயிற்று, தன் புருஷனுக்கு. அவன் மிக நல்லவன் தான். என்ன சொன்னாலும் கேட்பவன்தான். அதற்காக ராமானுஜர் தழுவிக் கொள்ளும் அளவுக்கு நல்லவன் ஆகிவிட்டானா? எப்படி இது? என்ன நடந்தது?' அவள் ஓடிப்போனாள்.

மடத்தின் வாசலில் நின்றாள். மடத்தில் உள்ளோர் வழிவிட்டார்கள். திண்ணையில் உட்கார்ந்து தரையைப் பார்த்துக் கொண்டிருந்தவனை, அவள் அணுகி மெல்லத் தோளசைத்தாள். ''என்ன நடந்தது?'' என்றாள். அவள் அவளை நிமிர்ந்து பார்த்தான். அவன் கண்களை நோக்கினான். அவள் அழகைப் பார்த்தான். சிரித்தான். 'இது ஒன்றுமே இல்லை. ஒன்றுமே இல்லை.' அந்த அழகுக்கு இவள் அழகு உறை கூட காணாது. அது முழுமை. இது அதனுடைய ஒரு சிறிய துளி. இந்த துளியின் பல நூறு கோடிகள் சேர்ந்தால்தான், அந்த அழகினுடைய முழுமை வெளிப்படும். அந்த அழகைப் பார்த்த பிறகு, இந்த மானிட ரூபமும், இந்த பொய்ம்மையும், இதன் அபத்தமும் புரிகின்றன. அவன் கண்களை மூடிக் கொண்டான்.

தன்னைப் பார்த்த பிறகு, கண்களை மூடிக் கொள்கிறானே. பொன்னாச்சி திகைத்தாள். அவன் கண்கள் மூட அவனுக்குள் அந்த அரங்கனது கண்கள் தோன்றின. அவன் சிரித்தான். தன்னைப் பார்த்துப் பேசாது தனக்குள்ளேயே சிரித்துக் கொண்டிருக்கிறானே. பொன்னாச்சி அதிசயப்பட்டாள்.

''என்ன நடந்தது? என் புருஷனே, தயவுசெய்து எனக்கு சொல்லுங்கள்.''

''பொன்னாச்சி, வா... நாம் எங்கேனும் போய் பேசுவோம்.'' அவன் எழுந்தான். தோளில் துண்டு போட்டுக் கொண்டு முன்னே நடந்தான். பொன்னாச்சி பின் தொடர்ந்தாள். பொன்னாச்சி முன் நடக்க பின்தொடர்வது தான் இதுவரை வழக்கம். ராமானுஜர் அதை மாற்றி அமைத்தார். இறைவனைத் தெரிந்தவன் முன்னே போக, இறைவனைத் தேடுகிறவள் பின்னே தொடர்ந்தாள். அவர்கள் இருவரும் காவிரிக் கரைக்குப் போனார்கள். அரச மரத்தடியில் அமர்ந்தார்கள். இரவு மெல்ல சூழ்ந்து கொண்டது.

பொன்னாச்சிக்கு வில்லிதாசன், தன் அரங்க அனுபவத்தை, அரங்கநாத தரிசனத்தை, இறையின் மாட்சியை விளக்கத் துவங்கினான். பொன்னாச்சி அவனுக்கு அருகே அமர்ந்து கேட்டாள். பிறகு காலடி அருகே அமர்ந்து கொண்டாள். அவன் சொல்ல, சொல்ல அவன் பாதங்களைப் பற்றிக் கொண்டாள். அவளுக்குள் ஒரு கிளர்ச்சி ஏற்பட்டது.

''எனக்குத் தெரியும், எனக்குத் தெரியும். இது நடக்கப் போகிறதென்று எனக்குத் தெரியும். இன்று நேற்றல்ல. என்று நான் பெண்ணாக அமர்ந்தேனோ, அப்போதே என்னை ஆள ஒரு ஆள் வருவான். அவன் இறை அனுபவம் பெற்றவனாக இருப்பான் என்று எனக்கு சொல்லப்பட்டது. எனக்கு ஒரு கனவு வந்தது. அந்த கனவில், என்னை நேசிக்கிறவனுக்குப் பின்னால், அரங்கன் இருப்பதை நான் கண்டுகொண்டேன். என்னை நேசிக்கிறவனுக்குப் பின்னால், ஒரு ஒளிவட்டம் இருப்பதைப் பார்த்தேன்.

இவன் இறைவனா, அல்லது இறைதூதனா என்று நினைத்தேன். என் அழகை நேசிக்கிறவன், என்னைக் கொண்டாடுகிறவன் இறைவன் அருளைப் பெற்றவனாகத் தான் இருப்பான் என்று அப்போது நினைத்துக் கொண்டேன். இப்போது புரிகிறது. இறை அனுபவத்தைக் கண்ணெதிரே பார்த்தவர் என் புருஷர் என்பது புரிகிறது. ஐயா, நான் உங்களை ஏதேனும் தவறாக நடத்தியிருந்தால் தயவுசெய்து மன்னித்துவிடுங்கள். உங்களிடம் எகத்தாளமாய் பேசியிருந்தால் தயவுசெய்து இந்த சிறுமியை மன்னித்துவிடுங்கள். உங்களுடைய முகத்தில் இருந்து உங்கள் தரிசனம் எனக்குப் புரிகிறது. இறைவனைத் தெரிந்துவிட்டீர்கள் என்று உங்கள் ஒவ்வொரு பேச்சும் சொல்கிறது. இறைவனை அனுபவிக்காதவர்கள் இப்படிப் பேச முடியாது. இப்படிப் பார்க்க முடியாது. இப்படிப் பதற முடியாது. ஐயனே, வில்லிதாசரே. உம்மை பல நூறுமுறை நமஸ்கரிக்கிறேன். என்னை ஏற்றுக் கொள்ளும். என்னை உதறிவிடாதேயும். துறவு அடைந்துவிடாதேயும். என்னையும் நீங்கள் கண்ட இறை தரிசனத்துக்கு அழைத்துப் போங்கள். என்னையும் உங்களோடு சேர்த்துக் கொள்ளுங்கள். பெண் என்று என்னை உதறாமல் உங்களோடு அணைத்துக்கொண்டு, உங்களுக்கு ஏற்பட்ட அந்த அற்புத அனுபவத்தை எனக்கும் கற்றுக் கொடுங்கள்.'' அவள் கதறினாள்.

அவன் குனிந்து அவள் முதுகைத் தொட்டான். எழுப்பினான். அருகே அமர்த்திக் கொண்டான். அவள் கைகளைப் பிணைத்துக் கொண்டான். புருஷனும், மனைவியும் உடம்பு முக்கியமில்லை என்பதை உணர்ந்து, வெறுமே கைகளைப் பிணைத்துக் கொண்டு, வெகுதூரம், வெகுதூரம் வெட்டவெளியை, காவிரியையும் தாண்டி

தோன்றுகின்ற நீல வானத்தைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். காவிரி நிதானமாக நடந்து கொண்டிருந்தாள்.

குருவால் இறைதரிசனம் பெற்ற புருஷனும், புருஷன் மூலம் இறைதரிசனம் பெறத் துடிக்கும் மனைவியும் அன்று இரவு முழுவதும் காவிரிக் கரையிலேயே அமர்ந் திருந்தார்கள். அப்படி ஒரு இரவை அவர்கள் அனுபவித்ததே இல்லை.

4

குருவின் அண்மை என்பது பூர்வ ஜென்ம வாசனை. முற்பிறப்பில் ஏற்பட்ட தொடர்பு. ஒரு குருவைப் பல ஜென்மங்களாகத் தொடர்ந்து, நமஸ்கரித்து, ஆராதித்து, ஆனந்தமாய்க் கொண்டாடி வந்தவர்களுக்குத்தான் இப்பிறப்பில் திடுமென்று தொடர்பு ஏற்படும். வில்லிதாசன் இராமானுஜருடைய பெயரைக்கூடத் தெரிந்து வைத்திருக்க வில்லை. ராமானுஜர் என்ன செய்கிறார் என்று அவனுக்குத் தெரியவில்லை. ராமானுஜர் முக்கியமானவரா, அல்லரா என்பது பற்றி அவனுக்கு அபிப்பிராயம் ஏது மில்லை. அவன் பொன்னாச்சியின் அழகிலேயே கட்டுண்டு கிடந்தவன். ஆயினும் ராமானுஜர் வலியப் போய் அவனை ஆட்கொண்டார். 'என்னிடம் வா, என்னிடம் வா' என்று அவனுக்காக ஏங்கினார். குரு, சிஷ்யனை அழைத்தார். வெகு அருகில் வைத்துக் கொண்டார். அவனுக்கு நல்லவைகளைச் செய்தார். அவன் பக்குவப்பட்டபோது, அவனை அழைத்துக் கொண்டு போய் இறைதரிசனம் காட்டினார்.

குருவின் அண்மை ஒருவனுக்குக் கிடைத்தால், அதைவிட மிகப் பெரிய பொக்கிஷம் உலகத்தில் எதுவும்

இல்லை. செல்வத்தைவிட, நல்ல மனையாளைவிட, உயர்ந்த குலத்தைவிட, அகன்ற படிப்பை, ஆழமான தத்துவ ஞானங்களைவிட, குருவின் அண்மை, குருவின் நட்பு, குருவினோடு ஏற்படுகிற உறவு மிகப் பெரிது. இவை யெல்லாவற்றையும், கீர்த்தியையும், ஞானத்தையும், புலமையையும், நல்ல வாழ்க்கையையும், ஆரோக்கியமான உடம்பையும், நீண்ட ஆயுளையும் குருவினுடைய நட்பு கொடுப்பதற்கு வல்லது.

ஞானம் பிறப்பால் வருவதன்று. எல்லாரிடமும் அன்பு செலுத்துவதற்குப் பெயர்தான் ஞானம். எல்லாரிட மும் அன்பு செலுத்தவதற்கு உயர்குடிப் பிறப்போ, ஆழ்ந்த படிப்போ வசதியோ தேவையே இல்லை. அன்பாக இருக்கவும் பூர்வ ஜென்ம புண்ணியம் செய்திருக்க வேண்டும். எல்லாப் பிறவிகளிலும் அன்பாக இருந்து பழக்கப்பட்டிருக்க வேண்டும்.

மல்லனாக வாழ்க்கை இருந்தாலும், வில்லிதாசன் அன்பாக இருந்தான். அவன் தொழில் அடித்துத் துன்புறுத்துவதாக இருந்தாலும், யாரையும் அழச்செய்யாது இருந்தான். அவனுடைய குலம் வன்முறைக்குப் பெயர் போன குலமாக இருந்தாலும், அவன் எவர் மனதையும் நோகச் செய்யாது இருந்தான். அந்தணனாகப் பிறந்துவிட்டு, அறவழி நிற்பது பெரிதல்ல, செல்வனாக வாழ்ந்துவிட்டு, வள்ளலாக இருப்பது வியப்பல்ல. அறிஞனாக இருந்து விட்டு, அற்புதமாக பேசுவது ஒன்றும் அதிசயமில்லை. ஆனால், இவைக்கு நேர்எதிரான ஒரு குலத்தில் பிறந்துவிட்டு, அந்தத் குலத்தின் தன்மைகளுக்குத் தலை வணங்காமல் தெளிவாய், திடமாய் நல்லது நோக்கி ஒருவன் வளர்ந்திருக்கின்றானேயானால், அது அவன் பூர்வஜென்ம புண்ணியம்தான் காரணம்.

திகழ் சக்கரம் என்று மக்களால் வர்ணிக்கப்படுகின்ற ஸ்ரீராமானுஜர் மனிதருள் ஒரு மாணிக்கத்தைக் கண்டார். குளிக்கப்போகும்போது, முதலியாண்டான் என்கிற சீடரின் தோள் பிடித்துப் போய், காவிரியில் நீராடிவிட்டு, தூய்மையான பிறகு வில்லிதாசன் என்கிற இந்த இளைஞ னுடைய கையைப் பற்றிக் கொண்டு கரையேறினார். கோயிலுக்கு நடந்தார்.

உள்ளத்தால் பரிசுத்தமானவன். புத்தியில் தெளிவுள்ளவன். அன்பினால் எல்லோரையும் கவர்ந்தவன். அடக்கத்தால் குருவின் அன்பிற்கு பாத்திரமானவன். கையைப் பிடித்துக் கொண்டு அவர் அரங்கன் கோயிலுக்கு நடந்தார். மனிதர்களில் உயர்ந்தவனைக் கண்டுபிடித்த பெருமிதத்தோடு அரங்கனைத் தரிசிக்கச் சென்றார். உயர்குலத்தில் பிறந்ததாய் நினைத்துக் கொண்டவர்கள், வெறும் பழக்க வழக்கங்களால் தங்களை உயர்குலத் தோராகக் கற்பித்துக் கொண்டவர்கள், சிறிதளவு மொழி அறிவாலும், சிறிதளவு தத்துவ அறிவாலும் தாங்கள் மிகப் பெரிய விற்பன்னர்களாகக் கதைத்துக் கொண்டவர்கள், வில்லிதாசன் கையைப் பிடித்து ராமானுஜர் நடப்பதைப் பார்த்து மனம் நொந்தார்கள்.

தங்கள் கையைப் பிடித்து நடக்கவில்லையே என்ற பொறாமை, அவர்களை வேறுவிதமாகச் பேச வைத்தது. குளித்துவிட்டு தாழ்ந்த குலத்தோனின் கையைப் பிடித்துக் கொண்டு கோயிலுக்குள் நுழைவதா! ஏன் இப்படி திகழ் சக்கரத்தார் செய்கிறார்? ஸ்ரீராமானுஜர் செய்வது சரியல்லவே? இதை நாம் மறைமுகமாகவேனும் அவருக்கு எடுத்துரைக்க வேண்டுமே என்று சொன்னார்கள். அவ்வப்போது பின்புறமாக உரத்த குரலில் புலம்பினார்கள். நொந்து கொண்டார்கள். ராமானுஜர் காதுகளிலும் இவை

விழுந்தன. ஆனால், சிறிதளவும் இலட்சியம் செய்யாமல் கரையேறியதும் வில்லிதாசன் எங்கே என்றுதான் தேடினார்.

வில்லிதர்சனும், பொன்னாச்சியும் அவருடைய அன்புக்கு அடிமையானார்கள். அவர் ஆதரவுக்கு ஏங்கினார்கள். வில்லிதாசன் தோள் கொடுத்து வரும்போது பொன்னாச்சி ஸ்ரீராமானுஜரையும், வில்லிதாசனையும் பின் தொடர்ந்தாள். புருஷன் ராமானுஜருக்குத் தோள் கொடுத்து நடந்து வருவதை, புளகாங்கிதத்துடன் பார்த்ததாள். ஸ்ரீரங்கத்தின் குலப் பெண்கள் அந்த தேவரடி யாரைக் கையெடுத்துக் கும்பிட்டார்கள் . 'என்ன பாக்கியம்? என்ன பாக்கியம்?' என்று அவள் காதுபட புகழ்ந்து பேசினார்கள்.

ஸ்ரீரங்கத்தின் வைணவர்கள் பலர், வில்லிதாசனின் மகிமையை உணர்ந்த குரு அவனுக்குக் கொடுத்த அனுபவத்தைக் காதாரக் கேட்டு வியந்தார்கள். 'இது ஏதோ ஒரு அற்புதமன விஷயம்' என்று நெட்டுயிர்த்தார்கள். வில்லிதாசன் முகத்தில் தேஜஸைப் புரிந்துகொண்டு, அவனுக்கு ஜாதி வித்தியாசம் பாராமல் வணக்கம் செய்து, அவனோடு சந்தோஷமாகப் பேசினார்கள். ஆனால், ஐந்து விரல்களும் ஒரு மாதிரி இல்லை. உலகத்தில் பொறாமையாளர்களும் உண்டு.

தனக்குக் குருவின் அன்பு கிடைக்காததால், தன் குருவின் அன்பிற்குப் பாத்திரமாகாததால், அதற்குண்டான வழிகளை நேராகக் கடைப்பிடிக்க முடியாமல் குருவின் அன்பிற்குப் பாத்திரமானவர்கள் மீது பொறாமைப்பட சிலர் ஆரம்பித்தார்கள். குரு தன் தோள் மீது கை வைத்து, காவிரியிலிருந்து திரும்பி வந்ததால், அதை சாக்காக வைத்து அவன் செய்கையை காசாக மாற்றி இருக்கலாம். தன்னையும் குருவாக உயர்த்திக் கொண்டிருக்கலாம். பல பேரைத் தன்

காலில் விழும்படிச் சொல்லி, ஆசீர்வாதம் பண்ணி கம்பீரமாய் வாழ்ந்திருக்கலாம். இவையெல்லாம் வில்லிதாசனுக்குப் போய்விட்டது. வில்லிதாசன் இவையெல்லாம் செய்யவில்லை. தானும் உண்ணாமல், உண்பவருக்கும் கொடுக்காமல் ஒரு நல்ல விஷயம் கலைந்த போயிவிட்டது. எனவே, ஆசை அதிகம் உள்ளவர்கள் பேராசை ருசியில் உள்ளவர்கள், வில்லிதாசனைப் பார்த்துப் பொறாமைப்பட்டார்கள் இந்த விஷயத்தை உபயோகப் படுத்திக் கொள்ளேன் என்று அருகே போய் காதோரம் பேசினார்கள்.

''உங்களை நான் உபயோகப்படுத்திக் கொள்ளட்டுமா? வில்லிதாசனிடம் போய் நமஸ்காரம் செய்யுங்கள். வில்லிதாசன் ஆசீர்வாதம் செய்தால் உடனே குழந்தை பிறக்கும் என்று சொல்லட்டுமா. அதற்காக அரைக்கழஞ்சு பொன் சன்மானமாக வாங்கிக் கொள்ளட்டுமா?''

வில்லிதாசன் நிமிர்ந்து பார்த்து சிரித்தான். ''வேறு வேலை இல்லை போங்கள் ஓரம்...'' என்று கடுகடுத்தான். அவர்கள் விதிர்த்துப் போனார்கள். எந்த வழிக்கும் வராத வில்லிதாசனை அப்புறப்படுத்த ஆயத்தமானார்கள். அதற்கு ராமானுஜரைக் குறை சொன்னார்கள்.

''என்ன இருந்தாலும் வில்லிதாசன் தாழ்ந்த குலமல்லவா? அவன் கையைப் பிடித்துக் கொண்டு, பிராமண குலத்தில் பிறந்த ஸ்ரீராமானுஜர் கையைப் பிடித்துக் கொண்டு பவனி வரலாமா? துறவியாக இருந்தாலும், ஜாதி இல்லை என்று ஆகிவிட்டதா? அப்போது பிராமணர்களுடைய மதிப்பு குறைந்துவிடுமல்லவா? வில்லிதாசனுடைய குலம் உயர்ந்துவிடும் அல்லவா? வில்லிதாசனை, ராமானுஜரே கைபிடித்துக் கொண்டு வருகிறார்.' உம்மைத் தொட்டால் என்ன என்று நாலு மல்லர்கள் வந்து என்னைக்

கட்டிப்பிடித்தால் நான் என்ன ஆவேன்? இது கெடுதலுக்கு வழி. கேடு செய்யும் ஆரம்பம், எனவே, ஸ்ரீராமானுஜர் உடனடியாக வில்லிதாசன் கைபிடித்து வருவதை நிறுத்த வேண்டும். அவனை அப்புறப்படுத்த வேண்டும். மடத்தின் வாசலிலேயே அவனை நிற்க வைக்க வேண்டும். அவன் மட்டுமல்ல. அவன் மனைவி தேவரடியார். தேவரடியாளை நாம் ஏறெடுத்துப் பார்ப்பதும் இல்லை. அவளோடும் சம்பாஷித்துக் கொண்டு வருகிறார். இது நகைப்புக்கு இடமாக இருக்கிறது. துறவிகள் தேவரடியாரோடு பேசிக்கொண்டு வந்தால், மற்றவர்கள் எல்லாம் உட்கார்ந்து வம்பளக்க ஆரம்பித்துவிடுவார்கள். அவர்கள் இருவரும் அரங்கனைப் பற்றித்தான் பேசிக் கொண்டு, வருகிறேன் என்று சொன்னால் யாரும் நம்ப மறுக்கிறார்கள். எனவே, வில்லிதாசனையும், பொன்னாச்சியை யும் மடத்திலிருந்து விரைவாக அப்புறப்படுத்துவது மடத்துக்கு நல்லது. வைணவத்துக்கு நல்லது. ஸ்ரீராமானுஜ ருக்கு நல்லது என்று உரத்தக் குரலில் பேசத் துவங்கினார்கள்.

ராமானுஜர் க்காதுகளிலும் இந்த விஷயம் போய்ச் சேர்ந்தது. ஆனால், குரு சகலமும் அறிந்தவர். நடக்கப் போவது என்ன என்று தெளிவாகத் தெரிந்தவர். யார் எவ் விதம் இயங்குவார்கள் என்பதை முன்கூட்டியே கணித்தவர். அப்படி இயங்கினால், பதிலுக்கு எப்படி இயங்க வேண்டும் என்று தெளிவாக அறிந்தவர். குருவினுடைய ஆற்றலைத் தெரியாதவர்கள், குருவினுடைய உயரம், அகலம் தெரியாதவர்கள், குரு என்பதில் ஆழம் தெரியாதவர்கள். குரு தன்னோடு சல்லாபிப்பதாலேயே சௌக்கியமா என்று கேட்பதாலேயே தனக்கு அருகே வந்து உட்கார்ந்து சாப்பிடுவதாலேயே தான் சமைத்துக் கொண்டு வந்ததை விரும்பி உண்பதாலேயே தனக்கு சமம் என்று

நினைத்துவிடுகிறார்கள். குருவைப் பற்றி எல்லாம் தெரியும் என்று அகந்தை கொள்கிறார்கள். குருவினுடைய வேரோட்டம் மிகப் பெரியது என்று அவர்களுக்குத் தெரியவில்லை. குரு ஒரு பெரிய நதி என்பதை அவர்கள் மறந்து போகிறார்கள். ஒரு சின்ன சுழலில் குரு அவர்களை வேறிடத்துக்குக் கொண்டு போய் தள்ளிவிடுவார் என்பதை அறியாது இருக்கிறார்கள். குரு கருணையால் வெறும் காலை மட்டும் நனைத்துவிட்டுப் போகிறார். குரு கருணையால் லேசாகக் குளுமையாக்கிவிட்டுப் போகிறார் என்பது புரியாமல் வாழ்கிறார்கள்.

ஸ்ரீரமானுஜர் இந்த பேச்சுகளை உள்வாங்கிக் கொண்டார். வில்லிதாசனை அழைத்தார். ''நமது மடத்தின் வேட்டிகள் துவைத்து உலர்த்தப்பட்டிருக்கின்றன.''

''ஆமாம், ஐயா. அவை உங்களுடைய சீடருடையவை.''

''வில்லிதாசா, பகற்பொழுது, எல்லோரும் உண்டு விட்டு அயர்ந்து தூங்குகிற நேரம். நீ என்ன செய்ய வேண்டும் தெரியுமா? அந்த வேட்டியில் ஒவ்வொரு ஜாண் கிழித்து விடு. நீள, நீளமாய் வேட்டியைக் கிழித்துவிட்டால், இடுப்பிலிருந்து கணுக்கால் வரைக்கும் தொங்கும் வேட்டி கணுக்காலுக்கு மேலாக முழங்காலுக்குக் கீழாக தொங்கும். பார்ப்பதற்கு மிகக் கம்பீரமாக இருக்கும். இந்த ஆடைகளைக் கிழித்துவிட்டு, அந்தத் துணிகளைச் சுருட்டி எடுத்துக் கொண்டு போய்விடு.''

எதற்கு என்று வில்லிதாசன் கேட்கவில்லை. சரியென்று தலையசைத்தான். மிகச் சரியான ஒரு ஜாண் அளவெடுத்தான். எல்லாத் துணிகளையும் நீள வாக்கில் கிழித்தான். கிழித்த துண்டுகளைச் சுருட்டி எடுத்துக் கொண்டான். தன் வீடு நோக்கிப் போனான்.

சீடர்கள் எழுந்தார்கள். மாலை நேரம் உலர்ந்த துணியை மடித்து வைத்து, மறுநாள் மடியாகக் கட்டிக் கொள்ள, ஆயத்தமானார்கள். துணியை எடுத்து மடிக்கும் போது, வேட்டி ஒரு ஜாண் கிழிக்கப்பட்டிருப்பதை உணர்ந்தார்கள். ''எவன் என் வேட்டியைக் கிழிச்சது?'' ஒருவர் உரக்கக் கத்த ஆரம்பித்தார்.

''எந்த படுபாவியோ என் வேட்டியையும் கிழித்திருக்கிறானே?'' இன்னொருவர் கூவ ஆரம்பித்தார்.

''சண்டாளன், சண்டாளன்... என் வேட்டியும் கிழிஞ்சிருக்குய்யா, யாருடைய வேலை இது? என்ன நினைச்சிட்டிருக்கிறானுவ?'' தலைக்குத் தலை உரக்கக் கத்தினார்கள். அடாத வார்த்தைகள் பேசினார்கள். ஒரு துறவிக்கு சீடர்களாக இருக்கிறோம் என்பதையும் மறந்து விட்டார்கள். கிழிந்து போகின்ற ஒரு வேட்டிக்காக இல்லாத கெட்ட வார்த்தைகளையெல்லாம் இறைத்தார்கள். வாசலில் நின்று கத்தினார்கள். 'யார்? யார்?' என்று தேடினார்கள். கையில் பிரம்பெடுத்து தெருவில் அலைந்தார்கள். 'தொலைத்துக் கட்டிவிடுகிறேன், பார்' என்று உறுமினார்கள். அவர்களால் முடியாதது எதுவுமே இல்லை. மிகப்பெரிய போர் வீரர்கள் போல் அவர்கள் நடந்து கொண்டார்கள்.

சாது என்கிற தன்மையை அறவே இழந்து, ஒரு ஜாண் கிழிசலுக்காக ஊரை நாறடித்தார்கள். தெரு மிரண்டது. மடத்திலுள்ளவர்கள் ஏன் இத்தனை கோபமாக இருக்கிறார்கள் என்று புரியாமல் பார்த்தது. அவர்கள் கோபத்துக்குப் பயந்து உள்ளே பதுங்கிக் கொண்டிருந்தனர். அவர்கள் பதுங்குவதைப் பார்த்து இவர்கள் இன்னும் தாறுமாறாகப் பேச ஆரம்பித்தார்கள். ஆனால், கடைசி வரை கிழித்தது யார் என்று தெரியவே இல்லை.

கர்வம் கிழிக்கப்படுவதற்கு முன்பு குருவால் வேட்டிகள் கிழிக்கப்பட்டன. பகற்பொழுதிலும் வேட்டிக்குக் காவல் இருக்க வேண்டும் என்று அவர்கள் முறை போட்டு கொண்டார்கள். இன்றைக்கு நீ காவல், நாளைக்கு நான் காவல் என்று முற்றத்து வெயிலில் பருப்புக் குவியல் போல் உட்கார்ந்து கொண்டார்கள். வேட்டிகளைக் காவல் காத்தார்கள்.

பதினைந்து நாள்களுக்குப் பிறகு வேட்டிக் கிழியலின் வேதனை அடங்கியபிறகு, ராமானுஜர் கூவியவர்களை அருகே அழைத்தார். 'மடத்தின் நிதி நிலைமை மோசமாக இருக்கிறது. என்ன செய்வது?'' என்றகேட்டார்.

ஆளாளுக்குத் தகுந்த யோசனைகள் சொன்னார்கள்.

''தோழர்களிடம் போய்க் கையேந்துவதில் எனக்கு விருப்பமில்லை. இங்குள்ளோரிடம் அடிக்கடி போய் காசு கேட்பதும் சரியாகப்படவில்லை. இதற்கு உடனடியாக ஒரே ஒரு தீர்வுதான் இருக்கிறது'' என்று ஸ்ரீராமானுஜர் அடிக்குரலில் பேசினார். குரு தாழ்ந்த குரலில் பேசியதும் சீடர்கள் நெருங்கி உட்கார்ந்து கொண்டார்கள். அவர்களும் ரகசியமாக என்ன வழி இருக்கிறது என்று குருவை கேட்டார்கள்.

''வில்லிதாசனின் மனைவி பொன்னாச்சியின் கால் தண்டைகளைப் பார்த்திருக்கிறீர்களா? நவரத்தின மணிகள் அணிந்த கால் சதங்கை அது. பரம்பரை பரம்பரையாக அவள் போட்டுக் கொண்டிருப்பது, அந்த தண்டை இரண்டையும் விற்று வந்தால், பல மாதங்களுக்கு நம் மடத்துக்கு உணவுப் பஞ்சம் ஏற்படாது. அவள் தாழ்ந்த ஜாதி. அவளிடம் போய் பிராமணர்களான உங்களைக் கையேந்தி, பிச்சை எடுக்க அனுமதிப்பதற்கு எனக்கு விருப்பமில்லை.''

வேறு என்ன வழியிருக்கிறது என்று யோசித்தார்கள்.
''கழட்டிக் கொடுத்துவிடு என்று நீங்கள் உத்தரவிட்டால்
கொடுத்து விடுவாளே!'' ஒரு பிராமணன் சொன்னான்.

''ஆனால், அதுவும் யாசகம் போலதானே? அப்படிச்
செய்யலாமா? மடத்துக்கு காசில்லை, கழட்டிக் கொடு
என்று நீ கேட்பாயா?''

அவன் மாட்டேன் என்று சொல்லிவிட்டான்.
''அதுதான் முறை. ஒரு தாசியிடம் போய் கால் சிலம்பை
கழட்டிக் கொடு என்று கேட்டு, அவள் ஊர் முழுக்க
உன்னைப் பற்றிச் சொன்னால் நன்றாகவா இருக்கும்?
தாசிக்கு நீ கொடுப்பது போக, நீ தாசியிடமிருந்து
வாங்கினால், உன் குலத்திற்கு என்ன மதிப்பு?'' அவர்
கேட்க, அவன் தலைகுனிந்து கொண்டான்.

''பிறகு என்னதான் வழி?'' மற்றொருவர் கேட்டார்.

''பேசாமல் தாசி பொன்னாச்சி தூங்குகிறபோது,
திருடிக் கொண்டு வந்துவிடுங்கள்.''

''அது ஒன்றும் கடினமில்லை. திருடிவிடலாம்.
பக்குவமாக நுழைந்து, பக்குவமாக தண்டையை வளைத்து
இழுத்து, காலிலிருந்து பிரித்து எடுத்து விடலாம். ஆனால்...''

''என்ன ஆனால்...?'' திகழ் சக்கரத்தார் கேட்டார்.

''வில்லிதாசன் இருக்கிறானே... அவன் கண்ணில்
அகப்பட்டால் துவம்சம் செய்துவிடுவானே? அவனுடைய
ஒரு அறைகூட தாங்க முடியாதே? யானையை அறைந்து
கதிகலக்கியவன் அல்லவா? என்னை அறைந்தால் என்
பிராணன் போய்விடுமே?''

''ஆமாம். அதுவும் வாஸ்தவம்தான்.'' குருவும்
கவலைப்பட்டார். ''ஒன்று செய்கிறேன்.''

''என்ன?'' எல்லோரும் பாய்ந்தார்கள்.

''வில்லிதாசனை ஏதாவது சொல்லி இங்கே நிறுத்தி
விடுகிறேன். இரவோடு இரவாக நீங்கள் பொன்னாச்சி
இருக்கும் இடத்திற்குப்போய் மிக பக்குவமாக அவளுடைய
நகைகளைத் திருடிக் கொண்டு வந்துவிடுங்கள். எவ்வளவு
நகைகள் முடியுமோ, அத்தனை நகைகள் எடுத்து வந்து
விட்டால், நமக்கு உணவுக்காகும். நகைகளை உறையூர்
தாண்டி, எங்கேனும் விற்றுவிட்டு வந்துவிடலாம். நம் மீது
எவருக்கும் சந்தேகம் வராது. யார் திருடர்கள் என்று பிறகு
நாமே விசாரிக்கலாம்.'' குரு சொன்னவுடன் எல்லோரும்
கைதட்டி ஆர்ப்பரித்தார்கள். நிச்சயமாய் செய்து
முடிக்கிறோம் என்று சொன்னார்கள்.

இரவு வந்ததும், வில்லிதாசனை ஸ்ரீராமானுஜர்
நிறுத்திக் கொண்டார். ''கால் குடைச்சலாக இருக்கிறது,
பிடித்துவிடு வில்லிதாசா'' என்றார்.

எப்பேர்ப்பட்ட பாக்கியம் என்று அவர் கால்களை
மெல்ல அழுத்திப் பிடித்துவிட ஆரம்பித்தான்.
தொடையிலிருந்து நிதானமாக இறுக்கி, இறுக்கி ரத்தத்தை
உள்ளங்கால் வரை கொண்டு வந்தான்.

''காலையில் எத்தனை மணிக்கு எழுந்திருக்கிறாய்?''

''விடியலில் முதல் ஜாமத்தில் எழுந்து விடுவேன்.
விடிவெள்ளி உதயமாவதற்கு முன்பு விழித்துவிடுவேன்.''

''ஏன் அவ்வளவு சீக்கிரம் எழுந்திருக்க வேண்டும்?''

''அப்போது எழுந்து உறையூருக்குப் போனால்தான்
விடியல் நேரம் வீரர்களுக்குப் பயிற்சி கொடுக்க சரியாக
இருக்கும். ஒரு பத்து வீரர்கள் சேர்ந்திருக்கிறார்கள்.
நாலூரான் போய் வேறு ஒரு தளபதி அங்கு வந்த பிறகு நல்ல

இளைஞர்கள் எனக்கு அருகே வந்து மல்யுத்தம் பயில்கிறார்கள். அவர்களுக்காக விடியலில் போய் விடுகிறேன்.''

''அப்படியா? பிறகு எத்தனை மணிக்கு -?''

''உச்சிப் பொழுதில்... மேற்கே சூரியன் சரிகிற நேரத்தில் கிளம்பி ஆறு தாண்டி ஸ்ரீரங்கத்திற்கு வந்து விடுகிறேன்...''

''பிறகு...?''

''உணவு எடுத்துக் கொள்கிறேன்.''

''பிறகு...?''

''நம்முடைய பொன்னாச்சியின் ஆடல், பாடல்களைக் கவனிக்கிறேன். அதற்கு உதவி செய்கிறேன்.''

''பிறகு...?''

''அவள் நடனமாட கோயிலுக்கோ, அல்லது மண்டபங்களுக்கோ, வேறு மடங்களுக்கோ போகிறாள். அங்கு போய் அவளுக்குத் துணையாக இருக்கிறேன்.''

''பிறகு...?''

''இரவு கடைசி ஜாமத்தில் அவளோடு திரும்பி வருகிறேன்.''

''பிறகு...?''

''சிறிது நேரம் கண்மூடி அவளுக்கருகே அமர்ந்திருக்கிறேன். நடனமாடியவள் கால்களையும், கைகளையும் பிடித்து விடுகிறேன். தலையைத் தடவி அவளைத் தூங்கச் செய்கிறேன்.''

''பிறகு...?''

''முதல் ஜாமம் ஆரம்பித்துவிடும். கிளம்பிப் போய் விடுகிறேன்.

''எப்போது தூங்குகிறாய், வில்லிதாசா?''

''நான் உறங்குவதே இல்லை ஐயா.''

''என்ன...? உறங்காமல் எப்படி இருக்க முடிகிறது?''

''தெரியவில்லை, ஐயா.''

திருட்டுக்கு அனுப்பிய இரண்டு சீடர்களைத் தவிர மற்ற சீடர்கள் ராமானுஜரையும், வில்லிதாசனையும் சுற்றி அமர்ந்திருந்தனர். ராமானுஜர் திடுக்கிட்டு எழுந்தார்.

''இது நேற்று மட்டும்தானா, இல்லை பல நாட்களாக இவ்விதமே தொடர்கிறதா?''

''நீங்கள் அரங்கன் தரிசனம் காட்டியதிலிருந்தே நான் உறங்கவில்லை. உறங்க முடியவில்லை. உறங்க வேண்டிய அவசியம் எனக்கு எதுவும் இல்லை. நான் நலமாகத்தான் இருக்கிறேன். ஐயா, உறங்காதது எனக்கு எந்த விதத்திலும் சிரமமாக இல்லை. சோழ மன்னனிடம் கைநீட்டி சன்மானம் வாங்குவதால், அதற்குண்டான பொறுப்புகளை நான் நிறைவேற்றுவதற்கு உறையூர் போகவேண்டியிருக்கிறது. பொன்னாச்சி என்கிறவளுக்கு, மனைவி என்கிற ஸ்தானத்துக்குரிய மதிப்பைக் கொடுத்து, புருஷனாய் செய்ய வேண்டிய கடமைகளை நான் செய்ய வேண்டியிருக்கிறது. பிறகு, உங்களோடு வந்து பேசி சந்தோஷித்து, உங்கள் பாததரிசனம் பெறவேண்டிய சிஷ்ய பாவம் எனக்கு ஏற்படுகிறது. இதற்கிடையே, உறங்குவதற்கு என்று எனக்கு நேரம் இல்லை. நான் உறங்க விரும்பவும் இல்லை.''

''எத்தனை நாள்?''

''கிட்டத்தட்ட ஆறேழு மாதங்கள் ஆகின்றன, நான் உறங்கி.''

''இப்படி தம்பி லட்சுமணரை அல்லவா சொல்வார்கள், உறங்கவே உறங்காதவன் என்று? இராமபிரானைப் பின்பற்றி பலா, அதிபலா என்கிற மந்திரத்தினுடைய

மகிமையினால் உண்ணவும் உண்ணாமல், உறங்கவும் உறங்காமல் அந்தப் பிள்ளை லட்சுமணன் அல்லவா இராமனைக் காவல் காத்ததாகச் சொன்னார்கள்.''

''ஐயா, எனக்கு உறக்கம்தான் வரவில்லையே தவிர, பசி நன்கு எடுக்கிறது. நன்கு சாப்பிடுகிறேன். தேவையான நேரத்திற்கு நல்ல உணவும் இறையருளால் கிடைக்கிறது. ஆகவே, என்னை லட்சுமணப் பெருமாளோடு ஒப்பிடாதீர்கள். நான் சாதாரண மனிதன்.''

''இல்லை. நீ உறங்காதவன். உறங்கா வில்லிதாசன். லட்சமணப் பெருமாள் மாதிரி ஏன் சொல்லக் கூடாது? பிள்ளை... பிள்ளை... என்று லட்சுமணப் பெருமானை மிகப் பிரியமுடன் என் குருநாதர் சொல்வார். அந்தப் பிள்ளை எவ்வளவு தொண்டு செய்தது என்று ஆச்சரியப் படுவார். எனவே, நான் இனிமேல் உன்னைக் கூப்பிடும் போது, வெறும் வில்லிதாசா என்று கூப்பிடமாட்டேன். உறங்காத வில்லிதாசன்... என் பிள்ளை... நம் பிள்ளை... பிள்ளை உறங்கா வில்லிதாசன் என்று கூப்பிடப் போகிறேன். பிள்ளை உறங்காவில்லிதாசன் வாழ்க! வாழ்க.''

வில்லிதாசனைப் பார்த்துக் கை கூப்பினார்.

குருவின் கருணை காட்டாற்று வெள்ளம் போல் அந்த மல்லன் மீது பாய்ந்தது. மல்லன் கைகூப்பினான்.காலில் விழுந்தான். குறுகி அவர் எதிரே நின்றான். ''பிள்ளை உறங்காவில்லிதாசா, என் கை, கால்களைக் சற்றுப் பிடித்து விடு...'' அவர் மறுபடி கட்டளையிட, அவன் மிக மிருதுவாய் அவருக்குக் கால் பிடித்துவிடலானான். அருகே உள்ள வைணவர்கள் குருவையும், சீடனையும் வியப்போடு பார்த்துக் கொண்டிருந்தார்கள். அவர் ஆழ்ந்த உறக்கத்தில் இருப்பது போல் நடித்தார்.

திருடப் போன இரண்டு சீடர்களும், உறங்கா வில்லிதாசன் வீட்டுக் கதவை மெல்லத் திறந்தார்கள். உறங்கா வில்லிதாசன் எப்போது வேண்டுமானாலும் வீட்டுக்கு வரலாம் என்பதால் பொன்னாச்சி கதவுகளுக்குத் தாழ்போடுவதில்லை. கதவுகளை வெறுமே சார்த்தி வைத்திருப்பாள். அதையும் தவிர பெரிய சொத்துக்கள் எதுவும் வீட்டில் இல்லை. எல்லாவற்றையும், மடத்துக்குக் கொடுத்தாகி விட்டது. பொன்னாச்சியை இப்போது யாரும் சுற்றிக் கொண்டு அழகி, அழகி என்று பார்ப்பதில்லை. மக்கள் பொன்னாச்சியை மிக மரியாதையாகக் கவனிக் கிறார்கள். எனவே, ஸ்ரீரங்கத்தில் கள்வர் பயமோ, கயவர் பயமோ அறவே இல்லை. பொன்னாச்சி தைரியமாகக் கதவுக்குத் தாளிடாது வீட்டின் கூடத்தில் கட்டில் போட்டுப் படுத்திருந்தாள்.

திடுமென்று யாரோ உள்ளே வருவது போல அவளுக்கு ஒரு உணர்வு ஏற்பட்டது. தலை தூக்கிப் பார்க்கலாம் என்றெண்ணியபோது, மெல்லிய பேச்சுக் குரல் கேட்டது. பேச்சுக் குரலிலிருந்து, அவர்கள் ராமானுஜரின் சீடர்கள் என்பதை உடனடியாகப் புரிந்து கொண்டாள்.

''பொன்னாச்சி சிலம்பு அணிந்திருக்கிறாளா என்று பார்?''

''ஆமாம், அணிந்திருக்கிறாள்.''

''இப்படிச் சிரமப்பட்டு குருவின் சொற்படி திருடுகிறோமே. இது நவரத்தினமாக இல்லாது போனால் வீணல்லவா? வெறும் வெள்ளிக்கு பெரிய விலை கிடைக்காதே?''

''இல்லை, நவரத்தினம்தான் என்று பொன்னாச்சியே பலமுறை சொல்லியிருக்கிறாள். அவள் நடனமாடுவதும்,

நடிப்பதும் அவள் உடம்பு பொலிவுடன் இருப்பதற்கும் நவரத்தினங்கள் உள்ளே வைத்திருக்கின்ற இந்த சிலம்புதான் காரணம் என்று மற்ற பெண்களிடையே பேசுவதை நான் கேட்டிருக்கிறேன்.''

''சரி... இருட்டு அதிகமாக இருக்கிறது. மெல்லப் போய் ஒரு காலில் உள்ள சிலம்பபைக் கழட்டு. நான் வாசல் பக்கம் காத்திருக்கிறேன். பொன்னாச்சி விழித்து விடாமல் நிதானமாக வேலை செய்!'' ஒருவன் கட்டளையிட, மற்றொருவன் பொன்னாச்சியின் கால்களுக்கு அருகே வந்தான். சிலம்பைத் தொட்டு வலுவோடு பிரித்து காலிலிருந்து உருவி எடுத்துக் கொண்டான். எட்டிப் பார்த்து இடது கைவளையல்களைக் கழட்டிக் கொண்டாள். மோதிரத்தை உருவிக் கொண்டான். தோள் பக்கம் உள்ள வங்கி என்கிற ஆபரணத்தைப் பிரித்து எடுத்துக் கொண்டான். காதுபக்கம் உள்ள வைரத் தோட்டை திருகைக் கழட்டி உருவிக் கொண்டான். மேல் காதுகளில் இருந்த, சிறிய, சிறிய பூக்களைக் குறடால் பதவிசாக நறுக்கி எடுத்துக் கொண்டான். ஒருபக்க மூக்குத்தியும் மிகக் கவனமாக எடுக்கப்பட்டது. அவன் நகைகளை மற்றவனுக்குக் காண்பித்தான்.

''சரி... மற்ற நகைகள்...?'' என்று அவன் கேட்க, ''அவள் ஒருக்களித்துப் படுத்திருக்கிறாள். மற்ற நகைகளைக் கழட்ட முடியாதே?'' என்று கழட்டியவன் சொன்னான்.

பொன்னாச்சி, ராமானுஜரின் சீடர்களுக்கு எதற்கோ நகைகள் வேண்டும் போலிருக்கிறது. குருவின் கட்டளையால் இதை எடுப்பதாக அவர்கள் சொல்கிறார்கள். எனவே இடப்பக்க நகைகளை அவர்கள் எடுத்துக் கொண்டது போல, வலப்பக்க நகைகளையும் அவர்கள் எடுத்துக் கொள்ளட்டும் என்று புரண்டு படுத்தான். அவள்

புரண்டு படுக்க, சீடர்கள் இரண்டு பேரும் சரக்கென்று வாசலுக்கு வந்தார்கள்.

வாசலில் தொலை தூரத்தில் தீப்பந்தங்களோடு காவலர்கள் வர, அடுத்த வீட்டு சுவர்ப்பக்கம் ஒதுங்கினார்கள். தீப்பந்தம் அருகில் வர, இருளில் வேகமாக நடந்தார்கள். வடக்கு உத்தரவீதி திரும்பி, கிழக்கில் நுழைந்தார்கள். தபதபவென்று ஓட்டம் எடுத்தார்கள். அதிராமல், சத்தமெழாமல், மான்களைப் போல, மிக வேகமாய் அவர்கள் மடம் நோக்கி ஓடினார்கள்.

பொன்னாச்சி எழுந்து உட்கார்ந்து கொண்டாள் வாசலுக்கு வந்து யார் என்று தேடினாள். கண்ணாடி முன்பு தன்னைப் பார்த்துக் கொண்டாள். அவள் இடப்பக்க நகைகள் முழுவதும் திருடுபோயிருந்தன. அவள் திண்ணையில் அமர்ந்து புருஷனுக்காகக் காத்திருந்தாள்.

மடத்தின் வாசல் பக்கம் நிழலாடிற்று. போனவர்கள் வெற்றியோடு வந்துவிட்டார்கள் ராமானுஜருக்குச் சமிக்ஞையின் மூலம் தெரிவிக்கப்பட்டது.

''பிள்ளை உறங்கா வில்லிதாசா...'' ராமானுஜர் வாய் நிறைய அழைத்தார். மறுபடியும் வில்லிதாசன் கைகூப்பினான்.

''நீ போய் வா... போய் சற்றேனும் இன்று நீ ஓய்வெடுத்துக் கொள்...'' என்று விடை கொடுத்தார்.

பிள்ளை உறங்கா வில்லிதாசன் கைவீசி தன் வீடு நோக்கி நடந்தான். திருடியவர்கள் தங்களுடைய திருட்டு பொருளை ராமானுஜருடைய காலில் பெருமிதத்தோடு சமர்ப்பித்தார்கள். ஸ்ரீ ராமானுஜர் வேறு இரண்டு சீடர்களை உற்றுப் பார்த்து, ''நம் பிள்ளை உறங்கா வில்லிதாசனைப் பின்தொடர்ந்து போங்கள். அவன் வீட்டில் என்ன

பேசுகிறான். என்ன கலவரம் நடக்கிறது என்பதை வேடிக்கை பார்த்து வந்து, ஒரு வரி விடாமல் எனக்குச் சொல்லுங்கள்'' என்று கட்டளையிட்டார்.

பிள்ளை உறங்கா வில்லிதாசனை அந்த சீடர்கள் பின்தொடர்ந்தார்கள். வில்லிதாசன் வீட்டிற்குள் நுழைந்தான். அவனை பொன்னாச்சி எதிர்கொண்டு வரவேற்றாள். விளக்கேற்றினாள். ''இதோ பாருங்கள்...?'' என்று தன்னைக் காட்டினாள்.

''என்ன, ஒரு பக்க நகைகளைக் காணாமே?''

''குருவின் சீடர்கள் இங்கு வந்திருந்தார்கள்.''

''பிறகு...?''

''அவர்கள் உள்ளே திருடர்களைப் போல் நுழைத்தார்கள்.''

''பிறகு...?''

''குரு கட்டளையிட்டதால் நகைகளைத் திருடுவதாகத் தங்களுக்குள் பேசிக்கொண்டு, என் இடப் பக்க நகைகள் முழுவதும் எடுத்துக் கொண்டார்கள்.''

''ஏன்...?''

''நான் ஒருக்களித்துப் படுத்துக் கொண்டிருந்தேன். ஆகவே, நானறியாமல் அந்த நகைகளை அவர்கள் திருடி சென்றார்கள்.''

''நீ வலப்பக்கம் இருக்கும் நகைகளையும் கழட்டி கொடுக்க வேண்டியதுதானே?''

''நான் வலப்பக்கம் புரண்டு படுத்தேன். எடுத்துக் கொள்ளட்டும் என்று நினைத்தேன். ஆனால், நான் விழித்துக் கொண்டு விட்டேன் என்று அவர்கள் ஓடிவிட்டார்கள். நான் வெளியே வந்து பார்க்கும்போது வெகு தொலைவே போய் திரும்பிவிட்டார்கள்.''

''முட்டாள்தனம் பொன்னாச்சி. இந்த நகைகள் நமக்கெதற்கு? அவர்கள் உன் காலைத் தொட்டவுடனே எழுந்து எல்லா நகைகளையும் கழட்டி அவர்களிடம் ஒரு துணியில் முடிந்து கொடுத்திருக்க வேண்டாமா? பொன்னாச்சி, மிகப் பெரிய தவறு நீ செய்து விட்டாய். அவர்களைத் திருடும்படியாக நீ ஏன் தூண்டி விட்டிருக்கிறாய். அவர்களுக்கு அள்ளிக் கொடுக்க உனக்கு ஏன் மனமில்லை? பொன்னாச்சி! இந்த நகைகள் முக்கியமே இல்லை. உன்னுடைய அழகு, உன்னுடைய அன்பு, உன்னுடைய அறிவு இவை எனக்குப் பெரிய சொத்துக்கள். குருவினுடைய கருணையால் நீயும், நானும் எவ்வளவு ஆனந்தமாகக் குடித்தனம் செய்ககிறோம்? நமக்குள் ஒரு சிறிதளவுகூட மனப்பிரிவே இல்லாததற்கு குருதானே காரணம்? உன்னையும் பக்குவப்படுத்தி என்னையும் பக்குவப்படுத்தி, நம்மைச் சுற்றியுள்ளவர்களையும் பக்குவப்படுத்துகின்ற குருவுக்கு நம்மால் இந்த சிறிய உதவியைச் செய்யக்கூடாதா? இந்த நகைகளை மூட்டையாகக் கட்டி, அவர் வீட்டு வாசலில் போட்டுவிட்டு வந்துவிடலாம். கழட்டிக் கொடு'' என்று வில்லிதாசன் சொல்ல, பொன்னாச்சி நகைகளை கழட்டினாள்.

பின்னே வந்து ஒட்டுக் கேட்டவர்கள் மடமடவென்று அந்த இடத்தைக் காலி செய்தார்கள். நேரே மடத்துக்கு வந்தவர்கள், ஸ்ரீராமானுஜரிடம் விஷயம் சொன்னார்கள்.

''ஒரு சாண் வேட்டி போனதற்கு என்னவெல்லாம் கத்தினீர்கள்? எப்படியெல்லாம் சண்டை போட்டீர்கள்? வேதம் சொல்கிற வாய், பிரபந்தம் சொல்கிற வாய் எத்தனை இழிவான வார்த்தைகளைக் கொட்டியது? இடப்பக்கம் இருக்கின்ற நகைகளை நீங்கள் மடத்திற்காக திருடுகிறீர்கள் என்று தெரிந்ததும், வலப்பக்கம் திரும்பிப் படுத்துக்

கொள்ள முயன்றாளே ஒரு பொன்னாச்சி தேவரடியார். அவர்களை விடவா நீங்கள் உயர்ந்தவர்கள்? தன்னுடைய மனைவி வலப்பக்கம் திரும்பி நகைகளைக் கொடுக்க முற்பட்டது தவறு... அதைக் கழட்டி அல்லவா கொடுக்க திருக்க வேண்டும்? அவைகளைக் குருவுக்குக் காணிக்கை யாக அல்லவா வைத்திருக்க வேண்டும்? இப்படித் திருடும்படி வைத்துவிட்டாயே என்று கோபித்துக் கொண்டானே அவள் புருஷன் உறங்கா வில்லிதாசன்... அவன் குலத்தைவிடவா உங்கள் குலம் உயர்ந்தது? அவன் மனதைவிடவா உங்கள் புத்தி உயர்ந்தது? அவன் விடவா உங்கள் வாழ்க்கை உயர்ந்தது? ஒருக்காலும் இல்லை. நான் அவன் கையைத் தொட்டுக் கரையேறாமல் வேறு யார் கையைத் தொடுவேன்? அவனைவிட பரிசுத்தர் உண்டா? அவனைவிட உயர்ந்த பிராமணர் உண்டோ? அவனைவிட வேதம் அறித்தவன் உண்டோ? அவனைவிட இறை மாண்பு உள்ளவன் உண்டோ? அந்த பொன்னாச்சியைவிட உத்தமி இந்த ஸ்ரீரங்கத்தில் உண்டோ? அவர்களை நீங்கள் வலம் வந்து சேவிக்க வேண்டும் அல்லவா? அவனைத் தாழ்ந்தவன் என்றும், அவளைத் தேவரடியார் என்றும் இழிவாகப் பேசுகிறீர்களே...? பிறப்பாலா ஞானம் வருகிறது? குணத்தால் வருகிறது... உங்கள் குணம்தான் உங்கள் பிறப்பைக் காட்டிக் கொடுக்கிறது. நீங்கள் பொறாமைப்பட்டால் அந்தணர் குலமல்ல... நீங்கள் ஆத்திரப்பட்டால் வைணவக் குலமல்ல, நீங்கள் அசூயையில் மிதந்தால் மனிதரே அல்ல. எனவே இனிமேலும் பொன்னாச்சி பற்றியும் உறங்கா வில்லிதாசன் பற்றியும் குறை சொல்லாது அவனுக்குப் பின்னே அமைதியாக இருக்கப் பழகுங்கள்.'' ஸ்ரீராமானுஜர் எல்லா சீடர்களுக்கும் உரக்கக் கூறினார்.

வீட்டு வாசலில் ஒரு மூட்டையில் பொன்னாச்சியின் ஆபரணங்கள் இருந்தன. அந்த ஆபரணங்களை மடம் வாங்கிக் கொண்டது. பொன்னாச்சியையும் உறங்கா வில்லிதாசனையும் அந்த மடமும் ஸ்ரீரங்கமும் தலையில் வைத்துக் கொண்டாடின. ஒவ்வொரு நாளும் பிள்ளை உறங்காவில்லதாசனும், பொன்னாச்சியும் குருவினுடைய மகிமையை உணர்ந்து, அவருடைய அன்பை அள்ளி, அள்ளிப் பருகினார்கள்.

''வில்லிதாசா... உன்மீது நான் பிரேமை கொள்வதற்கு ஒரு சுயநலமான காரணம்கூட இருக்கிறது.'' ராமானுஜர் வில்லிதாசனிடம் பேசினார்.

''உங்கள் சுயநலமா? அது எப்படி இருக்க முடியும்? நீங்கள் வைணவத்தைத் தவிர, வேறு எதையும் சிந்திப்பதேயில்லையே? நீங்கள் சுயநலம் என்று சொன்னால் யார் நம்புவார்கள்?'' வில்லிதாசன் அடக்கமாக பதில் சொன்னான்.

''வில்லிதாசா... வைணவத்தை நான் ஒருவன் மட்டும் காப்பாற்றிவிட முடியாது. அவரவர் தம்முடைய கடமையைச் சரிவரச் செய்தாக வேண்டும். நீயும் வைணவத்திற்காக ஒரு உதவி செய்ய வேண்டும்.''

''கட்டளையிடுங்கள்... காத்திருக்கிறேன்.'' ஸ்ரீராமானுஜரின் கேள்விக்கு வில்லிதாசன் கைகட்டி பதில் சொன்னான்.

''இங்குள்ள வைணவ இளைஞர்கள் ஒரு ஐம்பது பேரைத் தேர்ந்தெடுத்து அவர்களுக்கு வெகுதூரம் நடக்கும்படி பயிற்சி கொடு, ஒருவேளை ஸ்ரீரங்கத்திற்கு யவனவர்களால் ஏதும் துன்பம் ஏற்பட்டால், அரங்கனை அவர்கள் தலையில் சுமந்து, இந்தியாவின் தென்கோடிக்கு நடந்து போக அவசியமுண்டாகலாம். காடுகளில் ஒளிந்து

பல காலம் வாழலாம். அப்படி கிடைத்த தாவரங்களை சாப்பிட்டு உயிர் வாழவும், வெயிலோ, மழையோ, பனியோ பாராமல் அரங்கனுடைய உற்சவச் சிலையைத் தூக்கிக் கொண்டு, வெகுதூரம் நடக்கவும், வில்லிதாசா... மல்லன் என்கிற முறையில் இவர்களுக்குப் பயிற்சி கொடு...''

வில்லிதாசன் சரியென்று தலையசைத்தான். உயரமும், அகலமும், திடமும், மனஉறுதியும் மிக்க வைணவ இளைஞர்களைத் தேர்ந்தெடுத்தான். அவர்களைச் சோதித்து தனித்தனியே தயார் செய்தான். பலமுள்ளவர்களாக்கினான். இடைவிடாது, அவர்கள் நடந்து போகும் வண்ணம், அப்படி நடப்பதை அவர்கள் அடுத்த தலைமுறைக்கு சொல்லி கொடுக்கும் வண்ணம் தயார் செய்தான். ஒருவேளை யவனர்களால், அரங்கருக்கு ஆபத்து வந்தால் அரங்கனைத் தலையில் சுமந்து போக, எனக்கு உத்தரவிட வேண்டும் என்று ஸ்ரீராமானுஜரைக் கைகூப்பிக் கேட்டுக் கொண்டான். அதற்கு அவசியம் இருக்காது என்று ராமானுஜர் பதில் சொன்னார்.

வில்லிதாசன், யவனர்கள் ஸ்ரீரங்கத்திற்கு வர மாட்டார்கள் என்று அதற்குப் பொருள் கொண்டான். ஆனால், யவனவர்கள் வருவதற்கு முன்பே, வில்லிதாசன் தள்ளாமையால் மரணம் அடைந்தான். அவன் இறந்த இரண்டாம் நாள், பொன்னாச்சியும் உயிர் துறந்தாள். அவன் தயார் செய்த வைணவ இளைஞர்கள் யவனர்கள் ஸ்ரீரங்கத்துக்குள் நுழைந்தபோது, அரங்கனைத் தூக்கிக் கொண்டு, ஊர் ஊராகப் பயணப்பட்டார்கள். அரங்கனை யவனர்கள் தொடாவண்ணம் காப்பாற்றினார்கள். காடுகளுக்குள் அரங்கனை மறைத்து வைத்து, கிடைத்த தாவரங்களை உண்டு வாழ்ந்தார்கள். ஸ்ரீரங்கம் என்கிற

நகரத்தைத்தான் யவனர்களால் கைப்பற்ற முடிந்தது. அரங்கனுடைய கோயிலைத்தான் அவர்களின் ஆளுமைக்குக் கீழ் கொண்டு வர முடிந்தது. உள்ளே அரங்கர் இல்லை, அந்த அரங்கரையும், ஸ்ரீதேவி, பூதேவியையும் வைணவர்கள், யவனர்கள் பார்க்கக்கூட முடியாதபடி வெகு தூரம் எடுத்துப் போய்விட்டார்கள்.

இந்து மதம் அந்நியர்களால் சீரழிக்கப்படாமல், காப்பாற்றப்பட்டதற்கு பிள்ளை உறங்கா வில்லிதாசன், பொன்னாச்சி போன்ற அற்புதமான மனிதர்கள்கூட காரணம்.

அடுத்த முறை, அரங்கனுடைய கோயிலுக்குப் போகும்போது, காவிரிக்கு நடக்கும்போது, கொள்ளிடத்தில் கரையில் நிற்கும்போது, அரங்கன் சந்நிதியிலும், தாயார் சந்நிதியிலும் கைகூப்பும்போது, பிள்ளை உறங்கா வில்லிதாசனையும், பொன்னாச்சியும் நினைத்துக் கொள்ளுங்கள். எங்கெல்லாம் அவர்கள் நின்றிருக்கக் கூடும், அமர்ந்திருக்கக் கூடும் என்று உள்ளுணர்வால் தேடுங்கள். வில்லிதாசா, பொன்னாச்சி என்று மண்டபங்களில் கூவுங்கள்.

தெளிவும், வெண்மையான மனதும், உறுதியும், அன்பும் மிக்க அந்த தம்பதிகள் வைஷ்ணவத்தின் சிறப்புக்குக் காரணமாக இருந்தார்கள். நல்ல வைஷ்ணவர்களுக்கு எடுத்துக்காட்டாக இருந்தார்கள். வைஷ்ணவம் என்பது ஒரு மதமல்ல. அது ஒரு நிலை. இறைவனிடம் முற்றிலும் தன்னை இழந்துவிட்டு, தானல்லாது இருக்கும் நிலை. தன்னை இறைவனுக்குத் தந்தவனே வைஷ்ணவன். வேறு யாரும் இல்லை.

முற்றும்